புதிய சமுதாயம்

KDN 10509 ஆசிரியர்: முருகு சுப்பிரமணியன் 25-5-1977



sunquick® !


சிக்கனத்திற்கெனக் கெட்டியாக்கப்பட்டது



ஒரேயொரு வாய் அருந்தியதுமே சன்குயிக்கின் வேறுபாட்டை உணர்வீர்கள். சுத்தமான பழச்சாறு... இன் சுவையுடன் கெட்டியாக்கப்பட்டது. ஒவ்வொரு போத்தலிலிருந்தும் ஏராள மானோருக்குப் பரிமாறலாம். பருகிமகிழ்வீர் சன்குயிக்கை. இறக்குமதி செய்யப்பட்ட முக்கியமான 6 இன்சுவைச் சாறுகளிலிருந்து தேர்ந்தெடுப்பீர்.

ஆரஞ்சு மேண்டரின், கருப்புத்திராட்சை, எலுமிச்சை, ஆப்பிள், கிரேப் புருட். டென்மார்க்கிலிருந்து வருகிறது சன்குயிக். அதில் வைட்டமீன்கள் Aயும் Cயும் செறிந்துள்ளன.

ஒரு கிளாஸ் பானம் கலக்க, இதர பழச்சாறு தேவைப்படும் அளவில் மூன்றில் ஒரு பங்கு இன் சுவைமிக்க சன்குயிக்கே போதுமானதாகும். சன்குயிக் அருந்தி உடல் திடம் பெறுங்கள்.



Sole Agent

KUMPULAN BARKATH TRADING DIVISION Penang • Butterworth • Kulim • Kuala Lumpur • Johor Baharu • Singapore

தொண்டு

முரசு நெடுமாறன்

அமுதத்தை நஞ்சாக்கி அருந்தி நாளும்
அழிகலத்தில் செலவுமேற் கொள்ளுகின்ற
இமைதிறவா சமுதாயம் பெற்றெடுக்க
இவ்வுலகில் நடமாட வந்தேன்! இங்கே
அமைந்திருக்கும் வாழ்வுநலம் நோக்கும் போதில்
ஐயகோ, என்குலந்தான் செல்லும் பாதை
உமியாக்கி எமையழிக்கும் பாதை என்பதை
உணர்ந்தும் நான் என்செய்வேன்!
என்ன செய்வேன்!

தெருவோரம் நடக்கையிலே காணுகின்றேன்!
திரைப்படத்து மேடையிலே நோக்குகின்றேன்!
தருநிழலில் சீட்டாடி அழியும் காட்சி
தவறாமல் பார்க்கின்றேன்! உளம்வேகின்றேன்!
அறவோர்கள் உரைநிகழ்த்தும் அரங்கந் தன்னில்
அடங்காத தவளைகளோ இக் கலைமன்றத்தில்
நாகலையே கைதட்டி வரவேற்கின்ற
கச்சகளாய்க் காண்கின்றேன்! துடிக்கின்றேனே!

முன்வைக்கும் அண்ணன்கால் தன்னைப் பார்த்து
முட்டுகின்ற தம்பியர்க்குக் குறைவே யில்லை!
ஒன்றிணைத்துப் புதுவாழ்வு காட்ட முந்தி
ஒருதலைவன் வந்தானேல் அவனை வீழ்த்த
எண்ணற்ற வேற்றுமைகள் புகுத்தி மாய்க்கும்
இதயமிலாப் பதர்களுக்கிங் களவே யில்லை!
இன்னலை பெண்ணிபெண்ணி உருகலன்றி
எவ்வழியும் எவ்வகையும் தோன்றவில்லை

மன்பதையைத் தீயாக்கிக் குளிர்காய் வோரும்
வளமான உரமாக்கி மலரா வோரும்
என்கண்ணில் படுகின்றார்! நானோ அந்த
எலிகளையே மதித்திடுவ தில்லை; யாண்டும்
என்கடனே பணிசெய்தல் என்றும் நோக்கில்
இயலும்வரை தொண்டாற்றி வருவேன்! மண்ணில்
என்சமுதா யத்திற்குக் கிடைப்ப திந்த
எளியோரின் கைகளுக்கும் கிடைத்தி டட்டும்!

NA-8.

வெள்ளத் தனைய மலர்நீட்டம் மாந்தர்தம்
உள்ளத் தனையது உயர்வு — குறள்

புதிய சமுதாயம்

திருவள்ளுவர் ஆண்டு 2008 வைகாசி 12
கம்பம் 1 ஃ (25-5-1977) ஃ குடும்பம் 5.

கேள்விக்கொத்து

மலேசிய இந்தியர் காங்கிரசின் தலைவர்களும், குழுக்களும் அண்மைக் காலத்தில் மிகவும் சுறுசுறுப்பாகச் செயல்பட்டுச் சமூகம் எதிர்நோக்கும் பல்வேறு முக்கிய பிரச்னைகளை அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டு வருவதற்கும் அவற்றுக்கு விரைந்து தீர்வு காண்பதற்கும் முனைந்திருப்பது ஆறுதலும் நம்பிக்கையும் ஊட்டுகிற நிலைமையாகும்.

தொலைக்காட்சி, வானொலி நிகழ்ச்சிகள் மீது சமூகத்தில் நிலவுகிற அதிருப்தி நெடுங்காலமாகத் தீராதிருந்து வருகிற பிரச்னையாகும். அதுகுறித்து முறையான மகஜர் ஒன்றை ம. இ. கா. தேசிய இளைஞர் பகுதி, தகவல் ஒலிபரப்பு அமைச்சரிடம் நேரில் வழங்கி அதுகுறித்து விவாதமும் நடத்தியிருக்கிறது. அதுபோலவே குடியுரிமை கிட்டாமல் ஆண்டுக்கணக்கில் காத்திருக்கின்ற பல ஆயிரம் விண்ணப்பதாரர்களின் பிரச்னைகளையும் முறைப்படுத்தி விரிவான மகஜர் ஒன்றை உள்துறை அமைச்சரிடம் ம. இ. கா. சமர்ப்பித்திருக்கிறது. இந்த இரண்டு மகஜர்களுக்கும் தக்க பலன் விரைவில் கிட்டுமென்று நிச்சயம் எதிர்பார்க்கலாம். சம்பந்தப்பட்ட அமைச்சர்களும் ம.இ.கா. தலைவர்களுக்கு இப்பிரச்னைகளைத் தீர்ப்பதற்கு உறுதிகொடுத்திருப்பதும் குறிப்பிடத்தக்கது.

இப்பொழுது ம. இ. கா. கல்விக்குழு தமிழ்ப்பள்ளிகள் எதிர்நோக்கும் பிரச்னைகளுக்கு ஒட்டுமொத்தமாகத் தீர்வு காண்பதற்குக் கேள்விக்கொத்து ஒன்றை எல்லா ம. இ. கா. கிளைகளுக்கும் அனுப்பிவைத்து ஜுன் மாத இறுதிக்குள் அவற்றுக்கும் பதில்களை அனுப்பும்படி கேட்டிருக்கிறது. ம. இ. கா. கிளைகள் தத்தம் பகுதியிலுள்ள தமிழ்ப் பள்ளிகளின் தலைமை ஆசிரியர்களை அணுகி, அந்தந்தப் பள்ளிகளைப் பற்றிய விவரங்களையும் அவை எதிர்நோக்கும் சிரமங்களையும் எதிர்பார்க்கும் உதவிகளையும் எழுதியனுப்பிவைக்கவேண்டும்.

ஆரம்பப் பள்ளிகளில் பயிலும் இந்திய சமூகக் குழந்தைகளில் ஏறத்தாழ 50 சதவீதம் குழந்தைகள் அதாவது 80 ஆயிரத்திற்கு மேற்பட்டோர் தமிழ்ப்பள்ளிகளில் பயில்கின்றனர். ஆகவே இந்தப் பிள்ளைகளின் கல்வியும் எதிர்காலமும் சீராக மனநிறைவளிக்கத்தக்க வகையில் அமைவதற்கு ம. இ. கா. கல்விக்குழு மேற்கொண்டிருக்கும் இந்தக் கேள்விக்கொத்து முயற்சி நல்ல ஆரம்பமாக அமையுமென்று நம்புகிறோம்.

கட்டிடங்கள், தளவாடங்கள், போதனை வசதிகள், நூல்

புதிய சமுதாயத்தின் புதிய முகவரி

131, ஜாலான் துவாங்கு அப்துல் ரஹ்மான், [2ஆவது மாடி] கோலாலம்பூர் 01–08. தொலைபேசி:80839

நிலையம், ஆசிரியர்களின் தகுதி, உழைப்பு, சத்துணவு போன்ற எத்தனையோ பிரச்னைகளைத் தமிழ்ப் பள்ளிகள் எதிர்நோக்குகின்றன. மற்ற பள்ளிகளுக்கும் இப் பிரச்னைகள் உண்டு என்பதையும் மறுப்பதற்கில்லை. என்றாலும் தமிழ்ப்பள்ளிகளின் மேம்பாடு இந்திய சமூகத்தின் கல்வி முன்னேற்றத்திற்கு இன்றியமையாத ஒன்றாக இருப்பதால் ம. இ. கா. கல்விக்குழு இதில் தீவிர அக்கறை காட்டுவது நியாயமேயாகும்.

இந்த ஆய்வு வெற்றிபெறுவதற்கு நாடெங்குமுள்ள ம. இ. கா. கிளைகள். தேர்தல் பரபரப்புகளுக்கு மத்தியிலும் விரைந்து ஆவன செய்யுமென்று நம்புகிறோம். தமிழ்ப்பள்ளிகளின் பிரச்னைகளுக்கு நீடித்த, நிலையான தீர்வுகாணவேண்டுமானால் இந்த ஆய்வுக்குத் தமிழ்ப்பள்ளிகளின் தலைமையாசிரியர்கள் முழு ஒத்துழைப்பு வழங்குவதும் அவசியமாகும். இதனை வெறும் அரசியல் பிரச்னையாக மட்டும் கருதாமல் சமூகத்தின் வாழ்வுப் பிரச்னையாகவும் கருதி ம. இ. கா. கிளைகளும் தமிழ்ப்பள்ளிகளின் தலைமையாசிரியர்களும் செயல்படுவரென்று எதிர்பார்க்கிறோம்.

ம. இ. கா. கல்விக்குழு சிலாங்கூர் மாநிலக் கல்வியதிகாரிகளுடனும் இந்தப் பிரச்னை குறித்து ஒரு சந்திப்பு நடத்தியிருப்பதும் குறிப்பிடத்தக்கது. இந்தச் சந்திப்பு மூலம் தமிழ்ப் பள்ளிகளின் பிரச்னைகளை அரசாங்கத்தின் உதவியோடு தீர்க்கும் சாத்தியத்தையும் அதற்குள்ள வரம்புகளையும் உணர்ந்திருக்கமுடியும். இத்தகைய சந்திப்புக்களை எல்லா மாநிலங்களிலும் நடத்துவதும் இந்த ஆய்வுக்குத் துணையாக அமையும்.

ஆய்வு மூலம் ஒவ்வொரு தமிழ்ப் பள்ளி எதிர்நோக்கும் பிரச்னைகளை இனங் கண்டுகொள்ள முடியும். அதன்பிறகு அவற்றைத் தீர்ப்பதற்கு முழுமூச்சான முயற்சிகளை மேற்கொள்ளவேண்டும். அரசாங்க உதவியுடன் செய்யவேண்டிய காரியங்களும் இருக்கும்; சமூகம் தானே செய்ய வேண்டிய காரியங்களும் இருக்கும். எல்லாப் பிரச்னைகளையும் உடனே தீர்த்து விடவும் இயலாது. ஒருசில ஆண்டுகள் தொடர்ந்து விடாப்பிடியாக நடவடிக்கைகளை மேற்கொண்டால்தான் தமிழ்ப்பள்ளிகள் அனைத்தையும் சீராக்க இயலும்.

எப்படிப் பார்த்தாலும் இது செய்ய வேண்டிய பணி! ம. இ. கா. கல்விக் குழுவும் கிளைகளும் நடத்துகிற ஆய்வு என்று மற்றவர்கள் ஒதுங்கிவிடக் கூடாது! சமூக நலனில் அக்கறையுள்ள அனைவரும் ஒருங்கிணைந்து செய்யவேண்டிய கல்வித் திருப்பணி இது என்பதை நினைவுபடுத்த விரும்புகிறோம்.

பிரதமரின் அறிவுரை

நாடு சுதந்திரமடைந்த பிறகு பிறந்திருக்கும் இளைய சமுதாயத்திற்குப் பிரதமர் டத்தோ ஹுசேன் ஓன் தேசத்தின் ஒருமைப் பாட்டைக் காப்பதில் அவர்களுக்குள்ள பொறுப்பை வலியுறுத்தி அண்மையில் பேசியிருப்பது எல்லாச் சமூகங்களையும் சேர்ந்த இளைஞர்களின் மனத்தில் நன்கு பதியுமென்று நம்புகிறோம்.

பல்வேறு சமூகங்களுக்கும் இடையில் ஐக்கியம், புரிந்துணர்வு, சகிப்புத்தன்மை, நல்லுறவு ஆகியவை தழைத்து, நிலைத்து நிற்பதன் அவசியத்தை உணர்ந்து இளைஞர்கள் செயல்படவேண்டுமென்று பிரதமர் மிகத் தெளிவாக வலியுறுத்தியிருக்கிறார்.

இந்த ஆண்டு ஆகஸ்டில் நாம் 20ஆவது மெர்தேகா நினைவு விழாவைக் கொண்டாடவிருக்கிறோம். அதனைத் தொடர்ந்து 1957ஆம் ஆண்டில் பிறந்த இளைஞர்கள் சுமார் 2,90,000 பேர் 21 வயது நிறைந்து வாக்களிக்கும் தகுதியைப் பெற்றுவிடுவரென்பதாகவும் நாட்டின் அரசியல் எதிர்காலத்தை நிர்ணயிப்பதில் இந்தப் புதியதலைமுறை பங்கு கொள்ளவிருக்கிறதென்பதையும் பிரதமர் சுட்டிக் காட்டியிருக்கிறார். இந்நிலையில் இளைய சமுதாயம் தேசிய ஒருமைப் பாட்டினைத் தொடர்ந்து கட்டிக் காக்கவேண்டிய பொறுப்பினையும் நன்கு மனத்தில் கொள்ளப் பிரதமரின் அறிவுரை துணை புரிவது உறுதி.

சட்டமன்றத் தேர்தல்கள்

இந்தியாவில் மறுபடியும் தேர்தல் முழக்கம் கேட்க ஆரம்பித்திருக்கிறது. எதிர்பாராத இமாலய வெற்றியை ஈட்டி நாட்டின் ஆட்சிபீடத்தில் அமர்ந்திருக்கும் ஜனதா கட்சி மாநிலச் சட்டமன்றங்களையும் தன வசப்படுத்தி ஏகபோக ஆட்சி நடத்தும் நோக்கத்துடன் சட்டமன்றத் தேர்தல்களையும் நடத்த முனைந்திருக்கிறது.

ஜனதா அலையின் 'சூடு' தணிவதற்குள் சட்டமன்றத் தேர்தல்களையும் நடத்தி முடித்துவிட இந்தியப் பிரதமர் மொரார்ஜியும் மற்ற ஜனதா தலைவர்களும் ஆவல் கொள்வது இயல்பே ஆகும். ஆனால் சட்டமன்றத் தேர்தல்களிலும் ஜனதா இமாலய வெற்றிகளைப்பெறுவது அத்துணை எளிதாக இருக்குமா? பொறுத்திருந்தே பார்க்கவேண்டும்.



படத்தில் காணப்படுவன போன்ற மாட்டு வண்டிகளைப் பார்க்க வேண்டுமானால் நீங்கள் மலாக்காவிற்குத்தான் சென்றாக வேண்டும். ஆமாம், அங்குதான் இத்தகைய மாட்டுவண்டிகள் உள்ளன.

படத்தில் காணப்படும் மாட்டுவண்டி அலங்கார ஊர்வலம், மலாக்காவிலுள்ள குண்டூர் கடற்கரையில் அண்மையில் நடைபெற்ற "பெஸ்தா மலாக்கா" என்னும் கலாசார விழாவில் இடம் பெற்றதாகும்.

பார்த்து மகிழுங்கள்!

— ஸகீ

அட, எல்லா சரிதானுப்பு

பரபரப்பான சிலாங்கூர் ம. இ. கா. தேர்தலைப்பற்றி விருவிருப்பான செய்தி வெளியிட்டிருக்கிறீர்கள்!

—சு. கணேசன், ஜோகூர்பாரு

தங்கமான கத்தரிக்காய்

"பழனி மாமா"வின் தங்கக் கத்தரிக் காயைப் படித்துவிட்டு விழுந்து விழுந்து சிரித்தேன்.

—மு. பொன்னையா, ஈப்போ

காலமறிந்து...

எழுதவேண்டிய பிரச்சினைகளை எழுதவேண்டிய முறையில் தலையங்க மாகத் தீட்டி விடுகிறீர்களே!

—இரா. செல்வராஜு, கோலாலம்பூர்

இதோ சந்தா!

நான் இதுவரையில் எந்தப் பத்திரிகைக்கும் சந்தா கட்டியதே கிடையாது. ஆனால் புதிய சமுதாயத்தின் அமைப்பும், கருத்தும் என்னை ஆர்வத்தோடு சந்தா கட்டத் தூண்டிவிட்டன.

—எஸ். மாரியப்பன், கோலாலம்பூர்

அலைகடலுக்கு அப்பாலும்...

உள்நாட்டு அரசியல் செய்திகளோடு வெளிநாட்டு அரசியல் பிரச்சினைகளையும் எழுதலாமே!

—தமிழரசி, செலயாங் பாரு

புரட்சிக் கவிஞரின் புதல்வர் மடல்.

2.5.77
புதுவை

"புதிய சமுதாயம்" ஏடு
கண்டு களிப்புடன்
பக்கங்களைப் புரட்டினேன்.
[illegible]
[illegible]
[illegible]
கலங்க வைத்தது
இது ஒன்றும் புதிதில்லை.
உண்மை! இருந்தாலும்
"சில மனிதர்கள்" கண்களில்
[illegible]
[illegible]
விட்டுத் தள்ளுங்கள்!
புதிய சமுதாயம். வடிவமும்
[illegible]
சிறப்பாகவே அமைந்திருக்கிறது.
நின்று நிலைத்து நீண்ட
பயன் விளைக்க என் வாழ்த்துக்கள்
[illegible]
நன்றி! [illegible]

வலிவு! பொலிவு!

சிறுகதைகளும் தொடர் கதைகளும் இதழுக்கு வலிவையும் பொலிவையும் தருகின்றன.

—குயவன்குடி ஏ.என்.எம். இக்பால்,
பெட்டாலிங் ஜெயா

தாமதித்தாலும்...

இதழ் சிறிது தாமதித்து வந்தாலும் உள்ளத்தைக் கவர்ந்தது. மலேசிய மொழித் தேர்வு பற்றிய கட்டுரை பயனுள்ளது. சிறுகதைகள், சிந்தனை மேடை போன்றவையும் சுவையாக இருந்தன.

—எம். எஸ். பாலா, லாபுவான்
பாடாங்தோட்டம், பத்துதீகா

நன்றி மறப்பது...

இன்று செய்யும் நன்றியை நாளை மறந்திடும் இந்த இருபதாம் நூற்றாண்டில், இந்தச் சமுதாயத்திற்கென்றே தன்னை அர்ப்பணித்துக்கொண்ட டத்தோ ஆதிநாகப்பன் அவர்களின் படத்தை முன்னட்டையில் போட்டு, அவரை இன்னும் ஒரு சிலர் மறக்கவில்லை என்று தாங்கள் சொல்லாமல் சொல்லி விட்டீர்கள்.

—வேலு. இராமரெட்டி,
சபாய் தோட்டம், காராக்

இன்னும் சுவைக்க ..

சினிமாப் பகுதியை நிறுத்திவிட்டு உண்மைச் சம்பவங்கள், போட்டி, வளரும் எழுத்தாளர் பகுதி போன்றவற்றை ஆரம்பித்தால் இன்னும் சுவையாக இருக்கும்.

—தி. முனியாண்டி, ஈப்போ

ஒன்று நினைக்க...

ஏதோ சாதாரணமாக இருக்கும் என்று நினைத்திருந்தேன்; ஆனால் இதழை வாங்கிப் படித்தவுடன்தான் எவ்வளவு பயனுள்ள பத்திரிகை என்பது புரிந்தது.

—கே. அசோதா, டப்ளின் தோட்டம்,
கரங்கான்

திண்ணமான எண்ணம்

"புதிய சமுதாயம்", வாசகர்களின் இதயத்தைத் தொடுவது திண்ணம்; தொடர்ந்து வெளிவர வேண்டும் என்பது என் எண்ணம்.

—பொன். சுப்பிரமணியம், கோப்பெங்

வேண்டாமே இந்தச் சினிமா!

தமிழ் மக்களின் வளர்ச்சியைப் பெரிதும் பாதிக்கும் சினிமா ஆங்காங்கே இடம்பெறுவதை எண்ணும்போது என் போன்றோர்க்கு மனவேதனையே மேலிடுகின்றது.

சினிமாவைத் தவிர்த்து, தனித்தமிழ் இலக்கியத் திங்களிதழாக வெளிவந்தால் பயன்மிகுந்ததாக இருக்கும்.

—திருமதி சரசுவதி செல்வராசு, சுங்கை

கிடைத்தது ஒரு முத்து

இந்நாட்டில் தோன்றி மறைந்த தமிழேடுகள் பல. இவ்வேளையில் மலர்ந்திருக்கும் "புதிய சமுதாயம்", நம் சமுதாயத்திற்குக் கிடைத்த நல்முத்து ஆகும்.

—இரா. வேலாயுதம், சிகாமட்

வெல்க!

பத்திரிகை அமைப்பு மிக நன்றாகவுள்ளது. இன்னும் தீவிர கவனம் செலுத்தினால் மேலும் சிறப்பாக அமையும்.

படைப்புகள் சிறப்பாக அமைந்து வாசகர்கள் அபிமானத்தைப் பெறட்டும். புதிய முயற்சி வெல்க!

—சி. ராஜப்பா,
["கலைமகள்" துணையாசிரியர்], சென்னை

அறிஞர்களும் எழுதட்டும்

சமூக, பொருளாதார முன்னேற்றத்துக்கு வழிகாட்டும் வகையில் அத்துறைகளைச் சார்ந்த அறிஞர்களின் கட்டுரைகளை மிகுதியாக எதிர்பார்க்கிறேன்.

—இராம. முத்தப்பன்,
சுங்கைப்பட்டாணி

தேவை: பழைய கதை

இன்னும் பல பழைய கதைகளைத் தொடர்ந்து வெளியிடுங்கள். எங்களைப் போன்ற இளம் வாசகர்கள் பழைய கதைகளைப் படிக்க இதன் மூலம் வாய்ப்புக் கிடைக்குமல்லவா?

—எஸ். விஜய். விஜிடாஸ், புக்கிட்
சீடிங் தோட்டம், பந்திங்

பாடல் பெற்ற சிறப்பு

கவிஞர்களுக்கும், கவிதைகளுக்கும் எந்த அளவிற்குச் சிறப்பிடம் தரவேண்டுமோ, அந்த அளவிற்குச் சிறப்பும் மதிப்பும் தந்திருப்பது போற்றுதற்குரியது.

—சாமி மூர்த்தி, கோலாலம்பூர்

ஈடும் இணையும்

புதுப்பொலிவுடன் தமிழக ஏடுகளுக்கு இணையாகப் "புதிய சமுதாயம்" வெளிவருவது குறித்துப் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

—பூவை. ஏ. லட்சுமணன்,
வெசிங்டன் தோட்டம், ரெங்கம்

நீங்காத நினைவு

அமரர் ஆதிநாகப்பன் அவர்களைப் "புதிய சமுதாயம்" ஏற்ற முறையில் நினைவுகூர்ந்துள்ளது.

—வே. மாணிக்கம், பினாங்கு

உண்மையைச் சொல்கிறேன்

"புதிய சமுதாயம்" ஒவ்வோர் இதழையும் தவறாமல் படித்து வருகிறேன். நாளடைவில் நல்ல வரவேற்பைப் பெறும் என்பது உண்மை.

—எம். கே. பூவரசன், சுங்கை பூலோ
புதுக்கிராமம்

தலைப்பில் புதுமை

"பாராட்டியே தீருவேன், குறையே இல்லையா, கண்ணீர்க் கதை"- இப்படி ஒவ்வொரு தடவையும் "வாசகர் கடிதம்" பகுதி புதுமையான தலைப்பில் வெளி வருவது மிகவும் சிறப்பு!

—தாரா. எழிலழகன், சுங்கைவே

"விசுவாசமில்லாமல் கடவுளுக்குப் பிரியமாயிருப்பது அசாத்தியம். கடவுளிடம் அண்டி வருகிறவன், அவர் இருக்கிறாரென்றும் அவர் தம்மை ஆவலாய்த் தேடுகிறவர்களுக்குப் பலன் அளிக்கிறாரென்றும் நம்பவேண்டுமே" (எபிரேயர் 11:6)

நானா வாய்ப்பேச்சு வீரன்?

"மூப்பது ஆண்டுகால ம. இ. கா. வரலாற்றில் முதல் இருபது ஆண்டுகளை எடுத்துக் கொண்டால் இந்திய சமூகம் அரசியல் பிடிப்பை அவ்வளவாகப் பெற்றிருக்கவில்லை என்று கூறலாம். அடுத்த பத்தாண்டுகளில் தான் இந்திய சமூகத்தினரிடையே அரசியல் விழிப் புணர்ச்சி ஏற்பட்டிருக்கிறது. அதற்கு ஓர் எடுத்துக் காட்டு, கடந்த பொதுத் தேர்தலில் ம. இ. கா. வேட்பாளர்களில் ஒருவரைத் தவிர மற்றவர்கள் அனைவரும் வெற்றிபெற்றதாகும். வரும் பத்து ஆண்டுகளில்- 1986க்குள் ம. இ. கா. வைப் பொறுத்தவரையில் யாரை நம்பலாம், யாரை நம்பக்கூடாது, உண்மையாக மக்களுக்குச் சேவைசெய்பவர் யார்; செய்யாதவர் யார் என்பதை உறுப்பினர்கள் அடையாளம் காட்டி விடுவார்கள். இதிலிருந்து இந்தியர்களின் அரசியல் விழிப் புணர்ச்சி படிப்படியாக முன்னேறி வருகிறது என்பதை உணரமுடியும்."

"இந்தியர்களிடையே அரசியல் விழிப்புணர்ச்சி ஏற்பட்டிருக்கிறதா?" என்னும் கேள்விக்கு; நாடாளுமன்ற உறுப்பினரும் சிலாங்கூர் ம. இ. கா. தலைவருமான திரு. சாமிவேலு கூறிய பதில் இது.

இந்த ஆண்டு இதுவரைக்கும், நடைபெற்ற மாநில ம. இ. கா தேர்தல்களில் சிலாங்கூர் ம. இ. கா. தேர்தல் ஒரு பரபரப்பையும் விறுவிறுப்பையும் ஏற்படுத்தியது தெரிந்ததே. அதில் தலைவர் பதவிக்குப் போட்டியிட்டு வென்றிருப்பவர் திரு. சாமிவேலு. அதுமட்டுமன்றி நடைபெறப்போகும் ம. இ. கா தேசிய மாநாட்டில் தேசியத் துணைத்தலைவர் பதவிக்கும் தாம் போட்டியிடப் போவதாக அறிவித்துள்ளார் அவர். ஆகவே அவர் ம. இ. கா. உறுப்பினர்களின் அரசியல் விழிப்பை நிச்சயம் கணித்து வைத்திருக்கத் தானே வேண்டும். அதைத் தெரிந்துகொள்ளவே அந்தக் கேள்வியைக் கேட்டேன்.

மேலும் அவரிடம் கேட்கப்பட்ட கேள்விகளும் அவற்றுக்கு அவர் அளித்த பதில்களும் வருமாறு:


கே: ஒரு சிறந்த அரசியல்வாதி எப்படி இருக்க வேண்டுமென்று நினைக்கிறீர்கள்?

ப: அரசியல்வாதியிடம் தன்னலம் இருக்கக் கூடாது. மக்களுக்கு அப்பாற்பட்டவனாக வாழக் கூடாது. மக்களின் மனோநிலையைப் புரிந்து கொள்பவனாகவும், அவர்களின் இன்ப துன்பங்களில் பங்கு கொள்பவனாகவும் இருக்கவேண்டும். உண்மையைத் திரித்துக் கூறாமல் பிரச்சினைகளுக்குத்தக்க பரிகாரம் காணும் திறமை படைத்தவனாக விளங்கவேண்டும். முடிந்ததை தவறாமல் செய்துவிட வேண்டும்; முடியாததை முடியாது என்று வெளிப்படையாகக் கூறிவிடவேண்டும். தொண்டர்களின் நம்பிக்கைக்குப் பாத்திரமாகவும் அவர்களின் முன்னேற்றத்திற்குத் தன்னைத் தோணியாக்கும் தியாக உணர்வும் அரசியல்வாதியிடம் வேண்டும்.

வெற்றியும் தோல்வியும்

கே: கடந்த பொதுத்தேர்தலில் தங்களுக்கு வெற்றிவாய்ப்பு பிரகாசமானதாக இல்லை எனக் கருதப்பட்ட சுங்கை சிப்புட் தொகுதியிலும், அண்மையில் நடைபெற்ற சிலாங்கூர் மாநில ம. இ. கா. தலைவர் தேர்தலிலும் தாங்கள் வெற்றி பெற்றிருக்கிறீர்கள். அந்த வகையில் ஓர் அரசியல்வாதியின் வெற்றிக்கு அடிப்படையான காரணங்கள் எவை என்பதைக் கூறுங்கள்.

ப: என்னைப் பொறுத்தவரையில், எடுத்த காரியத்தை உறுதியோடு முடிப்பதும், மக்களோடு தனக்குள்ள தொடர்பை நெருக்கமாக்கிக் கொள்வதும், அவர்களின் தேவைகளை நிறைவேற்றுவதும் நம்பிக்கையைப் பெறுவதும் தொண்டர்களைக் கட்டுப்கோப்போடு வைத்திருப்பதும்தான் அரசியல்வாதியின் வெற்றிக்கு முக்கிய காரணங்கள் எனக் கருதுகிறேன்.



வாஷிங்டனில் அதிபர் மாளிகையின் முன்பு தம் துணைவியாருடன் திரு. சாமிவேலு.

கே: ......தோல்விக்குரிய காரணங்கள்...?

ப: அரசியல்வாதி தோல்வியடையப் பல காரணங்கள் உள்ளன. சுயநலத்திற்காக மக்களுக்குத் தவறான பாதையைக் காண்பிப்பது, மக்களுக்காகத்தான் என்று கருதாமல், தனக்காகவே மக்கள் என்று நினைப்பது. திடீர்திடீரென்று சந்தர்ப்பத்திற்கு ஏற்றவாறு பேசுவது, டாம்பீக அரசியல் நடத்துவது, தொண்டர்களைத் தரம் பிரித்துவைப்பது, தற்காலிகமான உணர்ச்சிகளுக்கு மக்களைப் பலியாக்குவது போன்ற காரணங்கள் அவற்றில் முக்கியமானவை

கே: என்னை அரசியலிலிருந்து அழிக்க நினைக்கிறார்கள் என்று அடிக்கடி கூறுகிறீர்களே. தங்களை எதிர்த்துப் போட்டியிட்டால் அது தங்களை அழிக்கவும் ஒழிக்கவும்தான் என்று எப்படிப் பொருள்படும்? போட்டி வளர்ச்சிக்கு அறிகுறி என்று நீங்களே அடிக்கடி கூறியிருக்கிறீர்களே?

ப: என்னை எதிர்த்துப் போட்டியிடுவதைக் கருத்தில் கொண்டு நான் அவ்வாறு கூறவில்லை என்பதை வலியுறுத்திச் சொல்லவிரும்புகிறேன் போட்டி அணியைச் சேர்ந்த சிலர் கையாண்ட பிரச்சார முறை ஜனநாயக முறைக்கு அப்பாற்பட்டது கொஞ்சம் வெளிப்படையாகவே சொல்கிறேன். கீழ்த்தரமான பிரச்சார முறையை அவர்கள் கையாண்டார்கள். அது மட்டுமல்ல வேறு ஒரு மாநிலத்தைச் சேர்ந்த முக்கியமானவர், சிலாங்கூர் மாநிலத்தில் குறிப்பிட்ட ஒருவருக்குப் பிரச்சாரம் செய்தார் நடுநிலையாக இருக்கவேண்டிய தேசிய ம. இ. கா.வின் முக்கிய பொறுப்பாளர்களில் ஒருவர் ஒரு சாராரின் வெற்றிக்கு அல்லும்பகலும் பாடுபட்டார். இதையெல்லாம் பார்க்கும்போது அரசியலின் அடிமட்டத்திலிருந்துகூட என்னை அப்புறப்படுத்த வேண்டும் என்று சிலர் எண்ணமிட்டுத் தீவிரமாகச் செயல்படுவதை என்னால் உணரமுடிகிறது. அதனால்தான் அவ்வாறு சொன்னேனே ஒழிய என்னை எதிர்க்கிறார்களே என்பதற்காகச் சொல்லவில்லை.

சாமிவேலு கேட்கிறார்

கட்சிக்குள் கட்சி

கே: "உங்களுக்குத் துணைத்தலைவர் பொறுப்புக் கொடுக்கப்படாததாலும், துணையமைச்சர் பதவிக்குப் பரிந்துரைக்கப்படாததாலும் தான் நீங்கள் கட்சிக்குள் கட்சி நடத்துகிறீர்கள்?" என்று தங்களைப் பற்றிக் கூறுவோருக்குத் தாங்கள் தரும் பதில் என்ன?

ப: கட்சிக்குள் கட்சி நடத்துகிறேன் என்போர் என்ன அர்த்தத்தில் கூறுகிறார்கள் என்று விளங்கவில்லை. நான் மேற்கொள்ளும் நுட்பங்கள், துரித நடவடிக்கைகள், பிரச்சினைகளை அணுகும் முறைகள், நியாயமெனப் பட்டதை எவர் முன்பும் எடுத்துச் சொல்லும் துணிவு -இவை மக்களிடையே எனக்கு உண்டாக்கும் மதிப்பைப் பார்த்துத்தான் நான் கட்சிக்குள் கட்சி நடத்துவதாகக் கூறுகிறார்கள் என நினைக்கிறேன். ம. இ. கா. தேசியத் தலைவரின் கீழ உதவித்தலைவராக இருக்கும் நான், சிலாங்கூர் ம.இ.கா. தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட நான் எப்படி கட்சிக்குள் கட்சி நடத்துவது?

. துணையமைச்சர், துணைத்தலைவர் போன்ற பதவிகளுக்காக நான் ஏங்கியதுமில்லை; ஏங்கப்போவதுமில்லை. நியமிக்கப்பட்டவர்களைக் கண்டு எனக்குப் பொருமையுமில்லை.

கே: இந்திய சமூகம் எப்படி உருவாகவேண்டும் என்று விரும்புகிறீர்கள்?

ப: தலையாட்டும் சமுதாயமாக இராமல் தலை தூக்கும் சமுதாயமாக உருவாகவேண்டும். தலைவர்களின் வெற்றிக்கு கைதூக்கும் சமுதாயமாக மட்டும் இராமல் தனது முன்னேற்றத்திற்கான நடவடிக்கைகளுக்குக் கைகொடுக்கும் -அதாவது ஒன்றுபட்டுச் செயல்படும்— சமுதாயமாக மாறவேண்டும்.

கே: ம. இ. கா.வில் தாங்கள் சாதிக்க விழைபவை யாவை?

ப: ம. இ.கா.வில் வழிகாட்டும் ஜனநாயக முறையை ஏற்படுத்தாமல் மக்களின் சுயசிந்தனைக்கு வழி திறந்து விடுவது, குழு மனப்பான்மையோடு செயல்படுவதை ஒழிப்பது, அரசியல் அலங்கார பொம்மைகளைக் கொலு மேடையில் வைப்பது, அரசியல் ரீதியான எதிரிகளை பழிவாங்கும் மனோபாவத்தைக் கட்சியின் எல்லா மட்டங்களிலும் அடியோடு நீக்குவது, உழைத்து முன்னேற விரும்புவோருக்கும் மக்களுக்கு உண்மையாகச் சேவை செய்யவருவோருக்கும் அதிகமாகச் சந்தர்ப்பம் கொடுப்பது, சொத்துடைமைத் திட்டத்தின் கீழ் குறைந்தபட்சம் ஒரு சொந்த வீடு, துண்டு நிலம் போன்றவற்றுக்கு இந்தியர்களை உரிமையாளர்களாக்குவது, இத்தகைய திட்டங்களை என்னால் முடிந்த மட்டும் நிறைவேற்றப் பாடுபடுவேன்.

வாய்ப் பேச்சு வீரர்

கே: "சாமிவேலு வாய்ப்பேச்சு வீரர்தான்; செயல்வீரரல்ல" என்கிறார்களே.

ப: அவ்வாறு சொல்பவர்கள் எனக்குத் தெரிந்த வரையில் மக்களல்ல; ஓரிருவர் தான். பேச முடியாதவர்கள் அல்லது பேசத்தெரியாதவர்கள் சொல்வதைப் பற்றி எனக்குக் கவலையில்லை. இதுவரைக்கும் மக்கள் எனக்குக் கொடுத்து வருகிற ஆதரவும், என் மீது வைத்துள்ள நம்பிக்கையும் நான் செயல்வீரனா? வாய் வீரனா? என்பதை விளக்கும்.

கே: வெற்று வாக்குறுதிகளைக் கொண்டே மக்கள் ஆதரவை ஓர் அரசியல்வாதி பெறும்போது, அது மக்களின் அறியாமையைக் காண்பிக்கிறதா? அல்லது அரசியல்வாதியின் திறமையைக் காண்பிக்கிறதா?

ப: அது மக்களின் அறியாமையையும் காண்பிக்கவில்லை. அரசியல்வாதியின் திறமையையும் புலப்படுத்தவில்லை. அரசியல்வாதியின் அறியாமையைத்தான் காண்பிக்கிறது. கெட்டிக்காரன் புளுகு எட்டு நாளைக்குத்தானே என்பதுபோல அரசியல்வாதியின் வெற்று வாக்குறுதி விரைவிலேயே அம்பலமாகிவிடும்.

கே: சிலாங்கூர் ம. இ. கா. தேர்தலைப் பற்றித் தாங்கள் குறிப்பிடுகையில் பட்டதாரிகளுக்கும் உழைப்பாளிகளுக்குமிடையே நடைபெறும் தேர்தல் என்கிறீர்களே, இப்படிப் பட்டதாரிகள் என்றும். உழைப்பாளிகள் என்றும் பிரித்துப் பேசவேண்டிய அவசியமென்ன?

ப: "நாங்கள் பட்டதாரிகள், அவர்கள் பட்டதாரிகளல்ல! அதனால் எங்களுக்கு வாக்களியுங்கள்" என்று எதிரணியினரில் குறிப்பிட்ட சிலர் பிரச்சாரம் செய்தார், கள். அதை முன்னிட்டுத் தான் "நாங்கள் உழைப்பாளிகள் எங்களுக்கே வாக்களியுங்கள்" என்று நான் கூறினேன்.

ம. இ. கா.வைத் துவக்கியவர் ஒரு வழக்கறிஞர். பட்டதாரிகள் நமக்குத் தேவையல்ல என்று கூற முடியாது. ஆனால் பட்டதாரிகள் மட்டும்தான் வேண்டும் என்பதில் என்ன நியாயம் இருக்கிறது? அதனால்தான் உழைப்பாளிகளுக்கும், பட்டதாரிகளுக்குமிடையே நடைபெறும் போட்டி எனக் குறிப்பிட்டேன். ●

—பாதாசன்

சிறியது

உலகிலேயே மிகச் சிறிய புத்தகங்களைச் சேகரிப்பது வினியமின் ரஸ்மோவ் என்னும் ரஷியர் ஒருவரின் பொழுதுபோக்கு. இதுவரையில் 1000 புத்தகங்கள் சேகரித்து வைத்துள்ள வினியமின், அவற்றுக்கென ஒரு நூல்நிலையத்தினையும் அமைத்துள்ளார். உருபெருக்கிக் கண்ணாடியின் துணையில்லாமல் படிக்க முடியாத இப்புத்தகங்களில் சில, வரலாற்றுச் சிறப்பு வாய்ந்தவையாகும்.

பெரியது

உலகின் மிகப்பெரிய பத்திரிகை 1859ஆம் ஆண்டு நியூயார்க் நகரில் வெளிவந்த 'தி கான்ஸ்டேசன்" என்ற பத்திரிகை. இதன் நீளம் 1.20 மீட்டர்; 1829ல் பிரான்சில் வெளியான "டையோரியா டீரோமியர்" என்ற பெயர் கொண்ட பத்திரிகைதான் உலகிலேயே மிகச்சிறிய பத்திரிகை என்று சொல்லப்படுகிறது. இதன் நீளம் 12.7 செண்டி மீட்டர்.

குதிரைமொழி

40 ஆண்டு காலம் குதிரைகளோடு பழகி, அவற்றின் செய்கைகளை ஆராய்ந்து இந்தக் குதிரைமொழி அகராதியைத் தயாரித்துள்ள ஹென்றி பிளேக், குதிரைகள் காதலை முப்பது வகைகளில் பிரதிபலிக்கின்றன என்ற உண்மையையும் கண்டுபிடித்துள்ளார்.

—இரா. கலாராமு, மாசாய்

15 நாள் பலன்

மே 26 முதல் ஜூன் 10வரை

கும்பம் (ஜன 20.— பிப். 18)

பிரயாணங்களைக் — குறிப்பாக வெளியூர்ப் பிரயாணங்களை அறவே ஒதுக்கிவிடுங்கள். வீட்டுக்கு வீடு வாசற்படி உண்டல்லவா? குடும்பத்திலும் அப்படிச் சில வாக்கு வாதங்களும் வம்புதும்புகளும் உண்டாகலாம். நண்பர்களின் ஆலோசனைகளை நம்பி எதையும் செய்யாதீர்கள். பணத் தட்டுப்பாடு ஏற்படும். செலவைக் கொஞ்சம் கட்டுப்படுத்துங்கள்.

நல்ல நாட்கள்: *27, 2, 3, 10*

எச்சரிக்கை நாள்: *8*

மீனம் (பிப். 19- மார்ச்சு 20)

உங்களுக்கு வரும் தொல்லைகளுக்கெல்லாம் காரணம் பணம்தான். அதனால் பணத்தைச் சேர்ப்பதிலும் சரி; செலவழிப்பதிலும் சரி கவனமாக இருங்கள். குடும்பத்தில் சுமுகமான உறவு நிலவும். உங்கள் திட்டங்களில் திடீர் மாற்றம் ஏற்படலாம். உணர்ச்சிவசப்படவைக்கும் சம்பவங்கள் அடிக்கடி நிகழக்கூடும். அந்தச் சந்தர்ப்பங்களில் அமைதியாக இருங்கள்.

நல்ல நாட்கள்: *27, 2, 3, 10*

எச்சரிக்கை நாட்கள்: *30, 1, 6*

மேஷம் (மார்ச்சு 21 - ஏப். 20)

என்னதான் நீங்கள் கூழைக்கும்பிடு போட்டாலும் மேலதிகாரி உங்களிடம் கொஞ்சம் தகராறு செய்யத்தான் செய்வார். வெளியூர் பிரயாணங்களாலும் கடிதப் போக்குவரத்தாலும் நன்மை கிடைக்க வழியுண்டு. ஜூன் முதல் தேதிக்குப் பிறகு பெரியோர்களின் ஆதரவும் ஒத்துழைப்பும் கிடைக்கும். அனுவசியமாக உங்கள் சொந்த விஷயங்களில் நண்பர்களைத் தலையிட அனுமதியாதீர்கள்.

நல்ல நாட்கள்: *2, 3, 10*

எச்சரிக்கை நாட்கள்: *29, 30*

ரிஷபம் (ஏப். 21 - மே 20)

பொருளாதாரத்தில் முன்னேற்றமடைய வாய்ப்புக்கள் அல்லது அதிர்ஷ்டம் உங்களுக்கு உண்டாகும். அதற்கேற்ற வகையில் குடும்பத்தினரும் பெரியோர்களும் நண்பர்களும் உங்கள் முயற்சிகளுக்கு உதவுவர். உடலாரோக்யத்தில் அக்கறை செலுத்துங்கள். சக ஊழியர்களிடம் கொஞ்சம் கவனம் தேவை. கூட இருந்து கொண்டே அவர்களில் சிலர் பணம் பறித்தாலும் பறிக்கலாம்.

நல்ல நாட்கள்: *26, 27, 2, 3*

எச்சரிக்கை நாட்கள்: *29, 30, 7*

மிதுனம் (மே 21 - ஜூன் 20)

சில நேரங்களில் சில மனிதர்களல்ல, உங்கள் நண்பர்களே உங்களின் நம்பிக்கைக்குப் பாத்திரமாக விளங்கமாட்டார்கள். குருட்டு அதிர்ஷ்டம் என்பார்களே, அது வரக்கூடும். செய்யவேண்டுமெனத் திட்டியுள்ள திட்டங்களைச் செயற்படுத்தும் முயற்சிகளை ஒத்திப்போட்டால் நல்லது.

நல்ல நாட்கள்: *27, 28*

எச்சரிக்கை நாட்கள்: *2, 3, 10*

கடகம் (ஜூன் 21-ஜூலை 20)

பண விஷயத்தில் நண்பர்களின் உதவி கிட்டும். அதிர்ஷ்டத்தை நம்பிப் பந்தயம் போன்றவற்றில் பணத்தையும் நேரத்தையும் செலவிடாதீர்கள். இவ்விஷயத்தில் உங்கள் "பாச்சா" பலிக்காது. பொது வேலைகளில் தலையிட்டால் தலைவலி திருகுவலியாகும். செய்தொழில் திருப்தியாக இருக்கும். மேலதிகாரிகளிடம் நெருப்பில் குளிர்காய்வது போல அதிகம் நெருங்காமலும் அதிகம் விலகாமலும் இருங்கள்.

நல்ல நாட்கள்: *27, 2, 3, 10*

எச்சரிக்கை நாட்கள்: *29, 30*

சிம்மம் (ஜூலை 21 - ஆக. 21)

உங்கள் திறமையை உங்களின் மேலதிகாரிகள் மதிப்பார்கள். மருத்துவச் செலவு ஏற்பட வழியில்லை. நண்பர்கள் - உறவினர்கள் ஆகியோரின் உதவியால் நல்லன விளையும். யாருடனும் வாக்குவாதம் செய்து உறவைக் கெடுத்துக்கொள்ளாதீர்கள். வியாபாரிகளாயிருந்தால் எதிலும் நிதானமாகச் செயல்படுங்கள். பணக்கஷ்டம் வந்து தொலைக்கப் போகிறது.

நல்ல நாட்கள்: *27, 28, 2, 3*

எச்சரிக்கை நாட்கள்: *30, 1, 6*

கன்னி (ஆக 22-செப். 22)

வருமானத்தைப் பெருக்குவதற்குப் பல வழிகள் உங்களுக்குப் தெரியும். நீங்கள் மட்டும் கொஞ்சம் சிக்கனமாக இருந்தால் வரும் பணத்தில் கொஞ்சமாவது சேமிப்பாகும். உங்கள் வேலைகளில் தவறு ஏற்படலாம். திருத்திக் கொள்ளுங்கள். யாரையும் தவறாகப் புரிந்துகொண்டு சஞ்சலப்படாதீர்கள்.

நல்ல நாட்கள்: *27, 28, 2, 3*

எச்சரிக்கை நாட்கள்: *29, 2, 4*

துலாம் (செப் 23-அக். 22)

"பொறுத்தவர் பூமியாள்வார்" என்பார்கள். பூமியாளாவிட்டாலும் போகிறது. குடும்பத்தில் அமைதி நிலவுவதற்காக நீங்கள் பொறுமையாகத்தான் இருக்கவேண்டும். பணம் கேட்டு நண்பர்கள் உங்களை மொய்ப்பார்கள். தாராளமாக இருந்துவிட வேண்டாம். பிறகு உங்களுக்குத்தான் அவதி. கூட்டு முயற்சிகள் வெற்றியளிக்கும்.

நல்ல நாட்கள்: *27, 2, 3.*

எச்சரிக்கை நாட்கள்: *29, 30, 5*

விருச்சிகம் (அக் 23- நவ. 22)

செலவுக்குத்தக்க பணம் கையில் இருக்கிறது என்பதற்காக எல்லாவற்றையும் செலவழித்துவிட வேண்டுமா என்ன? வருமானம் பெருகும். உடலாரோக்கியத்தில் கவனம் செலுத்துங்கள். தகுந்த காரணமின்றி உங்களின் மேலதிகாரி "வள்"ளென்று விழுவார். உங்களுக்கா சமாளிக்கத் தெரியாது?

நல்ல நாட்கள்: *27, 2, 3.*

எச்சரிக்கை நாட்கள்: *30, 5, 8*

தனுசு (நவ. 23 - டிச. 20)

வியாபாரம் மந்தமாக நடைபெறும். நண்பர்களாலும் பொதுச் சேவையாலும் உங்களுக்கு மகிழ்ச்சி கிடைக்கும். மேல் வருமானத்திற்கு வழியுண்டு. சக தொழிலாளர்கள் ஒத்துழைப்பாக இருப்பதால் தங்கள் வேலைகளில் தடங்கல் ஏற்படாது. மூளைக்கு வேலையுள்ள செயல்களில் வெற்றி கிட்டும்.

நல்ல நாட்கள். *27, 2, 9*

எச்சரிக்கை நாட்கள்: *30, 1*

மகரம் (டிச. 21- ஜன.19)

வியாபாரிகளுக்குத் தொழில் லாபகரமாக நடக்கும். மற்றவர்களுக்குச் செலவுக்குக் கையைக் கடிக்காதபடி வருமானம் கிட்டும். வாகனப் போக்குவரத்து பயனுள்ளதாகலாம். கொஞ்சம் அதிகமாக எதற்கும் முயற்சி செய்வீர்களாயின் வெற்றி கிடைக்கும். மேலதிகாரி சாதகமாக இருப்பார்.

நல்ல நாட்கள்: *27, 28, 2, 3*

எச்சரிக்கை நாட்கள்: *30, 8*

—தஞ்சை நகுலன்

தமிழறிவுப் போட்டி-1

பரிசு $50/=

1	2	3	■	4	5
6			7	■	
				8	
	■	9			
■	10				■
11			■	12	

பெயர்: ____________________

அடையாள அட்டை எண்: ____________________

முகவரி: ____________________

____

____

கையொப்பம்

விதிகள்

1. குறிப்புகளின் துணையோடு தக்க எழுத்துக்களைக் கொண்டு கட்டங்களை நிரப்ப வேண்டும்.
2. ஒரு கட்டத்தில் ஓரெழுத்து மட்டுமே எழுதப்படவேண்டும்.
3. அழித்தல், அடித்தல் திருத்தல், கூடாது. "பால் பாயிண்ட்" பேனுவால்எழுதுவது நல்லது. பென்சிலால் எழுதுதல் கூடாது.
4. சரியான விடை எழுதியவர் வெ. 50 பரிசு பெறுவார். ஒருவருக்கு மேற்பட்டோர் வெற்றி பெறுவார்களாயின் இத்தொகை பகிர்ந்து அளிக்கப்படும்.
5. எவரும் சரியான விடையை எழுதவில்லையெனில் மிகக் குறைந்த பிழைகளையுடைய விடையை எழுதியவருக்கு வெ. 10 வழங்கப்படும். ஒரே எண்ணிக்கையிலான மிகக் குறைந்த பிழைகளுடைய விடையைப் பலர் எழுதியிருப்பின் வெ.10 பகிர்ந்தளிக்கப்படும். எஞ்சியவெ. 40 அடுத்த போட்டிக்கானபரிசுத்தொகையோடு சேர்க்கப்படும்.
6. ஒருவர் எத்தனை கூப்பன்களை வேண்டுமானுலும் அனுப்பலாம். தனித்தாளில் எழுதப் படும் விடைகள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டா.
7. "புதிய சமுதாயத்தில்" பணியாற்றுபவர்களும் அவர்தம் குடும்பத்தினரும் போட்டியில் கலந்துகொள்ள இயலாது.
8. இப்போட்டி தொடர்பான அனைத்துக்கும் ஆசிரியரின் முடிவே இறுதியானது.
8. இறுதிநாள் 15-6-1977
10. கூப்பன்களை அனுப்பவேண்டிய முகவரி:–
"புதிய சமுதாயம்"
131, Jalan Tuanku Abdul Rahman,
2nd Floor,
Kuala Lumpur.

இடமிருந்து வலம்:

1. நடைமுறையில் பார்த்தால் இது பெரும்பாலும் நரகத்தில்தான் நிச்சயிக்கப்படுகிறதுபோல் தெரிகிறது.
4. புதிதாக ஒருசெயலைத்துவங்கு முன் பெரியவர்களிடமிருந்து ...பெற்றுக்கொள்வதுநல்லது.
6. இது இல்லாத அரசியலும் அரசியலா?
8. இதுவே குறைந்து இருக்கும் போது விளைச்சலை மட்டும் மிகுதியாக எதிர்பார்க்கலாமா?
9. ஒளிக்கற்றை.
10. இவர்கள் தேவர்களுக்கு ஒப்பானவர்கள் என்கிருர் திருவள்ளுவர்.
11. திரைச்சீலை.
12. கணக்கைத் தவருகப் போட்டால் விடையும் இப்படித்தான் ஏறுக்குமாருக இருக்கும்.

மேலிருந்து கீழ்:

1. இதன் வேகத்திற்கு ஈடுகட்ட எதனுலும் முடியாது
2. சுவாசப்பையின் முக்கிய எதிரி.
3. எச்செயலிலும் வெற்றிபெற அவசியம் இது தேவை.
5. வெற்றி அல்லது புகழின் ...சென்றுவிட்டவர்கள் கீழே பார்ப்பது அபூர்வம்.
7. நம்மைப் பொறுத்தவரை இது எப்போதும் நல்லதாகத்தான் இருக்கும்.
8. இது மரத்துப்போனுல் எல்லாமே மரத்துப்போகும்.
10 நுனிப்புல் மேய்வதில் மன்னன்.

தரமும் திறமும்

என்.எஸ்.ரவிசங்கர்

ஆரம்பத்திலிருந்தே நான் இலக்கியத் துறை ஈடுபாடு கொண்டவன். இலக்கியங்களில் நகைச்சுவை ததும்ப எழுதப்பட்ட பல படைப்புகளைப் பார்த்துவிட்டு நாமும் இப்படி எழுத முடியுமா என்று ஏங்கிய நாட்களுண்டு.

பொதுவாக இலக்கியமோ, நாடகமோ, திரைப்படமோ இரு பார்வையினுல் கணிக்கப்படுகிறது. ஒன்று—திறம்படக் கையாளப்பட்டிருக்கிறதா என்று, மற்ருென்று தரத்தில் அது உயர்ந்து நிற்கிறதா என்று. கூரிய பார்வையுடன் இரு விழிகளும் விளங்குவதுதான் அழகிய முகத்திற்கு இலக்கணம் என்பது போல கலைக்கும் தரமும் திறமும் இரு கண்கள் என்பதை யாரும் மறுக்க முடியாது.

இதைப் புரிந்துகொண்டு அறிவு பூர்வமாக நான் செயல்பட நினைத்த போது இலக்கியத் துறையைவிட நாடகத் துறையிலே எனக்கு அதிக வாய்ப்புக் கிடைத்தது.

அப்போது "ஒரு துறை மேம்பாடு அடைவது, அதில் அடியெடுத்துவைக்கும்சிந்தனையாளனின் தரத்தையும் திறத்தையும் பொறுத்தது" என்று பிரெஞ்சு எழுத்தாளர் "மோனியர்" குறிப்பிட்டது நினைவுக்கு வந்தது.

"ஏற்றுக்கொண்ட தொழிலுக்கு மதிப்பைக் கூட்டுவதும் அதன்வழி தன் புகழை நிலைநாட்டுவதும் தனி மனிதனின் தரத்தையும் திறத்தையும் பொறுத்தது" என்று "பெர்ஞட்ஷா" கூறியதும் நினைவில் வட்டமிட்டது.

எனவே, இந்தத் துறையிலே பிரவேசிக்கும் முன்பு எனக்கு முந்திய தலைமுறையினர் இந்த நகைச்சுவையில் என்னென்ன சாதனைகளைச் செய்து இருக்கிருர்கள், எந்தப் புதுக்கோணத்தில் மாறுபட்ட சிந்தனையில் இயங்கி இருக்கிருர்கள் என்று அறியக் கடந்த காலத்தைத் திரும்பி ஆராய முற்பட்டேன்.

கூத்து பரிமாணமடைந்து நாடக ரூபம் பெற்றது. நாடகம் விஸ்வரூபமாகி, திரைப்படமாகி நிற்கிறது என்ற உண்மையை அறிந்தேன்.

கூத்து

இலக்கியத் துறையிலே கவிதைகளே தலைநிமிர்ந்து நின்ற நேரம்—உரைநடைப் பகுதி வளர்ச்சி பெருத காலம். ஆகவே, நகைச்சுவை இலக்கியங்கள் என்று எதுவுமே படைக்கப்படவில்லை.

கூத்திலே நடிகர்களைக் கற்பனையாகப் பேசிச் சிரிக்கவைத்தார்கள். சிரிக்க வைப்பது மட்டுமே நோக்கமாக இருந்தது. அதிலே பபூன் ஷண்முகம், கிளொன் சுந்தரம், சி. எஸ். சாமண்ண ஐயர் தலைசிறந்து விளங்கினுர்கள்.

நாடகம்

கூத்து, நாடகமானபோது கவிதை இலக்கியங்களில் மாறுபட்டு உரைநடை இலக்கியங்கள் பிறக்கத் தொடங்கின.

அதிலே இலக்கியகர்த்தாக்கள் என்று விமரிசிக்கப்பட்ட கல்கி, தேவன், புதுமைப்பித்தன் நகைச்சுவை இலக்கியங்களைஉருவாக்கினர்.

நாடகத்துறையில் பம்மல் சம்பந்த முதலியார், வடுவூர் துரைசாமி அய்யங்கார் போன்றவர்கள் முழுநீள நகைச்சுவை நாடகங்கள் இயற்றி இருக்கிருர்கள். இதே காலத்தில் என். எஸ். கிருஷ்ணன் நகைச்சுவையால் சிரிக்கவும் சிந்திக்கவும் செய்தார் என்ருல் மிகையாகாது.

திரைப்படம்

நாடகம் திரைப்படமாகி வளர்ச்சி பெற்ற காலத்தில் சம்பந்த முதலியாரின் "சபாபதி" முழு நீளத் திரைப்படமாக வந்தது. வடுவூர் துரைசாமி அய்யங்காருடைய "மேனகா", "திகம்பரசாமியார்" முழு நீள நகைச்சுவைப் படங்கள். திரைப்படத்திற்கு என். எஸ். கிருஷ்ணன் வந்தபோது நகைச்சுவையில் மாறுதலையும் மறுமலர்ச்சியையும் உண்டாக்கினுர்.

ஆக, கூத்து, நாடக திரைப்பட அத்தியாயத்தில் இதுவ நகைச்சுவை வளர்ச்சிக்கு உரம்போன்ற பொன்ஞன நேரம் என்பதை அறிந்தேன்.


கடந்த காலத்தைத் திரும்பிப் பார்த்த நான், நிகழ்காலத்திற்கு வந்தேன். நகைச்சுவை என்ருல் கேலிக்கூத்து என்ற நிலை உருவாகி உருக்குலைந்து கிடைப்பதைக் கண்டேன். எனக்குக் கிடைத்த வாய்ப்பினைப் பயன்படுத்திக்கொண்டு நகைச்சுவையைத் தனி பாணியோடு புது ராகத்தோடு சொல்லத் தொடங்கினேன்.

என் நகைச்சுவையைப் பார்த்தவர்கள் திறமும் அதிலே தரமும் கலந்து இருப்பதாகப் பாராட்டும்போது இறும்பூதெய்துகிறேன். ஏதோ நானும் கலைக்குச் சேவை செய்துகொண்டு இருப்பதாகத் திருப்தி அடைகிறேன். எதிர்காலத்திலே சிந்தனையோடு நகைச்சுவை வளர்ச்சியைப் பற்றி ஆராய முற்படப்போகும் எதிர்காலத்தலைமுறையினர்தான் நான் செய்து இருக்கும் சாதனை பற்றிப் பேசவேண்டும்.

[இக்கட்டுரையாசிரியர், மனேகர் நாடகக்குழுவின் முக்கிய நகைசசுவை நடிகரும் நகைசசுவை உரையாடலாசிரியரும் ஆவார்.]

வெள்ளிக்கு ஒரு கார்

நமது நாட்டில் வலிவோடும் பொலிவோடும் இயங்கி வருகின்ற தேசிய அளவிலான சமூக இயக்கங்களில் ஒன்று மலேசியத் திராவிடர் கழகம். அது தனது கட்டட நிதிக்காக 2 1/2 லட்சம் வெள்ளி திரட்டும் மாபெரும் திட்டத்தைத் தற்போது துவக்கி அதற்குரிய லாட்டரிச் (குலுக்குச்) சீட்டுகளை நாடெங்கும் விற்பனை செய்துகொண்டிருக்கிறது.



திரு. அ. மருதமுத்து

முதற்பரிசு "டாட்சன்" கார். இரண்டாவது பரிசு "ஹோண்டா" மோட்டார் சைக்கிள். இப்படி வரிசையாக மொத்தம் 61 பரிசுகள் அந்தக் குலுக்குச் சீட்டுகளை வாங்கும் அதிர்ஷ்டசாலிகளுக்குக் காத்திருக்கின்றன. இவற்றுடன் தமிழகம் மற்றும் பாங்காக் சென்று திரும்ப விமான டிக்கெட்டுகளும் இப்பரிசுத் திட்டத்தில் உள்ளன.

இச்சீட்டுக்குரிய பரிசுக்குலுக்கு ஆகஸ்டு மாத இறுதியில் பெட்டாலிங் ஜெயாவிலுள்ள தோட்ட மாளிகையில் நடைபெறும்.

தனது கட்டட நிதியாக ஏற்கனவே ம.தி.க. ஏறத்தாழ$35,000 சேர்த்திருப்பதாகவும், அதற்கு ஆதரவு வழங்கியது போலவே இந்தக் குலுக்குச் சீட்டு விற்பனைக்கும் ஆதரவு தருமாறு பல்வேறு சமூக அமைப்புக்களுக்கும் இன்னபிற இயக்கங்களுக்கும் ம.தி.க. கட்டடக் குழுவின் தலைவர் திரு அ. மருதமுத்து வேண்டுகோள் விடுத்துள்ளார்.

'பாரி'

புளியமரம்



"அந்தப் புளியமரம் சாய்ஞ் சிடுச்சிங்க! அதுதான், நம்ம தமிழ்ப் பள்ளிக்கூடத்துக்கு எதிரில் ரோட்டு ஓரமா நின்னு இருந்திச்சே, அந்த மரந்தாங்க சாய்ஞ்சிடுச்சி!" என்றான் வந்தவன்.

"என்ன! அந்த மரமா? அந்த மரமா சாய்ஞ்சிடுச்சி?" —அதிர்ந்து போய்க் கேட்டான் அரசன்.

"ஆமாங்க, அதே மரந்தாங்க ரோட்டுல குறுக்கே சாய்ஞ்சிடுச்சிங்க. அதனால ரெண்டு பக்கமும் போக்குவரத்துத் தடங்கலாகப் போயிடுச்சிங்க. இப்பத்தான் "புல் டோசர்" வந்திச்சி. நம்ப "பிடபல்யூடி" ஆளுங்க அந்தப் புல்டோசர வச்சி ரோட்டு ஓரத்துல அந்த மரத்தத் தள்ளிப் போடப் பாக்குறாங்க" என்று மேல் விவரம் தந்தான்.

அவன் கூறிய கதையைக் கேட்டு அரசன் மேலும் கலங்கிப் போகிறான். அந்தக் கலக்கத்தின் அறிகுறியை வந்து சொன்னவன் நன்கு அறிந்து கொள்ளுகிறான். "ஒரு மரம் விழுந்து போனதுக்குப் போய் ஏங்க இப்படிக் கலங்கிப் போறீங்க?" அவன் அரசனைக் கேட்கத்துணிந்தும் கேட்க முடியாது போய்விட்ட கேள்வி அது.

"அந்த மரத்தை நான் போய்ப் பார்த்து வரவேண்டும்" என்று தன் மனைவியிடம் கூறிவிட்டு அந்தப் பத்துமணி இருட்டில் தனது கைவிளக்கை எடுத்துக் கொண்டு புறப்பட்டு நடக்கிறான் அரசன்.

சிறு குன்றின்மீது அமைந்துள்ள பத்தாங் பெர்சுந்தை பட்டணத்தையும் கடலோரத்தில் சிலாங்கூர் ஆற்றின் முகத்துவாரத்தில் அமைந்திருக்கும் அந்த மாவட்டத்தின் அலுவலகப் பட்டணம் கோல சிலாங்கூரையும் இணைக்கின்ற அந்த நெடுஞ்சாலையில் தமிழ்ப் பள்ளியின் எதிரில் எழுபது எண்பது ஆண்டுகளாக வளர்ந்து நின்றிருந்த அந்தப் புளிய மரம், நன்றாக இருக்கின்ற நல்ல மனிதர்கள் திடீரென்று மாரடைப்பால் நீள்துயில் கொள்வதைப் போன்று சடுமெனச்சாய்ந்து விட்டிருந்தது.

அரசன் வந்து சேர்ந்தான். செய்தி கேட்டபோது இருந்த கலக்கம், நேரில் பார்க்கின்ற போது மீண்டும் எழுந்து அவன் இதயத்தைக் குலுக்கியது. "ஓ!" என்று அவன் வாய்விட்டு அழவில்லை. ஆனால் அவன் இதயத்தில் அந்த ஓங்காரம் எழுந்து அவனை அலைக்கழித்துக் கொண்டிருந்தது.

அவன் கேள்விப்பட்டதுபோல சாலையின் குறுக்கே நீண்டு கிடந்தது அந்தப் புளிய மரம்.

"புல்டோசரின்" விளக்கொளி உதவியோடு மராமத்துத் தொழிலாளர்கள் அந்த மரத்தைச்சாலையின் ஓரத்தில் ஒதுக்கிப் போடும் பணியில் ஈடுபட்டிருந்தனர்.

கைவிளக்கைப் போட்டுப் பார்த்தான் அரசன். அந்த மரத்தின் வேர்கள் அற்றுப் போய் இருந்தன. ஆணிவேர் இருந்திருக்க வேண்டிய இடத்தில் அதன் அடியில் பூமியில் ஆழக் குழியொன்று இருந்தது. மரத்தின் அடியில் குகைவாயில் போன்று ஒரு திறப்பு! அதன் உள்ளே பெரிய நீர்க்குழாய் போன்று சந்து நீண்டு இருந்தது. அந்தச் சந்தின் சுவரில் சாரை சாரையாகக் கறையான் அணிகள். மரம் விழுந்ததற்குக் காரணம் விளங்கிவிட்டது அவனுக்கு.

ஐந்து ஆறு ஆண்டுகளுக்கு முன் பத்தாங் பெர்சுந்தை பட்டணத்தில் சுழன்று விசிய புயற் காற்றின் வேகத்தைத் தாள முடியாமல் முறிந்து வீழ்ந்த மரங்கள் ஏராளம். அந்தப் புயற்காற்றையும் தாங்கித் தாக்குப்பிடித்து நின்ற மரம் அந்தப் புளிய மரம். காற்றோ, மழையோ, இடியோ இல்லாத வேளையில் சடுமெனச் சாய்ந்து விட்டிருந்தது. அது நின்றிருந்த அந்த இடத்தில் இனி வெறுமை நின்றிருக்கும்படிச் செய்து விட்டு அது சாய்ந்துவிட்டது.

வெளித் தோற்றத்துக்குப் பிரமாண்டமாகவும், வனப்பாகவும் நின்றிருந்த அந்த மரத்தின் உள்ளே நடைபெற்று வந்த கறையான்களின் ஆட்சி அதனை அப்படிச் சாயவைத்து விட்டது என்பதை அறிந்துகொண்டான் அரசன்.

ஒருமுறை மீண்டும் அந்த மரத்தை நன்றாகப் பார்த்துவிட்டுத் திரும்பி நடந்தான்.

பொது என்ற நிலையில் சாலையின் ஓரத்தில் நின்றிருந்ததால் எவ்வளவு சிரமங்களை ஏற்றது அந்த மரம்!

ஒவ்வொரு முறையும் சடை சடையாகக் காய்த்துக் குலுங்கிய போது கல்லடி என்றும் கம்படி என்றும், ஏன் செருப்பைக்கூட அல்லவா சிறுவர்கள் கழற்றி அதன்மீது எறிந்து அதன் கனி உதிர்த்தனர். மழலையின் கரங்களில் குத்துப்படும் பெற்றவளைப்போல் அல்லவா அவ்வளவையும் தாங்கி நின்றது அந்த மரம்.

அந்தத் தமிழ்ப் பள்ளியின் சிறார்களுக்கும், ஆசிரியர்களுக்கும், பெற்றோருக்கும் நிழல் தந்த அந்த மரம் வீழ்ந்துவிட்டதே!

பத்தாங் பெர்சுந்தைக்கு வரும் போதும், போகும் போதும் ஒவ்வொருவரின் கண்களும் தன்னிச்சையாகத் திரும்பி அந்த மரம் நின்றிருந்த திக்கைப் பார்க்குமே! ஒரு நிலக் குறியாக நெடுநாட்கள் நின்றிருந்த மரம் சாலையின் குறுக்கே நீண்டு விட்டதே! அரசனின் மனத்தின் புலம்பல் நீண்டது.

ஒரு சாதாரண மரத்துக்காக அவன் அப்படியெல்லாம் வருந்துவதாகப் பட்டாலும் அவனைப் பொறுத்தமட்டில் அது ஒரு சாதாரண மரமாக இருந்ததில்லை.

ஒரு சமூகத் தொண்டனை இழந்துவிட்ட பேரதிர்ச்சி அவன் உள்ளத்தை உறுத்தியது.

ஒரு பொதுப்பணியாளர் என்ற நிலையில் அரசனுக்கு அவசியமான நண்பனாய் அமைந்துபோய் நின்றிருந்தது அந்த மரம்.

அவன் தான் சார்ந்துள்ள மன்றத்தின் வழியாக சமூகத்துக்குத் தேவையான எத்தனையோ நிகழ்ச்சிகளை நடத்தியிருக்கின்றான். எழுதுவதற்கு முன்னால் பிள்ளையார் சுழி போடுவதுபோல, எந்த நிகழ்ச்சியானாலும் அதன் முழு விவரத்தையும் விளம்பரத்தையும் முதலில் அந்த மரம்தான் தாங்கி மக்களுக்கு விளம்பரப்படுத்தி நிற்கும்.

அவனுக்கு மட்டுமென்று நிற்காமல் பத்தாங் பெர்சுந்தையில், அதன் வட்டாரத்தில் இயங்குகின்ற எல்லா சமூக, அரசியல் இயக்கங்களுக்கும் பாரபட்சமற்ற முறையில் சேவை செய்த மரம், பால்பவுடர் என்றும் சிகரெட் என்றும் வியாபாரிகளின் லாபத்துக்குங்கூட விளம்பரம் தாங்கி உதவி நின்றிருக்கிறது. அது தாங்கிய விளம்பத்தைப் பார்த்து ஒரு கூட்டுறவு இயக்கத்தில் ஆடு மாடுகளுக்கு விண்ணப்பம் போட்டுப் பெற்றவர்கள் ஓரிருவரும் இருந்தனர். அது தாங்கிய விளம்பரத்தைப் பார்த்து, தமிழ் நாட்டில் இருந்து பத்தாங் பெர்சுந்தைக்கு வருகை புரிந்த நடிகர்கள், தலைவர்கள், இலக்கிய வாதிகளைக்காணத் திரண்டவர்கள் அனேகர். கடந்த தேர்தல் சமயத்தில் அரசியல் கொடிகளையும், படங்களையும் தாங்கிப் பிடித்திருந்து சேவை புரிந்தது. அதில் கட்டப்பட்டிருந்த எதிர்க்கட்சிக் கொடிகளையும் தோரணங்களையும் மனிதர்கள்தாம் வேறுபாடு காட்டிப் பிய்த்து எறிந்தார்களே தவிர அந்த மரம் தானாக உதறி எறியவில்லை. யார் வெற்றி பெற்றாலும் தனக்கு ஆகப் போவதோ அல்லது கிடைக்கப் போகின்ற அனுகூலமோ எதுவும் இல்லை என்று அம்மரம் நன்கு உணர்ந்து வைத்திருக்கவேண்டும்.

சாய்ந்துவிட்ட அந்த மரத்தைப் பற்றிய எண்ணங்களில் தளர்ந்து நடந்து, தன் வீடு வந்து சேர்ந்தான் அரசன்.

ஏதோ செய்தி சொல்ல வந்து காத்திருந்த அவன் மன்றத்தின் சகோதரன் அவனைக் கண்ட மாத்திரத்தில், "என்னங்க, மரத்தைப் பார்த்திங்களா? கரையான் அரித்து விட்டிருக்கின்றது. அதனால் தான் சாய்ந்து விட்டது" என்று மனம் வருந்திக் கூறினான்.

அந்த மரத்திற்காக அவன் படுகின்ற இரக்கத்தையும், வேதனையையும் வெளியில் சொன்னால் கேட்பவர்கள் சிரித்துவிடவும் கூடும்; பரிகசிக்கவும் நேரலாம். ஆனால் மற்றவர்களைப் பற்றிக் கவலைப்படாத அவன் அப்போது நிச்சயமாக அந்தமரத்தை நினைத்து உருகித்தான் போனான்.

"இப்பத்தாங்க, சாயங்காலம் மணி ஆறரை இருக்கும். நாங்கள் எல்லாரும் அந்த மரத்தடியில் கூடிப் பேசிக்கிட்டிருந்தோம். கொஞ்ச நேரம் கழிச்சி வந்துப் பார்க்கிறப்போ, மரம் விழுந்து கிடக்குங்க. நம்ம இருசன் வாத்தியாரு இல்லைங்களா. அவருக்கும், நம்மக் களியன் வாத்தியாருக்கும் பள்ளிக் கூடத்தில ஏதோ தகருருங்களாம். அதனால் "லோரோங் லாப்பானி"ல் இருக்கிற சில பொடியன்களை ஏவி களியன் வாத்தியாரை அடிக்கிறதுக்கு இருசன் வாத்தியாரும் அவருடைய சகாக்களும் திட்டம் போட்டாங்க. என்னைத்தான் அந்தப் பையன்களை அழைச்சி வரச் சொன்னாங்க. நான் முடியாதுன்னு சொல்லிப்புட்டேன். எப்படியோ லோரோங்கல இருந்து அந்தப் பையன்களும் வந்தாங்க, இத்தனை வெள்ளி, போக்குவரத்து என்று எல்லாம் பேசி முடிவாச்சு. நமக்கு என்னன்னு நான் பேசாம போயிட்டேங்க" என்று அவன் சொல்லி முடித்தான்.

அது கேட்ட அரசன் துடித்துப் போனான். தமிழாசிரியர்களில் சிலர் ஒருவரையொருவர் "ஆள் வைத்து" அடித்துக் கொள்ளுகிறார்கள் என்ற செய்தி அவன் காதுகளில் ஈயத்தைக் காய்ச்சி ஊற்றினாற்போல் சுட்டது.

மரம் விழுந்து போனதால் வேதனையடைந்த அவன் உள்ளம் இச்செய்தியைக் கேட்டு வெறி கொண்டது.

"என்ன மனிதர்கள் இவர்கள்? என்ன மனிதர்கள் இவர்கள்?" என்று அவன் மனம் வசைபாடியது.

உணர்ச்சியின் கொந்தளிப்பால் உடன் எதையும் வாய்விட்டுச் சொல்ல முடியவில்லை அவனால்.

"நீ என்ன செய்தாய்?" என்று அவனைப் பார்த்துச் சற்றுக் கடுமையாகவே கேட்டான் அரசன்.

"நான் தான் விலகிக்கொண்டு விட்டேன்களே நமக்கு எந்த வம்பும் வேண்டாமென்று!" என்றான் அவன்.

அவனுக்கு வந்த ஆத்திரத்தில், "நீ உன் கடமையைச் செய்யவில்லை. அப்படியென்றால் இந்நேரம் அடிபிடி எல்லாம் நடந்து முடிந்திருக்குமே!" என்றான் அரசன்.

அதற்கு அவன், "ஆமாங்க, அடிச்சுக்கிட்டாங்களாம். அடி அவ்வளவு பலமா இல்லைங்களாம். அவன் கையையுங் காலையும் ஒடிச்சிக் கொண்டு வந்திருக்கக்கூடாதான்னு ஆள் அனுப்பின இருசன் வாத்தியாரு வருத்தப்பட்டுக்கிட்டாராம். களியன் வாத்தியாரு போலீஸ்ல ரிப்போர்ட்டு செய்திருக்கிறாராம்".

"ஆக எல்லாமே நடந்துமுடிந்து விட்டதென்று சொல்" என்று அலுத்துக்கொண்ட அரசனின் மனம் அழத் தொடங்கிவிட்டது.

அவனைப் போன்றவர்கள், சாதாரண மனிதர்கள் மன்றங்கள் வைத்து, சமூகச் சேவைகள் என்று எதை எதை எல்லாமோ செய்து சொந்தப்பணத்தையும் நேரத்தையும் விரையமாக்கிக் கொண்டிருக்கின்ற வேளையில் தமிழின் பேரில், சமூகத்தின் பேரில், அவற்றின் வளர்ச்சிக்கும் வாழ்வுக்கும் ஆதாரமாகவும் பக்கபலமாகவும் இருந்து செயல்பட வேண்டிய பெருமைக்குரிய-கற்றவர்கள், இப்படிப்பட்ட செயல்களால் சமூகத்தின் மதிப்பையும் மரியாதையையும் இழப்பதோடு மட்டுமல்லாமல், சமூகத்தின் நம்பிக்கையையே தூள்தூளாக்கிப் புழுதியாகப் பறக்கும்படி நடந்துகொண்டிருக்கிறார்களே என்று அழுதான் அரசன்.

ஒரு நீண்ட மனப்போராட்டத்துக்குப் பின் மீண்டும் அந்த மரத்தைப் பற்றி அவன் நினைத்துக் கொள்ளுகிறான்.

"ஆமாம், வந்தவன் சொன்னானே! அதன் அடியில் கூடித்தானே அந்த அசிங்கமான திட்டத்தைப் போட்டுப் பேசியிருக்கிறார்கள். மனிதனுக்காக கொடிபிடித்து அவனது நலத்துக்காக வெய்யிலுக்கும் மழைக்கும்கூட குடைபிடித்து நின்ற அந்த மரம், ஒரு தமிழன் மற்றொரு தமிழனை அடிக்கப் போட்ட திட்டத்தைக் கேட்டு மனம் பொருமியிருக்க வேண்டும்; அதிலும் ஆள் வைத்து அடிக்கின்ற செயல்கேட்டு மனம் நொந்துபோய் இருக்கவேண்டும். "தாழ்ந்து கிடக்கின்ற தமிழனுக்குத் தரமான வாழ்வு தேடித்தரத் தரமில்லாது போனாலும், தமிழனும் தமிழனும் தங்களுக்குள்ளேயே தட்டிக் கொள்ளாதீங்கடா!" என்று தேம்பியிருக்க வேண்டும் அந்த மரம்.

தேம்பித்தேம்பி அழுது முடித்து பின் நன்கு யோசித்து அந்த மனிதர்களின் திட்டத்தைத் தடுத்து நிறுத்தி விடலாம் என்ற எண்ணத்தில், அடி பெயர்ந்து சாலையின் குறுக்கே சாய்ந்து விழுந்திருக்கவேண்டும் அந்தப் புளிய மரம்.

கரையான் அரித்து விட்டதால் அந்த மரம் விழ்ந்திருக்க முடியாது. ஒரே தாய்மொழி பேசும் மனிதர்கள் சாதாரண, நிலையற்ற செயல்களுக்காக மனவிகர்ப்பங்கொண்டு ஒருவரை ஒருவர் ஆள்வைத்து அடித்துப் போடும் தகாத செயல்கண்டு சரிந்திருக்கவேண்டும் அந்த மரம்.

தமிழ்ச் சமூகத்தின் தலைவிதியை நிர்ணயித்து அதன் உயர்வுக்கும், சீர்மைக்கும் ஊன்று கோலாக விளங்க வேண்டிய நிலையிலுள்ளவர்கள், சொந்தச் சமூகமும், பிறரும் பார்த்து நகைக்க வழிவிட்டு விடக்கூடாது என்று உணர்ந்து, விழ்ந்து வழிமறித்திருக்கவேண்டும் அந்த மரம்.

சாய்ந்து கிடக்கின்ற அந்தப் புளிய மரத்துக்காக இரங்கி, மனம் வாடி அதையே பார்த்துக் கொண்டிருந்தான் அரசன். ●

நீல உதடுகள்

சில பெண்களுக்கு உதடுகள் கறுப்பாக இருக்கும். இந்த நிறத்தை மாற்றமுடியாது. உதடுகள் கறுப்பாக உள்ள பெண்கள் உதட்டுச் சாயம் பூசிக்கொள்ளலாம். உதடுகள் நீலமாகத்தான் இருக்கக்கூடாது. உதடுகள் நீலமாக இருந்தால் அவர்களுக்கு இருதயம் அல்லது சுவாசப் பைகள் பாதிக்கப்பட்டிருக்கின்றன என்று பொருள்.

சிந்தை துயில் நீக்கும் சிவனடியார்கள்

சித்தாந்த வித்தகர்
முரு.ஏ.டி.இரத்தினம் செட்டியார்

3. மனுநீதிச் சோழன்

நாயன்மார் வரலாறு சொல்வதற்கு முன் திருத்தொண்டத் தொகையில் குறிப்பிடப்படாத மனுநீதிச் சோழன் வரலாற்றைச் சேக்கிழார் பாடியிருக்கிறார்.

பெரிய புராணம் பாடுவதற்குக் காரணமாக இருந்தவன் அநபாயச் சோழன். அவன் முன்னோர்களில் ஒருவன் மனுநீதிச் சோழன். அவனைப் பாடுவதன்மூலம் சோழ அரசின் பெருமையையும் இறைவனின் கருணைத் திறத்தையும் நாம் உணர முடியுமென்பது சேக்கிழார் நினைப்பு.

மகன் பிறந்தான்

மனுநீதிச் சோழன் திருவாரூரைத் தலைநகராகக் கொண்டு அரசு புரிந்து வந்தான். அவன் நீதி தவறாதவன். தன் ஆட்சியில் யாருக்கேனும் துன்பம் வந்தால் உடனே அறிவிக்கும்படியாக ஓர் ஆராய்ச்சி மணி கட்டியிருந்தான். அதை அசைத்தால் போதும்; உடனே அரசன் வந்து நீதி கேட்பான். ஆனால் ஒருவர்கூட அதனை வந்து அசைத்ததில்லை. அவ்வளவு விழிப்பாக அவன் நீதிகாத்து வந்தான். நெடுநாள் மகப்பேறு இல்லாமல் மிக வருந்தினான். மகப்பேறு வேண்டி வீதிவிடங்கப் பெருமானைத் தொழுது வந்தான். ஏழை எளியவர்கட்கு வரையாது வழங்கினான். கோதானம், பூதானம், முதலிய அறங்களையும் செய்தான். இறைவன் திருவருளால் அவன் மனைவி வயிற்றில் ஒரு புதல்வன் தோன்றினான். ஒரு குலத்துக்கு ஒரு மைந்தனாகப் பிறந்த அப்புதல்வனை உயிர்போல நேசித்து வளர்த்து வந்தான். வீதிவிடங்கப் பெருமான் பெயரையே அவனுக்கு இட்டு அழைத்தான். குழந்தைப்பேறு இல்லாதவர்கள், வழிபாட்டாலும், தான தருமங்களாலும் அப்பேற்றைப் பெறலாம் என்பது இதனால் தெரிகிறது.

வளர்ந்து பெரியவனான வீதிவிடங்கன் ஒரு நாள் அரச வீதியில் திருவுலா போனான். சேனைத்தலைவர்களும் அரசாங்க அலுவலர்களும் உடன் சென்றனர். தேரில் பெரிய மணி கட்டியிருந்தது. அதன் ஒலியால் வீதியில் நடப்போர் ஒதுங்கிச் சென்றனர்; பிராணிகளும் விலகிச் சென்றன.

கன்று புகுந்தது

மிக எச்சரிக்கையோடு அரசகுமாரன் திருவுலா போய்க்கொண்டிருந்தான். திடீரென ஓர் இளங்கன்று ஒருவருக்கும் தெரியாமல் தேர்முன் பாய்ந்தது. தேர்க்கால் அதன் மீது ஏறியதும் உடல் நசுங்கி அது இறந்தது. கன்று இறந்ததைக் கண்ட அரசகுமாரன் உடனே தேரை விட்டுக் கீழே இறங்கி இறந்துபோன கன்றைக் கவலை தேங்க நோக்கினான்.

கன்று இறந்த சமயம் அங்கே நின்று கொண்டிருந்த தாய்ப்பசு "அம்மா, அம்மா" எனக் கதறி அழுதது. அரசகுமாரனுக்கு ஒன்றும் புரியவில்லை.

அவன் வேண்டுமென்று இக்குற்றத்தைச் செய்யவில்லை. மிக எச்சரிக்கையோடுதான் திருவுலா போந்தான். என்ன செய்வது? விதியின் விளையாட்டை யார் விலக்க முடியும்? என்னதான் வழிபாடு செய்தாலும் முதல் வெற்றி விதிக்குத்தான்; அப்புறம்தான் நாம் அதனை வெல்லலாம். தாய்ப்பசுவின் அலறல் அரசகுமாரன் உள்ளத்தை உருக்கியது.

கழுவாய் தேடல்

தந்தையின் அரசாட்சிக்குப் பேரிழிவு வந்துவிட்டதே என இளவரசன் கலங்கினான். இப்பழியைத் தந்தை அறிவதற்கு முன்னேயே வேத விதிப்படி பரிகாரம் செய்து நீக்கிக் கொள்ளலாம் என அவன் நினைத்து வேதம் வல்ல அந்தணர்களிடம் விரைந்து சென்றான்.

எந்தக் குற்றத்திற்கும் உளம் வருந்தி வேத விதிப்படி வழிபாடு செய்தால் கழுவாய் உண்டு. எனவே அரசிளங்குமாரன் செய்த இக்குற்றத்திற்குக் கழுவாய் உண்டென்பதைக் கூறவேண்டுவதில்லை. தாய்ப்பசுவின் வருத்தத்தை எவ்வாற்றாலும் தணிக்க முடியாத அவன் வேறு வழியின்றிக் கழுவாய் தேடிச்சென்றதில் எவ்விதத் தவறுமில்லை. அவன் இதைத் தவிர வேறு எதுவும் செய்ய முடியாது.

ஆராய்ச்சிமணி ஒலித்தது

தாய்ப்பசு அவ்விடத்தைவிட்டு அரண்மனைக்குச் சென்று ஆராய்ச்சி மணியைத் தன் கொம்பால் அசைத்தது. மணியோசைகேட்ட அரசன் இடியோசைகேட்ட நாகம்போல அயர்ந்து போனான். அவன் அரண்மனை மணி ஒருநாளும் அசைந்ததில்லை. அரசன் சிங்காதனத்தை விட்டு இறங்கி ஓடி வருதற்கு முன் காவலர்களும் அமைச்சர்களும் சென்று அரசனிடம் நிலைமையை விளக்கிக் கூறினர். அரசகுமாரன் அரச வீதியில் மிக எச்சரிக்கையோடு சென்றும் இவ்விபத்து எதிர்பாராமல் நிகழ்ந்துவிட்டது என்பதை மிக விரிவாக எடுத்துச் சொல்லினர். அப்பொழுது அரசன் அந்தத் தாய்ப்பசு அடைந்த துயரத்தைத் தானும் எய்தினான். மகனுக்கு மரண தண்டனை விதிப்பதே முறை என அவன் கருதினான்.

மன்னவன் மனோநிலையை அறிந்த அமைச்சர்கள் மிக்க பணிவோடு, "பெருமானே! இதற்கு நாம் என்ன செய்ய முடியும்? மகனைக் கொல்வது முறையன்று; அந்தணர்களிடம் சென்று இப்பழியை மாற்றிக் கொள்ளக்கூடிய கழுவாயை அறிந்து அவ்வாறு செய்வதே முறையாகும்", என்று கூறினர். "அந்தணர்களிடம் பரிகாரம் செய்தால் தாய்ப்பசுவின் துயரம் நீங்குமா?" என்றுஅரசன்அவர்களை வினவினான்.

"தாய்ப்பசுவின் துயரத்தை நீக்க முடியாது; ஆனால் அதற்கு நாம் என் செய்வது? மரபுப்படி பரிகாரம் செய்வதுதான் வழி; இதுதான் தொன்றுதொட்டு நடந்து வருகிற வழக்கம்" என்று மந்திரிகள் பதில் அளித்தனர்.

நியாயமாகுமா?

"ஒருவன் ஓர் உயிரைக் கொன்றால் அவனுக்கு மரண தண்டனை விதிக்கிறோம். என் மகனுக்கு மட்டும் தனிச்சலுகை காட்டலாமா?" என்று அரசன் கேட்டபின், "அரசே! இது அறியாமல் செய்த குற்றம்; மேலும் மனிதனை மனிதன் கொன்றால்தான் மரண தண்டனை! இது கன்று; ஆதலால் பரிகாரம் செய்வதுதான் வழி; நாங்கள் நியாயமுறைப்படிதான் சொல்கிறோம்; கன்று இறந்ததற்காக மகனைக் கொல்வது முறையன்று" என அமைச்சர் அனைவரும் ஒருமுகமாகக் கூறினர்.

"இப்பசு மனித அறிவு படைத்ததாக இருக்கிறது. ஆராய்ச்சி மணியைஅதுவந்துஅடித்ததிலிருந்தே மனிதப் பசு என்றே அதனை நாம் கொள்ளவேண்டும். உலகில் வேறு எந்தப் பசுவும் இது மாதிரி செய்ததில்லை; திருவாரூரில் பிறந்த அத்தனை உயிர்களுமே சமமாகப் பாவிக்கப் படவேண்டியவையாகும். எனவே மனிதனை மனிதன் கொன்றால் என்ன தண்டனையோ, அந்தத் தண்டனையைத்தான் இந்தக் குற்றத்திற்கும் வழங்க வேண்டும்", என்று அரசன் அமைச்சர்களிடம் தெரிவித்தான்.

அப்பொழுது அமைச்சர்கள், "அறியாமல் செய்த குற்றமாதலால் இதற்கு மன்னிப்பு உண்டு. மேலும் மகனைக் கொல்வதால் பசுவின் துயரம் நீங்கி விடுமா? அது கன்றை இழந்ததுஇழந்ததுதான்.எனவே பரிகாரம் செய்வதுதான் முறை" என மீண்டும் கூறினர்.

[தொடரும்]

பால்மரக் காட்டினிலே

— அகிலன் —

முன்கதை

வயிற்றுப் பிழைப்புக்காக, ஒப்பந்தக் கூலிகளாக மலேசியாவுக்குக் கப்பல் ஏறின, எத்தனையோ தமிழ்க் குடும்பங்கள். காட்டைத் திருத்தி, ரப்பர் மரங்களைப் பயிரிட்டு, பொன்விளையும் பூமியாக்கினார்கள் இவர்கள். அந்த மண்ணையே தங்கள் சொந்த மண்ணாகக் கருதி உழைத்தார்கள். தோட்டத்தை ஒட்டிய "லயன்"களில் அவர்கள் குடியிருப்பு.

தோட்டத்துப் பள்ளியில் ஆசிரியராகப் பணி புரிந்த பாலனின் தமக்கைக் குடும்பம் வேலை செய்த ரப்பர்த் தோட்டத்தைத் துண்டு போட்டு விற்றுவிட்டுக் கப்பலேற எண்ணிய ஆங்கிலமுதலாளி, அத்தோட்டத்தில் உழைத்தவர்களுக்கெல்லாம் நோட்டீசு கொடுத்துவிட்டான். நெற்றி வேர்வை நிலத்தில் விழ உழைத்த அவர்களுக்கு, "அடுத்த மாதம் முதல் எப்படிப் பிழைப்பது" என்ற திண்டாட்டம்.

தன் தமக்கையின் குடும்பமும், மாமன் குடும்பமும் இனிமேல் எப்படிப் பிழைக்கும் என்று பாலன் யோசிக்கிறான். மாமனின் மகள் கண்ணம்மா, பாலனின்மேல் உயிரையே வைத்திருக்கிறாள். ஏதாவது வகை செய்தாகவேண்டும் என்ற முனைப்பில், பாலன் பல நண்பர்களைச் சேர்த்துக்கொண்டு கூட்டுறவு முறையில் அரசாங்கத்தின் கணிசமான உதவியுடன் அந்தத்தோட்டத்தையே வாங்கிவிடுவது என்றுதீர்மானிக்கிறான். பெரும்பான்மை தொழிலாளர்களையும் மிகுந்த சிரமத்துடன் ஒன்றுபடுத்தி, பணமும் வசூல் செய்கிறான். தொழிலாளர்களின் ஒற்றுமையைக் குலைக்கச் சதி நடக்கிறது....

5. அறியாமையின் வெற்றி

அடுத்ததோட்டத்தில், தான் கண்டும் கேட்டும் வந்த செய்திகளில், சொல்லவேண்டியதை மட்டிலும் தன் குடும்பத்தாரிடம் சொல்லிவிட்டுப் படுக்கச் சென்றான் பாலன். அவனுக்குச் சிறிதுகூட உறக்கம் வரவில்லை. வீட்டிலிருந்த பெரியவர்களும் தன்னைப் போலவே கவலைப்படுவார்கள் என்று அவனுக்குத் தெரியும். "ஒரு பிரச்னையை எதிர்பார்த்து அங்கே போனால் கண்ணம்மாவும் இன்னொரு பிரச்னையாக வளர்ந்துவிட்டாளே!" என்று அவன் கலங்கினான்.

ஒருபுறம் நோட்டீஸ் கொடுக்கப்பட்ட தொழிலாளர்களது எதிர்காலத்தையும், மறுபுறம் கண்ணம்மாவின் எதிர்காலத்தையும் அவன் மாறிமாறி நினைத்துப் பார்த்தான். இரண்டுக்குமே நெருங்கிய தொடர்பு இருந்தது அவனுக்கு நன்றாகப் புலப்பட்டது. இந்த நோட்டீஸ் விவகாரம் ஒன்று குறுக்கிட்டிருக்காவிட்டால் கண்ணம்மாகூடத் தன்னோடு அவள் வாழ்வைப் பிணைத்துக்கொள்வதில் இவ்வளவு அவசரப்பட்டிருக்கமாட்டாள்.

மறுநாள் முதல் பாலன் பள்ளிக்கூட நேரம் போக மற்ற வேளைகளில் தன் தோட்டத்து இளைஞர்களுடன் கூடிப் பேசினான். அடிக்கடி அவனும் அடுத்த தோட்டத்துக் கணேசனும் சந்தித்தார்கள். கூட்டுறவுச் சங்கத்தில் தொழிலாளர்களை இணைப்பதற்கான முயற்சிகள் மும்முரமாக நடந்தன. ஒரு வாரத்துக்குள் விக்டரி எஸ்டேட் தோட்டத்தில் பாலனால் சுமார் நூறு பேர்களை ஒன்று திரட்ட முடிந்தது. கணேசன் உழைத்து வந்த தோட்டம் நோட்டீஸால் பாதிக்கப்பட்ட தோட்டம் என்பதனால் அங்கே முந்நூறு பேர் சங்கத்தில் சேர முன்வந்தார்கள்.

அக்கம்பக்கத்துத் தோட்டங்களுக்கெல்லாம் இளைஞர்களோடு படை எடுத்தான் பாலன். தலைநகர் கோலாலம்பூரிலிருந்து கூட்டுறவில் ஈடுபட்டிருந்த தலைவர்களை வரவழைத்து அங்கங்கே தோட்டங்களில் கூட்டங்கள் போட்டார்கள். இரவென்றும் பகலென்றும் பாராமல் சங்கத்தை நிறுவுவதற்கான வேலைகள் மும்முரமாக நடைபெற்றுக்கொண்டிருந்தன.

எப்படியாவது தலைக்கு நூறு வெள்ளி விதம் கொடுக்கச் சொல்லி, தொடக்கத்தில் ஆயிரம் தொழிலாளர்களைச் சங்கத்தில் சேர்த்துவிட்டால், அடுத்த தோட்டத்தைப் பறிபோகாமல் காப்பாற்றிவிடலாம் என்ற நம்பிக்கை அவர்களுக்குத் தளிர்விடத் தொடங்கியது. தேவையான பாக்கிப் பணத்தைச் சங்கத்துக்குக் கடன் கொடுக்க அரசாங்கமும் தயாராக இருந்தது.

முழுமூச்சைப் பிடித்துக்கொண்டு பாதிக்கிணறு தாண்டிவிட்டார்கள் இளைஞர்கள். கிட்டத்தட்ட அறுநூறு உறுப்பினர்களைச் சேர்த்துவிட்டார்கள். முயற்சியில் வெற்றி கிட்டும்போல் தெரிந்தது.

அந்தச் சமயத்தில்தான் திடீரென்று பல முனைகளிலிருந்தும் அவர்களுக்கு எதிர்ப்புகள் கிளம்பத் தொடங்கின.

தொழிலாளர்களின் ஒத்துழைப்புத் துவண்டுகொண்டு வந்தது.

"எந்தத் தோட்டத்துக்கு நோட்டீஸ் குடுத்தானோ அந்தத் தோட்டத்திலேயே இன்னம் பாதிப்பேரு சங்கத்திலே சேரலையே. நாங்க எதுக்காகச் சேரணும்?" என்றார்கள் சிலர்.

"பாலா. நீ ஏண்டா இந்த வம்பிலே மாட்டிக்கிறே? உங்க தோட்டத்துக்கு ஒண்ணும் நோட்டீஸ் கொடுக்கலையே?" என்றார்கள் வேறு சிலர்.

"நீயோ பள்ளிக்கூட வாத்தியார். உன்னோட வேலை புள்ளைங்களுக்குப் பாடம் சொல்லிக்கொடுக்கிற வேலை. அதை விட்டுட்டு நீ ஏன் எங்க வேலையிலே தலையிடணும்?" என்ற கேள்வியும் எழாமல் இல்லை.

தோட்டத் தொழிலாளர்களான தமிழர்களில் பலவகைப்பட்டவர்களுடன் பேசவும் பழகவும் பாலனுக்கு இந்த முயற்சி ஒரு வாய்ப்பை அளித்தது. எந்த அளவுக்கு அவர்கள் வெளி உலக வாழ்க்கையிலிருந்து ஒதுங்கி, தங்களுக்கென ஓர் இருள் சூழ்ந்த உலகை உற்பத்தி செய்துகொண்டு வாழ்கிறார்கள் என்பது அப்போதுதான் அவனுக்குத் தெளிவாகப் புலப்பட்டது. அடுத்த வீட்டின் கூரையில் நெருப்புப் பற்றிக்கொண்டு எரிவதைக் கண்ட பிறகும் அவர்களில் பலருக்குப் பதற்றம் ஏற்படவில்லை. அதே நெருப்புத் தங்கள் கூரைக்கும் தாவக்கூடும் என்ற விழிப்பு உணர்ச்சியே அங்கே பலரிடம் காணோம். ஏன், பற்றி எரியும் வீட்டுக்குள் இருந்தவர்களுக்கே அந்த நெருப்பை அணைக்கவேண்டுமென்ற துடிப்போ முயற்சியோ இல்லை.

இயந்திர கதியில் உழைப்பது, கிடைப்பதைச் சாப்பிடுவது, தொழுவங்கள் போன்ற இடங்களில் நெருக்கியடித்துக்கொண்டு முடங்கிக்கொள்வது, இயற்கையின் தூண்டுதலுக்கு இரையாகி வருஷந்தோறும் புதிய கூலிகளை உருவாக்குவது, பழைய சம்பிரதாயங்கள் சடங்குகளில் ஊறித்துப்போனவற்றைக்கூட உதறிவிடாமல் இறுக்கமாகப் பற்றிக்கொள்வது, புதிய மாற்றங்களையும் வளர்ச்சிகளையும் கண்டு அவற்றுக்கு ஏற்பத் தங்களை உருவாக்கிக்கொள்ளாமல் சோம்பிக் கிடப்பது-இப்படிப்பட்டதோர் உலகத்தின் மத்தியில், தான் பிறந்து வளர்ந்திருப்பதைப் பற்றிய தெளிவு முதல் முறையாகப் பாலனுக்கு அப்போது ஏற்பட்டது.

ஒருநாள் பிற்பகல் கணேசனுடன் நாலைந்து இளைஞர்கள் பாலனைத் தேடிக்கொண்டு அவன் வீட்டுக்கு வந்தார்கள். வீட்டின் கீழ்ப் பகுதியில் கிடந்த மரப் பெஞ்சுகளில் எல்லாரும் அமர்ந்தார்கள்.

கணேசனின் கண்கள் பாலனைப் பார்த்தபோது கலக்கமுற்றிருந்தன.

"என்ன கணேசா? என்ன நடந்தது?"

"நம்ம கூட்டுறவு முயற்சியைத் தோற்க அடிச்சிட்டாங்க பாலா! நம்மாலே இனிமே 'ஒண்ணுமே செய்ய முடியாது!"

"நடந்ததைச் சொல்" என்றான் பாலன்.

"நாம கூட்டங்கள்போட்டோம், ஆர்ப்பாட்டங்கள் செஞ்சோம், அலைஞ்சு திரிஞ்சோம்; அறுநூறு பேருக்கு மேலே பிடிச்சு அறுபதினாயிரம் வெள்ளியைச் சேர்த்திருக்கோம். ஆனால் இவ்வளவும் நடந்த பிறகு, நாம் கண்ட கனவெல்லாம் பகல் கனவாப் போயிடும் போலே இருக்கு. எங்க தோட்டத்தைத் துண்டு போட்டு விலைக்கு வாங்கப் போற குட்டி முதலாளிமார்கள் காதும் காதும் வச்சாப்பிலே நம்ம கழுத்தை அறுத்திட்டாங்க!"

"என்ன?" பதற்றத்தோடு கேட்டான் பாலன்.

"எங்க தோட்டத்திலே வேலை செய்யிற தொழிலாளர்களையே ரகசியமா ஆள் அனுப்பிக் கலைச்சிருக்காங்க. கூட்டுறவுச் சங்கம் ஏற்படாமல் இருந்தால்தான் அவங்களாலே எங்க தோட்டத்தைத் துண்டு போட்டு வாங்க முடியும். அதுக்காகக் குப்புசாமியை கையாளா வச்சிக்கிட்டு, அவனைக் கிழறுப்பு வேலை செய்ய விட்டுட்டுப் பழைய வாகத்தையும் கைக்குள்ளே போட்டுக்கிட்டு வேலை செய்யறாங்க!"

"நம்மவங்க குப்புசாமி பேச்சைக் கேக்கலாமா?"

"சங்கத்திலே சேராதவங்களுக்குப் புது நிர்வாகத்திலே வேலை கொடுக்கப் போறதா ஆசை காட்டியிருக்காங்க. நாமெல்லாம் கூட்டுறவுங்கிற பேராலே பணம் வசூல் பண்ணிக் கூட்டுக் கொள்ளை அடிக்கப் போறோமாம். தோட்டத் துண்டாடல்காரங்க, நாம பணத்தைக் கையாடல் செய்யிறதாய்ப் புரளியைக் கிளப்பி விட்டிருக்காங்க. நேத்தே எங்க தோட்டத்துக்காரங்க ஐம்பது அறுபது பேர் வந்து, சங்கத்துக்குன்னு கொடுத்த பணத்தைத் திருப்பி வாங்கிட்டுப் போயிட்டாங்க."

பாலனுக்கு என்ன செய்வதென்று புரியவில்லை. பணம், தொலைபேசி, கார், செல்வாக்கு, தொழில் அநுபவம் இவ்வளவும் உள்ள சிறு கூட்டத்தின் வலிமை வாய்ந்த குரல்வளைப் பிடியிலிருந்து தொழிலாளர்களை விடுவிப்பது என்பது மலையைப் புரட்டுவதைவிடக் கடினமான வேலையாகத் தோன்றியது. விளக்கை நம்பிச் சுழலும் விட்டில் பூச்சிக் கூட்டத்தைப்போல், தங்களுக்கு நோட்டீஸ் விடக் காரணமாக இருந்தவர்களையே அவர்கள் நம்பத் தொடங்கிவிட்டார்கள்.

"உன்னையும் என்னையும் தப்பாப் பேசறாங்க. நோட்டீஸை ஒரு சாக்காகச் சொல்லி நாம காசு சேர்த்துக்கறதுக்காக இப்படிச் செய்யறோம் என்கிறாங்க."

வருத்தத்தோடு சிரித்துவிட்டு, "பேசறதோடு விட்டாங்களே!" என்றான் பாலன்; "தென்னாப்பிரிக்காவிலே உள்ள இந்தியர்களைக் காப்பாத்தறதுக்காக மகாத்மா காந்தி முயற்சி செய்தப்போ, அவரை ஓர் இந்தியனே கொலை செய்யத் திட்டமிட்டான். கடைசி கடைசியா, இந்தியாவிலே கூட அவரை ஓர் இந்தியன்தான் கொலை செய்தான். பொது வேலைன்னு இறங்கிட்டா, நம்ம மனசாட்சிக்கு விரோதமில்லாமல் நடக்கணுமே தவிர, ஏச்சுக்கும் பேச்சுக்கும் பயந்தால் முடியாது."

அந்தச் சமயம் பார்த்து அங்கே பத்துப் பன்னிரண்டு தோட்டத் தொழிலாளர்கள் பாலனைத் தேடிக்கொண்டு வந்து சேர்ந்தார்கள். வந்தவர்களில் வயது முதிர்ந்தவர்களும் நடுத்தர வயதுக்காரர்களும் கலந்திருந்தார்கள்.

"எங்களுக்கெல்லாம் சங்கத்திலே சேர்ரதுக்கு இஷ்டமில்லே. பணத்தைத் திருப்பிக் குடுத்திடுங்க" என்று தொடங்கினார் ஒரு முதியவர்.

"ஆமா, பொண்டு புள்ளைங்க காதிலே கழுத்திலே போட்டிருந்ததை அடகு வச்சு நான் பணம் குடுத்திருக்கேன். என் வீட்டுக்காரி சத்தம் போடறா" என்றார் அடுத்தவர்.

"நம்ம தோட்டத்துக்கு இப்போ ஒண்ணும் வந்திடலே. இதையும் விலை பேசி நோட்டீஸ் குடுத்தாங்கன்னா, அப்போ கூட்டுறவுச் சங்கத்தை ஏற்படுத்திக்கிடுவோம். நானும் கடன் வாங்கித்தான் காசு குடுத்திருக்கேன். திரும்பித் தந்திடுங்க."

கணேசனுடன் வந்திருந்த இளைஞர்களில் ஒருவனான வீராசாமிக்குக் கோபம் வந்துவிட்டது.

"நீங்கள்ளாம் யாரோட போதனையிலே இப்படிப் பேசுறீங்கன்னு எனக்குத் தெரியும். இதுக்குள்ளே சங்கத்துக்காக வாங்கின பணத்திலே, சங்க வேலைக்காகவே ரெண்டாயிரம் வெள்ளிக்கு மேலே செலவு செஞ்சிருக்கோம். தோட்டந் தோட்டமாக வாடகைக்குக் காடி புடிச்சுக்கிட்டுச் சுத்தியிருக்கோம். கோலாலம்பூரிலேருந்து தலைவர்களைக் கூட்டிவந்து கூட்டம் போட்டிருக்கோம். சங்க வேலையா நம்ப ஆட்களைத் தலைநகரத்துக்கு அனுப்பியிருக்கோம். இவ்வளவும் செய்தப்பறம் பணத்தைத்திருப்பிக் கேக்கிறீங்களே?" என்றான். வீராசாமிதான் சங்க முயற்சித் திட்டத்தின் தற்காலிகப் பொருளாளர்.

தொடங்கும்போது இளைஞர்கள் சிலர் முதலில் அவரவர் கைப்பணத்தைப் போட்டுத்தான் அதைத் தொடங்கினார்கள். பாலன் கூடத் தன் குடும்பத்தார் நால்வர் சார்பிலும் நானூறு வெள்ளி திரட்டிக் கொடுத்திருந்தான். அவ்வளவு தொகையைக் குறுகிய காலத்தில் தேடிக் கொடுப்பது என்பது அவன் சக்திக்கு மீறிய செயல்தான். என்றாலும் எப்படியோ பல்லைக் கடித்துக்கொண்டு அவன் அதைச் செய்திருந்தான். அப்படித்தான் சிரமப்பட்டு மற்றத் தொழிலாளர்களும் பணம் திரட்டியிருப்பார்கள் என்பது அவனுக்குத் தெரியாமல் இல்லை.



பாலன் குறுக்கிட்டு வீராசாமியைக் கையமர்த்தி விட்டு, வந்தவர்களைப் பார்த்துப் பேசலானான்:

"வெள்ளம் வர்ரதுக்கு முன்னாலேயே நாம அணை போட்டிருக்கணும். அதை நாம செய்யலே. வெள்ளமோ இப்போ வந்திடுச்சு. அடுத்த தோட்டத்திலே உள்ள நூறுக்கு மேற்பட்ட குடும்பங்களை அது அடிச்சுக்கிட்டுப் போகப் போகுது. இப்பவாவது நாமெல்லாம் ஒண்ணு சேர்ந்து வெள்ளத்தைத் தடுத்து நிறுத்தலாம்னு பார்க்கிறோம். இந்த மண்ணை நம்ப சொந்த மண்ணுன்னு சொல்லிக்கிறோம். அவ்வளவுதான். ஆனால் நமக்கு ஒரு பிடிமண்ணுகூட இதுவரையில் சொந்தமில்லே. வீடு நமக்கில்லை; தோட்டம் நமக்கில்லை; பாதுகாப்பான வாழ்க்கை நமக்கில்லை. கூட்டுறவிலே தோட்டம் வாங்கிறதிலே உள்ள அர்த்தத்தை நீங்க புரிஞ்சுக்கணும். நாமெல்லாம், நம்ப குடும்பமெல்லாம், இந்த மண்ணில் ஆணிவேர் விட்டு நிலைக்கிறதுக்கு இது ஒரு வழிகாட்டும். நாம ஒவ்வொருத்தரும் எல்லாருக்காகவும், எல்லாரும் ஒவ்வொருத்தருக்காகவும் வாழவேணும் என்கிற கொள்கைதான் கூட்டுறவுக் கொள்கை. இதிலே அரசாங்கம் நமக்கு உதவி செய்ய முன்வந்திருக்கு. இதை நாம்ப நழுவ விட்டுடப்படாது. தயவுசெய்து யோசனை செய்து பாருங்க."

பாலன் இன்னும் என்னவெல்லாமோ எடுத்துச் சொல்லி அவர்கள் மனத்தை மாற்ற முயன்றான். அவனுடைய எந்தப் பேச்சும் அவர்களிடம் எடுபடவில்லை.

கள்ளச் சாராயத்தின் ஆதிக்கத்தில் வந்திருந்த ஒருவன், "சரிதான் வாத்தியாரே நீ புள்ளைங்களுக்குப் பள்ளிக்கூடத்திலே பாடம் சொல்றதோடு நிறுத்திக்க; எங்களுக்கு ஒன்னும் சொல்ல வேண்டாம்" என்றான்.

"எங்களோட பணம் எங்களுக்கு வேணும்; அதுவும் இப்பவே வேணும்."

அங்கே வந்திருந்த கூட்டம் ஓர் உறுதியோடு வந்திருந்தது. கூட்டுறவுக்காகப் பாடுபட்டு வந்த இளைஞர்களின் நோக்கத்தையும் நாணயத்தையும் அது இப்போது சிறிதுகூட நம்புவதற்குத் தயாராக இல்லை.

அதேபோல் மேலும் சிலர் அங்கே வந்தார்கள்; இன்னும் சிலர் வந்தார்கள். பாலனின் வீட்டுக்கு முன்னால் ஒரு கூட்டமே கூடிவிட்டது. பாலனின் அப்பா வீரப்பனுக்கும் அம்மா வேலம்மாளுக்கும் தங்கள் பிள்ளை ஏதோ செய்யக் கூடாததைச் செய்துவிட்டு அப்போது குற்றவாளிக் கூண்டில் நிற்பதுபோல் தோன்றியது.

"ஊர் வம்பு நமக்கு எதுக்கப்பா?" என்று கெஞ்சினாள் வேலம்மாள்.

"விருப்பமில்லாதவங்களைக் கட்டாயப் படுத்தறதிலே புண்ணியமில்லே" என்றான் வீரப்பன்.

பாலன் தலையைக் குனிந்து கொண்டு சிறிது நேரம் மௌனமாக இருந்தான். தமிழ்ச்சாதியின் தலைவிதி வேறு விதமாக இருந்தால் அதை மாற்றி எழுதுவதற்குத் தங்களைப் போன்ற அப்பாவிகளால் முடியாது போலும் என்ற எண்ணம் அவனைப் பற்றி உலுக்கியது.

"கணேசா, புறப்படு!" என்று சொல்லிவிட்டு எழுந்தான் பாலன்; "எல்லார் கிட்டயுமே பணத்தைத் திருப்பித் கொடுத்திடலாம்."

சைக்கிள்களில் புறப்பட்டார்கள் சிலர்; நடந்தார்களே சிலர்; தோட்டத்து வாயில் வரை சென்று பஸ்ஸுக்குக் காத்திருந்தார்கள் சிலர்.

"தெரியாமலா சொல்லியிருக்கான், இளம்புள்ளே போட்ட வேளாண்மை வீடு வந்து சேராதின்னு!" என்று இடித்துச் சொன்னார் வயதில் முதியவரான ஒரு தொழிலாளி.

கணேசனின் வீட்டில்தான் பணமும் கணக்குப் புத்தகங்களும் இருந்தன. திருப்பிக் கேட்டவர்களுக்கெல்லாம் கணக்கெழுதிக் பணத்தைக் கொடுக்கச் சொன்னான் பாலன். பொருளாளர் வீராசாமி குறுக்கிட்டு ஒரு யோசனையை வெளியிட்டான்.

"ரெண்டாயிரத்துக்கு மேலே செலவாயிருக்கு. இதை ஒவ்வொருத்தர் கணக்கிலேயும் கழிச்சுக்கிட்டுக் கொடுத்தா, ஆன செலவை எல்லாரும் பகிர்ந்துக்கிட்டாப்பிலே இருக்கும்."

"வேண்டாம்" என்றான் பாலன் "இந்த முயற்சியிலே முன்னுக்கு நின்ற பத்துப் பதினைஞ்சு பேர் இந்த நஷ்டத்தை ஒத்துக்குவோம். நான் நாலு பேருக்கு நானூறு வெள்ளி கொடுத்திருக்கேன். அதைச் செலவு எழுதிடுங்க. இது மாதிரி உங்களிலே தாங்கக் கூடியவங்க தாங்கிக்கிங்க.

"பாலா!" என்று கத்தினான் கணேசன்; உனக்கோ, உங்க தோட்டத்துக்கோ நோட்டீஸாலே ஆபத்து வந்திடலே; நீ எதுக்காக எங்களுக்காக உன்னோடை கையை அறுத்துக்கணும்?"

"உங்களுக்காக நான் நஷ்டப்படலே; இந்தத் தமிழ்ச் சாதியோட ரத்தம் என்னோடை உடம்பிலேயும் ஓடுது. ஊர் உலகத்தைப் போலே இந்த நாட்டிலே அதுவும் நல்லா வாழணும்னு நான் ஆசைப் பட்டேன். அந்த ஆசைக்குக் காணிக்கையா இதை வச்சுக்குங்க. என்னோடை நஷ்டம் வெறும் நானூறு வெள்ளியில்லை கணேசா! அது ஈடுகட்ட முடியாத நஷ்டம். நோட்டீஸ் கெடு தீர்ந்தவுடனே நடுத் தெருவிலே நிற்கப் போறாங்க பார், அவங்கதான் என்னோடை உண்மையான நஷ்டம்." பாலனின் குரல் தழுதழுத்தது.

கேட்பவர்களுக்கெல்லாம் பணத்தைத் திருப்பிக் கொடுக்கச் சொல்லிவிட்டு, அங்கே இருந்து அந்தக் காட்சியைக் காண விரும்பாதவன்போல் தன் மாமன் பழனியின் வீட்டுக்குக் கிளம்பினான் பாலன்.

[தொடரும்]

அளவுகோல்

கா. கலியபெருமாள்



மலை தூக்கிக் கடுகாக்கி விந்தை செய்து
மாநிலத்தில் தினந்தினமும் புதுமை சேர்க்கும்
மலைக்காத முயற்சிமிகு மனிதா கேளாய்!
மன்னவனே நின்பதிலைத் துணிந்து கூறாய்!
தொலையாத அளவுகோல் பலவுங் கண்டாய்!
தொலைகின்ற மனிதனை எதிலே நின்றாய்?
அலைகின்ற மனத்துள்ளே இருக்கும் ஆசை
அறிகின்ற கோலிருந்தால் எனக்குத் தாராய்!

நாய்பூனை புலிகரடி யானை கூட
நல்லன்பால் மனிதனையே அளந்து வாழும்!
பேய்பூதம் ஆவியெனும் பிசாசும் கூடப்
பிழையற்ற நல்லருளால் ஒதுங்கிப்போகும்!
வாய்மட்டும் இனிப்பாகி மனத்துக் குள்ளே
வளர்நஞ்சைத் தினம்பெய்து கலந்தே வாழும்
மாய்மகனும் மனிதனென்றும் புதுவி லங்கின்
மனமளக்கக் கோலிருந்தால் விரைந்து தாராய்!

ஏறுவதற் கேணியொன்று வைத்துப் பின்னர்
ஏறவிட்டே எட்டியதை உதைத்துத் தள்ளி
ஏறியவர் விழுந்தபின்னர் இணைந்து நின்று
எங்ஙனந்தான் விழுந்தாயோ என்று நொந்து
கூறியவர் அழுகின்ற காட்சி கண்டேன்;
கொடும்பாவி இவரென்றே ஒதுங்கிச் செல்லப்
பாரினிலே அளவுகோல் ஒன்று வேண்டும்!
படைத்திருந்தால் உடனடியாய்
அனுப்பி வைப்பாய்!

வசியம் செய்யுங்க சார்

'ஆவன்னு'

இந்த வசியவித்தை இருக்கிறதே, இதைப்பற்றி மிகச் சாதாரணமாக எண்ணிவிடாதீர்கள். இதில் அறவே நம்பிக்கை இல்லாதவர்கள்போல் பலர் வெளியில் பேசிக்கொண்டாலும் "இதைக் கற்றுக்கொண்டால் எவ்வளவு நன்றாக இருக்கும்" என்று அந்தரங்கத்தில் அவர்களுக்கு நிச்சயம் ஆவல் இருந்தே தீரும். இது ஏமாற்று வித்தை என்று சொல்பவர்கள் "ஒருவேளை இது பலித்தாலும் பலித்துவிடுமோ" என்று எண்ணவே செய்வார்கள். நான்கு பேர் முன்னால் அலட்சியமாகப் பேசிவிட்டு இரகசியமாகமாந்திரீகர்களைச் சந்திப்பவர்கள் அநேகர்.

எப்படிப் பார்த்தாலும் இந்த வசியவித்தை பலரின் மனதை நெருடிக்கொண்டு இருக்கிறது என்பதில் ஐயமில்லை. இந்த நெருடலினால் உந்தப்பட்டுப் பணத்தை இழந்தவர்களுக்கும் இனி இழக்கத் தயாராக இருப்பவர்களுக்கும் ஒரு வார்த்தை: போலிகளை நம்பி ஏமாறுதீர்கள். உங்களுக்கு உதவ வேண்டும் என்னும் நோக்கத்தில் கைகண்ட, நம்பகமான, உத்தரவாதமான, நூற்றுக்கு நூறு பலனளிக்கக்கூடிய சில வசிய முறைகள் கீழே தரப்பட்டுள்ளன.

அ) சுடுகாட்டில் பிணத்தைச் சுற்றிவந்து உடைக்கும் தோண்டியோட்டில் கொஞ்சம் எடுத்து, அங்குப் பிணஞ்சுட்ட கரியினால் நினைத்த பெண்ணின் பெயரை அதில் எழுதி அவளின் படுக்கைத் தலைமாட்டண்டை புதைத்துவைக்க வசியமாவாள்.

ஆ) ஆதிவாரங்காலையில் கொட்டைக்கரந்தைச் செடியைச் சுத்தஞ்செய்து, தூப தீபங்கொடுத்துச் சாப நிவர்த்தி செய்து "அதிதேவதா பிரதி தேவா" என்று ஆயிரத்தெட்டு உரு செபித்து ஆணிவேர் அறுந்துபோகாமல் பிடுங்கிவந்து அதனுடன் பேயத்தியைச் சேர்த்துப் பேய்க்கருப்பன் சாற்றில் ஆட்டி சுண்டைக்காய்ப் பிரமாணம் மூன்று குளிகை எடுத்துக் காலின் பெருவிரல் ரத்தத்தில் நனைத்துக் காயவைத்து வாழைப் பழத்தில் மூன்றுநாள் கொடுக்க வசியமாம்.

இ) பச்சைக் கற்பூரம், பச்சைப் புனுகு, பாம்பு நஞ்சு, கோரோசனை, பொன்னரிதாரம், மின்மினிப்பூச்சி, சுழல்வண்டு, கௌசம்பை, நிலத்துத்தி, சிறுதுத்தி, தொட்டால்வாடி ஆகியவற்றைக் காராம்பசுவின் நெய்யில் அரைத்துச் சிமிளில் அடைத்துக்கொண்டு திலகமிட வசியமாம்.

ஈ) நல்லபாம்பைக் கொன்று வடக்கே தலையும் தெற்கே வாலுமாகக் கிடத்தித் தவடையையறுத்து நாக்கை எடுத்து மோதிரத்தில் அடைத்து விரலில் அணிந்துகொள்ள நினைத்த பெண் வசியமாம்.

உ) எருமையைக் கடித்த அட்டையை எடுத்து அதன்பேரில் இரசம் பூசி அதன் எடைக்கு உளுத்த மாமரத்தின் பொடியைச் சேர்த்துப் பன்னீர் விட்டு மைபோல் அரைத்துச் சிமிளில் வழித்து வைத்துக்கொண்டு தேங்காய், பழம், தூப தீபத்துடன் சாம்பிராணி புகை கொடுத்து "வசிவசி" என்று ஆயிரத்தெட்டு உருகொடுத்து மையை எடுத்துப் புருவத்தில் தடவிக்கொண்டு விரும்பிய ஸ்திரீயின் முகத்தைப் பார்த்து "வசியம்"என்று ஏழுதரம் சொல்லி முன்நடந்து போக அவள் பின்தொடர்ந்து வருவாள்.

ஊ) பொற்றலைக்கையான், மலர்ச்சிகைப்பூண்டு, கருநாய் நாக்கு, சுழல்வண்டு இவற்றைச் சம எடை எடுத்துப் பொடிசெய்து வெள்ளைத் துணியில் வைத்துத் திரி திரித்து தலைச்சன்பிள்ளையின் மண்டையோட்டில் காராம் பசுவின் நெய் ஊற்றிக் கொளுத்தித் திலகமிட்டுச் செல்ல வசியமாம்.

எ) காந்தம், மனோசிலை, இந்திர கோபப்பூச்சி, ஆறு புள்ளி வண்டு, சுழல்வண்டு, குழியானை, கஞ்சா, நிண்ணுசிணுங்கி, களிப்பாக்கு, தொட்டாற் சுருங்கி இவற்றையெல்லாம் பேய்க்கருப்பன் சாற்றில் அரைத்து, துவரைப் பிரமாணம் குளிகை திரட்டி நிழலில் உலர்த்திக் கொடுக்க வசியமாம்.

உடனடியாக இந்த வசிய முறைகளைச் சோதித்துப் பார்க்க விரும்புவோர் தாராளமாகச் செயலில் இறங்கலாம். ஆனால் ஏற்படவிருக்கும் பலாபலன்களுக்கும் மாட்டிக் கொள்ளப்போகும் வம்புதும்புகளுக்கும் அவரவர்களே பொறுப்பு ஏற்றுக்கொள்ளவேண்டும்.

குரு இல்லாத வித்தை பயன்படாது என்பார்கள்; இந்த வசிய முறைகள் யாவும் ஒரு மாந்திரீக நூலிலிருந்து சொல்லுக்குச் சொல் அப்படியே எடுக்கப்பட்டவை. எனவே அந்த மூல நூலின் ஆசிரியரையே குருவாகக் கொண்டு காரியத்தில் ஈடுபடலாம். யார் மேலாவது பழிபோடவேண்டிய நிலைமை வருமானால் [நிச்சயம் அப்படியொரு நிலைமை வரும்] குருநாதர் மேலேயே பழிபோட்டுக் கொள்வதைத் தவிர்த்து வேறு வழியில்லை! அவர் பாடு! வசியவித்தை ஆர்வலர்கள் பாடு!

கலையமுதம்



கலைஞர் ஜெபமாலைதாசுடன் பாடகர் டி.ஜே.தேவ்

புற்றுநோய் காரணமாக ஒரு காலை இழந்த சித்தார் கலைஞர் திரு. ஜெபமாலைதாஸ் அவர்களின் துயரத்தை உணர்ந்து, அவர் வாழ்வில் மறுமலர்ச்சி ஏற்படுத்த வேண்டுமென்ற நல்லெண்ணத்தோடு, மலேசிய வானொலிக் கலைஞர்களின் துணைகொண்டு சுங்கைவே—சுபாங் தமிழ் இளைஞர் மணிமன்றத்தினர் கடந்த 6-5-77 வெள்ளிக்கிழமை மாலை தேவான் பகாசா டான் புஸ்தகா மண்டபத்தில் "கலையமுதம்" என்னும் தரமான நிகழ்ச்சியை நடத்தினர்.

இந்நிகழ்ச்சியில் நம்நாட்டு முன்னணிப் பாடகர் பாடகிகள் பலரின் குரல்வண்ணங்கள் ஒலித்ததோடு, மலாய் இசைத்தட்டு விற்பனையில் சாதனை புரிந்துள்ள டி.ஜே. தேவும் இந்தி, மலாய்ப் பாடல்களைப் பாடிக் "கலையமுதம்" மேலும்சுவைபெறத் துணைபுரிந்தார். நடனங்களும் கண்களுக்கு விருந்தளித்தன. "சிவரஞ்சனி", "இசை மலர்" இசைக் குழுவினரும் தங்கள் பணியைச் சிறப்பாகவே செய்திருந்தனர்.

கலைமகள் ஆர்ட்ஸ், ஐயப்பன்—ஸ்டான்லி குழுவினர் வழங்கிய நகைச்சுவை விருந்து சிரிக்கவைத்தது. சா. ஆ. அன்பானந்தன் குழுவினரின் "முன்னும் பின்னும்" என்னும் நகைச்சுவைச் சித்திரம் சுவையும், காரமும் கொண்டிருந்ததால் சிரிப்போடு சிந்திக்கவும் வைத்தது!

"கலையமுதம்" மூலம் கணிசமான நிதி கிடைத்திருக்கலாம். மேலும் எப்படியாவது ஐயாயிரம் வெள்ளியைச் சேர்த்து திரு. ஜெபமாலைக்கு விரைவில் ஒரு தையற்கடை அமைத்துத்தர உறுதிகொண்டுள்ள மன்றத்தினரின் நல்ல நோக்கம் பூரண வெற்றியடையட்டும்!

—ராஸ்மன்

இளம் எழுத்தாளர்கள்

முருகு சுப்பிரமணியன்

மலாயாவில் இளம் எழுத்தாளர்கள் எழுதிக் குவிக்கும் சிறுகதைகளைப் பற்றி ஒரு விமரிசனக் கட்டுரை எழுதவேண்டுமென நீண்ட நாளாக எண்ணியதுண்டு. அந்த எண்ணம் இப்பொழுதுதான் நிறைவேறுகிறது.

இளம் எழுத்தாளர்களிடம் எனக்குத் தனி அன்பு உண்டு. நான் அவர்களை "அநுதாபக் கண்ணோடு" நோக்குகிறேன். பெருமைக்காக இவ்வாறு சொல்லிக்கொள்ளவில்லை. பல "பெரிய" எழுத்தாளர்கள் இளம் எழுத்தாளர்களை ஏறெடுத்தும் பார்ப்பதில்லை. அவர்கள் எழுதுவதெல்லாம் "குப்பை" என்பது அந்தப் பெரியவர்களின் கருத்து. இன்னும் சிலருக்கு மறுமலர்ச்சி இலக்கியம் என்றாலே வேப்பங்காய். "வள்ளுவனும் கம்பனும் வளர்த்த தமிழை மேலும் வளர்க்க இந்தப் பொடியர்கள் யார்? இவர்களுக்கு என்ன தெரியும்? குறளில் ஒரு வரிக்கு உரைபோடக் காணுமா இவர்களின் எழுத்து?" என்று பேசும் மெத்தப் படித்தவர்களும் உண்டு. அவர்களுக்குச் சொந்தச் சாகுபடி செய்யத் தெரியாது. யாராவது சங்க இலக்கியமோ தொல்காப்பியமோ இயற்றிவைத்திருந்தால் அதனைப் படித்து உருப்போட்டுக்கொண்டிருப்பார்கள். அவர்கள் "மனநிறைவு" கொண்டவர்கள். தமிழ் இலக்கிய வளர்ச்சி கம்பனோடும் சேக்கிழாரோடும் நிலைகுத்திவிட்டதென்பது அவர்களின் அசைக்கமுடியாத முடிவு.

இவர்களைப்போல வள்ளுவனும் கம்பனும் எண்ணியிருந்தால் நமக்கு உலகம் போற்றும் திருக்குறளோ, தமிழ்க்கடலான இராமகாதையோ கிடைத்திருக்குமா? புதிதாக ஆக்கவேண்டும் என்னும் துடிப்பு, மொழி வளர்ச்சிக்கு அடிப்படை. அந்தத் துடிப்பை மட்டந்தட்டி விணுக்கு வது இலக்கியம் பேண விரும்புகிறவர்களின் பொறுப்புள்ள செயலாகாது.

திருத்தவேண்டும்

இளம் எழுத்தாளர்களிடமும் மறுமலர்ச்சி எழுத்தாளர்களிடமும் எவ்வளவோ குறைகள் உண்டு. அக்குறைகளை எடுத்துக்காட்டித் திருத்தவேண்டுமேயொழிய அவர்களைத் தலைதூக்கவிடாமல் அழுத்திவிடக்கூடாது. அவர்களில் பலர் தமிழ்க்கொலை செய்கிறார்கள் என்பது உண்மையே; அந்தக் கொலைகளை எடுத்துக்காட்டி வன்மையாகக் கண்டிப்பது தமிழ் வளர்ச்சிக்கு இன்றியமையாத பணி என்பதையும் ஒப்புக்கொள்கிறேன். அதே சமயத்தில் அந்த எழுத்தாளர்களிடம் உள்ள படைப்பாற்றலையும் கலையுணர்வையும் எழுத்துத் திறனையும் போற்றி ஊக்குவதும் அவசியமாகும்.

இளம் எழுத்தாளர்களிடம் நான் "அனுதாபம்" காட்டுவதற்கு முதன்மையான காரணம் இதுதான்.

இளம் எழுத்தாளர்களில் நாற்றுக்குத் தொண்ணூறு பேர் எழுதுவது "குப்பை" என்பதை யாரும் மறுப்பதற்கில்லை. நாற்றில் ஒருவர் மணியான எழுத்தாளராக எதிர்காலத்தில் வரக்கூடும். குப்பையில் குன்றிமணியாக விளங்கும் அந்த ஒருவரைக்கண்டுபிடித்துக் கைதூக்கி விடுவது, இளம் எழுத்தாளர்களை ஊக்கினால்தான் நிறைவேறும். இன்று புகழ்படைத்த எழுத்தாளர்களாகத் திகழும் எல்லா எழுத்தாளர்களுமே ஒருகாலத்தில் பத்திரிகை ஆசிரியர்களின் "தயவை" எதிர்பார்த்து ஏங்கிய இளம் எழுத்தாளர்களே. இந்த உண்மையை நினைவிற்கொண்டால் புதிய எழுத்தாளர்களைப் புறக்கணிப்பதில் உள்ள "இழப்பை"ப் புரிந்துகொள்ள முடியும்.

ஃ ஃ ஃ

மலாயாவில் புதிய எழுத்தாளர்கள் நாற்றுக்கணக்கில் இருக்கிறார்கள். அவர்களில் விரல்விட்டு எண்ணக்கூடிய ஒரு சிலரிடமே உண்மையான எழுத்தாற்றல் இருக்கிறது. அவர்களிடமும் சுட்டிக்காட்டக்கூடிய குறைகள் இருப்பினும் நான் முன்பு கூறிய படைப்பாற்றலை அவர்களிடம் காணமுடிகிறது. பெயர்களைக் குறிப்பிட்டால் பொறுமையும் எரிச்சலும் ஏற்படலாமாதலால் பொதுப்படையாகவே குறைநிறைகளைக் கூறவிரும்புகிறேன்.

பெருகவேண்டும்

மலாயாவில் தமிழில் எழுதுகின்றவர்களின் தொகை பெருகவேண்டுமென்னும் உண்மையான ஆர்வம் உள்ளவர்கள் நான் இங்கே சுட்டிக்காட்டும் குறைகளை ஏற்பது திண்ணம்.

மலாயாவில் இளம் எழுத்தாளர்கள் எழுதும் பெரும்பாலான கதைகள் காதலை அடிப்படையாகக் கொண்டிருக்கின்றன. காதல் கதைகள் எழுதுவது பாவமான காரியமென்று நான் சொல்லமாட்டேன். எனினும் காதல் இல்லாமல் கதை எழுத முடியாதென்று நினைப்பது தவறு. காதலைப் பற்றி எவ்வளவு எழுதினாலும் சலிக்காது என்பது உண்மையே. ஆனால் இங்கு எழுதுகிற புதியவர்கள் காதலையே கசக்க வைத்துவிட்டார்கள். ஆகவே ஒரு சில ஆண்டுகளுக்காவது காதல் கதைகள் எழுதுவதில்லை என்று நம் இளம் எழுத்தாளர்கள் விரதம்பூண்டால் நன்மையாக இருக்கும்.

கைம்பெண்ணுக்குத் திருமணம்

தாய்லாந்தில் தமிழ்

"தாய்லாந்தில் சிறப்பாகத் தமிழ்ப்பாக்களைத் தாய் மன்னரின் முடிசூட்டு விழாவில் பாடி வருகின்றனர் என்பதை இன்று தமிழர்கள் சிலரேனும் அறிவர். பேங்காக் மாநகருக்குச் சென்றிருந்த பொழுது இந்து சமயப் பிராமணர் என்பவர் இருக்கும் கோவில்களைப் பார்க்கச் சென்றேன். அங்கு அவர்களுடைய ஏடுகளிலிருந்து, தம் மன்னரின் முடிசூட்டுவிழாவில் பாடிவரும் செய்யுட்களை அவர்கள் பாடிய பொழுது, தமிழ் என்று அறியாது பாடும் "ஆதியும் அந்தமும்...சோதியை" எனும் திருவெம்பாவைப் பாட்டைக் கேட்டுப் பெருவியப்பு எய்தினேன்.

திருப்பாவை, திருவெம்பாவைத் திருநாட்களைப் பண்டு மிகவும் சிறப்பாகக் கொண்டாடி வந்தனர் தாய்லாந்து நாட்டு மக்கள். அக்கொண்டாட்டம், பொதுமக்களின் கொண்டாட்டமாகவும் அமைந்தது என்பதற்கு அங்குள்ள மாபெருங் கோயிலுக்கு அண்மையிலுள்ள உயர்ந்த ஊஞ்சல் நிலைகளே சான்றுவன. இன்றும் திருப்பாவைத் திருநாளை அப்பிராமணர்கள் கொண்டாடி வருகின்றனர். அங்குள்ள அவர்களின் கோயில் அமைப்பும் வழிபாடும், தென்னிந்தியக் கோயில் அமைப்புகளையும், வழிபாட்டு முறையினையும் தழுவியுள்ளதாக அவர்களின் அரசகுரு எனக்குக் கூறினார்".

–தனிநாயக அடிகளார்

முடித்துவைப்பது சிறந்த சீர்திருத்தப் பணி. ஆனால் கதைகளில் திரும்பத் திரும்ப விதவைகளின் குமுறலையும் வேதனையையும் அளந்துகொண்டிருப்பது அவசியமா? கைம்பெண் மணத்தை வற்புறுத்திக் கதை எழுதுவது மிகப் பழைய பாணி.

அந்தப் பழைய பாணியிலும் மெருகேற்றிப் புதுமை மிளிரச் செய்வதற்குப் பெருந்திறமை வேண்டும். இளம் எழுத்தாளர்களிடம் அதனை எதிர்பார்க்க முடியாது. ஆகவே விதவைகளின் வேதனையைத் தீட்டுவதைச் சிறிது காலம்வரை இளம் எழுத்தாளர்கள் நிறுத்திவைத்தால் நல்லது.

"வழுக்கி விழுந்தவள்", வாழத் தெரியாதவள்", "ஏமாந்தவள்" -இப்படிச் சில கதைகள். பெண்களிடையே "ஒழுக்கக் குறைவு" எங்கோ எப்பொழுதோ ஏற்படுகிறது. தமிழ்ப்பெண்கள் கற்பைக் காப்பதில் மிக விழிப்பாயுள்ளவர்கள். எளிதில் அவர்கள் வழுக்கி விழுந்துவிடுவதில்லை. ஆனால் நம் இளம் எழுத்தாளர்கள் எழுதும் கதைகளைப் படிக்கும் யார்க்கும் 'தமிழ்ப் பெண்கள் எல்லோருமே ஒழுக்கங் கெட்டவர்களோ?" என்று எண்ணவே தோன்றும். பெண்கள் வழுக்கிவிழும் சூழ்நிலை அசாதாரணமானது. அதனைக் கையாண்டு சிறுகதை தீட்டுவது கூரிய வாளின்மீது நடப்பது போன்றது. ஆகவே இளம் எழுத்தாளர்கள் "விபசாரக்" கதைகளை எழுதாமலிருப்பதே மேல்.

விசித்திரக் காதல்

மற்றும் சிலர் தமிழ்க் குலத்திற்கே அருவருப்பான சில "விசித்திரக் காதல் முடிச்சு"க்களைத் தங்கள் கதைகளில் நடமாடவிடுகிறார்கள். தாய்க்கும் மகனுக்கும் சரசம்-மாமனாருக்கும் மருமகளுக்கும் நட்பு - அப்பாவுக்கும் மகளுக்கும் உறவு- இப்படிக் கதைகளைக் கற்பனை பண்ணுவது மன்னிக்கமுடியாத குற்றம். இந்தக் கதைகளால் தமிழும் வளராது, எழுத்தாளர்களும் வளர முடியாது. அருவருப்பூட்டும் இத்தகைய "அபார" கற்பனைகளை அள்ளி விடுபவர்கள் தமிழ்ச் சமுதாயத்திற்கே பெருந் தீமை விளைவிக்கிறார்கள். நினைக்கவே மனம் கூசும் இத்தகைய "விசித்திரக் காதல்" கதைகளை இளம் எழுத்தாளர்கள் எழுதவே கூடாது.

சிறுகதை சமுதாயத்தைப் படம் பிடிப்பதாக இருக்கவேண்டும். மனித உணர்ச்சிகளுக்கு அது உருவம் தர வேண்டும். எல்லாவற்றுக்கும் மேலாக உயர்ந்த லட்சியங்களைப் படிப்பவர் உள்ளத்தில் எழுப்ப வேண்டும். மக்களின் சிந்தனையைத் தெளிவடையச் செய்வதையே எழுத்தாளர்கள் நோக்கமாகக் கொள்ள வேண்டும். சிந்தனையைக் குழப்பும் அருவருக்கத்தக்க ஆபாசக் கதைகளைப் புதிய எழுத்தாளர்கள் மறந்தும் எழுதக்கூடாது.

பெரும்பாலான எழுத்தாளர்கள் ஒரேமாதிரி நடையினையே கையாளுகிறார்கள். "அவள் கண்கள் குளமாகின" என்று சொல்வது ஒரு சமயம் புதுமையாக இருந்தது. இப்போது அது படித்துப் படித்துப் புளித்துப்போய்விட்டது. எழுதும் நடையில், கையாளும் சொற்களில் புதுமை மிளிர வேண்டும். கதை சொல்லும் போக்கிலும் புதுமை காண வேண்டும். புதுமை, எழுத்துத் துறைக்கு உயிர் நாடி.


ஃ ஃ ஃ

ஒரு முக்கிய எச்சரிக்கை

நம் எழுத்தாளர்களுக்கு மற்றொரு யோசனையையும் கூற விரும்புகிறேன். ஏதோ சில பத்திரிகைகளை மட்டும் படித்துவிட்டு எழுத்தாளராகிவிட முடியாது. தேர்ந்தெடுத்த நல்ல நூல்களை நீங்கள் நிறையப் படிக்கவேண்டும், புகழ்பெற்ற சிறுகதை எழுத்தாளர்களின் நூல்களைத் தொடர்ந்து படிக்கவேண்டும். வேற்று மொழி தெரிந்தவர்கள் அம்மொழிகளில் உள்ள சிறுகதை இலக்கியங்களைப் படிக்கவேண்டும். நூறு நல்ல சிறுகதைகள் படித்திர்களானால் நீங்கள் ஒரு நல்ல கதையை எழுதமுடியும், தமிழ் இலக்கியங்களை முறையாகப் பயிலவேண்டும். அப்பொழுதுதான் உங்கள் தமிழ் நடை வளம்பெறும். சொல்லுக்குப்பஞ்சம் ஏற்படாது.

கடைசியாக ஓர் எச்சரிக்கை. மலாயாவில் பலர் காப்பியடிப்பதில் நிபுணர்களாக இருக்கிறார்கள். பத்திரிகைகளின் பழம் பிரதிகளிலிருந்து அப்படியே எழுத்துக்கு எழுத்துப் பெயர்த்து எழுதித் தங்கள் பெயரைச் சூட்டிப் பத்திரிகைகளுக்கு அனுப்பிவிடுகிறார்கள். இத்தகைய "திருடர்"களின் கதைகள் சில சமயம் பத்திரிகைகளிலும் வெளிவந்து விடுகின்றன ஆனால் "பலநாள் திருடன் ஒரு நாள் அகப்படுவான்" என்பது பழமொழி. ஒரு முறை அகப்பட்டுக் கொண்டால் போதும், இந்தக் "களவாணிகள்" மறுபடி தலை தூக்கவே முடியாது. இளம் எழுத்தாளரிடையே உள்ள "நச்சு மரங்கள்" இவர்கள். இந்தத் திருடர்களைக் கையும் மெய்யுமாகப் பிடித்துக் கொடுப்பது வாசகர்கள், எழுத்தாளர்கள் ஆகியோரின் தலையாய கடமையாகும்.

[இக்கட்டுரை 9-3-1958 தமிழ் முரசில் வெளிவந்ததாகும். கட்டுரையில் காணப்படும் பிரச்சினைகளில் பெரும்பாலானவை இன்றும் இருப்பதால் இளம் எழுத்தாளர்களுக்கு இது பெரிதும் பயன்படும் என்று நம்புகிறோம்.]








பாடுபட்டோம்; வளஞ்சேர்த்தோம்;
பால்மரங்கள் வெட்டிப்
பலன்விளைத்தோம் என்பதெலாம்
பழங்கதைகள்! இன்று
கேடுகெட்டுக் கிடக்கின்ற கீழினத்தார்! உள்ளக்
கிளர்ச்சிகளுக் கட்பட்டு மதிமயங்கித் தேனின்
கூடுகட்ட மறந்தவர்நாம்! குறிபற்ற வாழ்வால்
கூனுற்ற முதுகினராய்க் கூம்பியவர்! ஏழ்மைக்
காடுவெட்டத் தவறியதால் படிப்பற்றுப் போனோம்!
காலத்தால் விழித்தெழுவோம்;
கல்விக்கண் கொள்வோம்!

உழைப்பதற்காய் உள்ளஇனம் இவ்வினந்தான் என்றே
ஒதுக்கிவைத்த நிலைமாற்ற
ஒருமுடிவைக் காண்போம்!
பிழைப்பதற்காய்க் குறிகொண்டு பின்தங்கிப் போனோம்
பெயரளவில் வாழ்கின்றோம் முன்னேற்றமின்றி!
தழைப்பதற்கு வழியிருந்தும் தரிசாக்கிப் போடும்
தற்குறியாய் வாழ்வதும் எத்தனைநாள்? இன்னும்
கழைக்கூத்து வித்தைகளைக் காட்டாமல், மண்ணில்
காலூன்றும் நிலைகாண்போம்!
கல்விக்கண் கொள்வோம்!

எதிர்காலம் புதிர்காலம் ஆகாமல் போக
இதுதருணம்! தவறவிட்டால் எதுதருணம் ஆகும்!
உதிர்காலம் முடிந்ததனால் இதுவசந்த காலம்!
உறக்கத்தில் ஆழ்ந்திருந்தால் விடிவென்பதில்லை!
குதிர்போல இனிவாழக் கூடாது! நல்ல
கொள்கையுள்ள இனமாக முன்னேற வேண்டும்!
கதிர்போல இருளகற்றிக் காலத்தை வெல்லக்
கல்வியொன்றே தக்கவழி!
கல்விக்கண் கொள்வோம்!



என் கணவர் அதிகம் பேச மாட்டார். வாய்விட்டுச் சிரிப்பது அநாகரிகமென்பார். அன்பை மூன் ருகப் பங்கிட்டு ஒரு பங்கை என்னிட மும், மற்ருென்றைஎன் இருகுழந்தை களிடமும், பிறிதொன்றைத் தன் தாய் தந்தையரிடமும் வைத்திருக் கின்ருர்.

டாக்டர் மு. வ.வின் படத் தைச் சுவரில் மிக உயரத்தில் தொங்க விட்டிருக்கின்ருர். அதற்கும் மேலே என் கணவரின் படத்தை மாட்டி இருக்கிறேன். அந்த அறிஞரைவிட எனக்கு என் கணவர் மேல் அல்லவா?

—திருமதி ஜானகி இராஜன்,
ஈப்போ




நல்ல கணவர் வாய்த்த சில அதிர்ஷ்டசாலிப் பெண்களில் நானும் ஒருத்தி. என் கணவரிடம் எந்தவொரு தீய பழக்கமும் இடையாது


பிறரைப் பற்றிக் குறைகூறினல் கோபப்படுவார். அடிக்கடி திரைப் படம் பார்க்கும் பழக்கமில்லை. மரி யாதையோடு பேசுவதையே பெரி தும் விரும்பும் இவர் தாமுண்டு, தம் வேலையுண்டு என்றிருப்பார்.

அன்பும், நல்ல பண்பும் உடைய இவரைப் பெற்று வளர்த்தவர்கள் பெருமைக்குரியவர்கள். என்னவர் நோய்நொடியில்லாமல் வாழ இறை வன் அருள்புரியவேண்டும்.

—திருமதி ராஜம் செல்வராஜன்,
கோலாலம்பூர்



என் கணவர்



பெற்ருேர்கள் முடிவு செய்த திருமணமென்ருலும் நாங்கள் இரண் டாண்டு காலம் ஒருவரை ஒருவர் நன்கு புரிந்துகொண்ட பின்னரே மணமுடித்துக்கொண்டோம்.

அவருக்குத் திரைப்படம் என் ருல் வேப்பங்காய். பொதுவேலை, சமூதாயச் சீர்திருத்தம், அரசியல் இவை மூன்றும் உயிர் வாரத்தில் ஓய்வு கிடைக்கும்போதெல்லாம் "கொத்தோங் ரோயோங்" கூட்டங் கள் என்று போய்விடுவார்.

முன் கோபக்காரர்; ஆனல் அந்தளவு குணமும் உண்டு. ஐந்து வயதில் மகள்- கலைச்செல்வி; நான்கு வயதில் மகன் -கலைச்செல்வன்; இரு செல்வங்கள்.

—திருமதி சரசுவதி செல்வராசு,
சுங்கை



மங்கையராகப் பிறப்ப தற்கே மாதவம் செய்திட வேண்டு மம்மா" என்ருர் ஒரு கவிஞர். ஆனல் நல்ல கணவரையடைய அதை விட அதிகமான தவம் செய்தவள் தான் நான். என் கணவர், இருபது பேர் கொண்ட குடும்பத்தை ஒருவரே சம்பாதித்து வழிநடத்திய சிக்க னக்காரர்.

தமிழாசிரியர், கவிஞர், மேடைப் பேச்சாளர், பொதுச் சேவையாளராக மற்றவர்கண்களுக் குத் தென்பட்டாலும் எனக்கு நல்ல குடும்பத் தலைவராகவே தெரிகிருர். புகைப்பது, குடிப்பது போன்ற தீய பழக்கமெதுவும் இல்லாதவர். அன்பு நிறைந்த அறநெறியாளர். மறுபிறவி வாய்க்குமானல் அவருக்கே மனைவி யாவேன்.

—திருமதி அமிர்தம் சோமசன்மா,
பத்து பகாட்

கலையுலக வினா-விடை

பரிதாமணாளன்

குமாரி அலி மஜீட், லதாவாணி, சுங்கை, பேரா

கே: "மன்மதலீலை" படத்தைப் பார்த்தால் மணமான ஆண்கள் தவறு செய்யத் துணிவார்கள் இல்லையா?
ப: "மன்மதலீலை" படத்தைப் பார்க்கும் தவறு செய்யும் ஆண்கள், மனைவியின் மீது அன்பாக இருப்பார்கள் இல்லையா?

கே: இப்போது வரும் படங்களின் தலைப்புக்கும் கதைக்கும் சம்பந்தமே இருப்பதில்லையே ஏன்?
ப: எப்படி இருந்தாலும் நாம் பார்த்து விடுவோம் என்ற துணிச்சலில்தான் அப்படி வைக்கிறார்கள்.

எம். குணசேகரன், பாரிட்புந்தார்

கே: "நவரத்தினம்" படத்தில் நடிக்கும் ஒன்பது கதா நாயகிகளின் பெயர்கள் என்ன?
ப: லதா (மாணிக்கம்), ஜரினா வகாப் (புஷ்பா) சுபா (முத்து), ஜெயா (கோமதி), ஒய். விஜயா (நீலா), ஜெயசித்ரா (பவளம்), பி. ஆர். வரலட்சுமி (மரகதம்), ஸ்ரீபிரியா (வைரம்), குமாரி பத்மினி (வைடூரியம்) ஆகியோரே நவரத்தினங்களாக நடித்துள்ளனர்.

ஐயாசாமி ஜமுனா, சுங்கை, பேரா

கே: கே. ஆர். விஜயாவின் இடத்தை சுஜாதா பிடித்து விடுவார்போல் இருக்கிறதே...?
ப: ஐயா சாமி! இவருக்குள்ள இடத்தை இவர் பிடித்தால் போதாதா!

அரைபன் ராஜராஜன், அந்தாரா தோட்டம், பாகான் சிராய்

கே: வயதாக ஆக பொன்மனச் செம்மல், இளவயது வாலிபனைப்போல் தோன்றி சுறு சுறுப்பாக நடிக்கிறாரே, அவருடைய இளமையின் ரகசியம் என்ன?
ப: சுறுசுறுப்பாக நடிக்கிறார். ஆனால் வாலிபனைப் போல் நடிப்பதாகத் தெரியவில்லை. அவருடைய இளமையின்ரகசியத்தை அவருக்கு "நெருக்க" மானவர்களிடம் கேட்டால்தான் தெரியும்.

இரா. இராமராவ், கோலாலம்பூர்

கே: மலேசியத் தயாரிப்பான "எண்ணங்கள்" படப் பிடிப்பு தொடங்கிவிட்டதா?
ப: இன்னும் இல்லை!

ராஜா, கோலாலம்பூர்

கே: நடிகர்கள் ஏன் ஆங்கிலத்தை அதிகம் கலந்து பேசுகிறார்கள்?
ப: தங்களுக்கு ஆங்கிலமும் தெரியும் என்பதைக் காட்டிக்கொள்வதற்குத்தான்.

செல்வராஜு குமரன், கிள்ளான்

கே: இன்றைய தமிழ்ப்படங்களின் நிலை என்ன?
ப. எந்த வகையிலும் திருப்திப் படக்கூடிய நிலையில் இல்லை!

ஜே. பி. வேலாயுதம், கோலசிலாங்கூர்

கே: எம். ஜி. ஆருக்கும் சிவாஜிக்கும் இனி படங்களில் நடிப்பதற்கு வாய்ப்புக் கிட்டுமா?
ப: இவர்களுக்கு நடிக்க வாய்ப்புக்கிட்டாத ஒரு நிலை ஏற்பட்டிருக்கிறது என்று உங்களிடம் கயிறு திரித்தவர் யார்?

வி. இராமசாமி, கோலாலம்பூர்

கே: தமிழ்நாட்டின் அடுத்த முதலமைச்சராக எம். ஜி. ஆர். வருவாரா?
ப: இந்திய நாடாளுமன்றத் தேர்தல் முடிவை யொட்டி இப்படியொரு நிலை ஏற்படலாம் என நம்புகின்றனர். ஆனால் தமிழக சட்டசபையைக் கைப்பற்றும் அளவுக்கு எம். ஜி. ஆர். கட்சி வெற்றி பெறும் என நான் நம்பவில்லை! சட்ட சபைத் தேர்தலில் தமிழ் நாட்டில் ஜனதா அலை வீசக் கூடும்.

ஏ, அம்பிகாபதி, ஈப்போ

கே: சிவாஜி கணேசன் ஜனதாவில் சேரப்போகிறாராமே?
ப: இதில் ஆச்சரியப்படுவதற்கு என்ன இருக்கிறது? இருக்கின்ற பணத்திற்கு ஆளும் கட்சியில் சேர்வதுதான் பாதுகாப்பு!



குணச்சித்திர நடிகை சாரதாவின் நட்சத்திர மாளிகை உண்மையிலேயே ஒரு மாளிகைதான்! அவரைச் சந்திக்க அவருடைய அந்த நட்சத்திர மாளிகைக்கு நிருபர் சென்றபோது மிக எளிய உடையில் காட்சி அளித்தார்! அவர் இப்பொழுது "மழை மேகம்" என்ற ஒரு படத்தைத் தயாரித்து முடித்திருக்கிறார். படம் நன்றாக வந்திருக்கிறதா என்று கேட்டபோது, "என் படம் நிச்சயம் ரசிகர்களை ஏமாற்றாது! அவர்களுக்குத் திருப்தி அளிக்கும் வகையில் படத்தைத் தயாரித்திருக்கிறேன்" என்று பெருமையுடன் கூறினார்.

இலக்கிய அரங்கம்

டாக்டர் இரா. தண்டாயுதம்



"கல்கி யுகம்" என்றே தற்காலத் தமிழிலக்கிய வரலாற்றில் ஒரு காலக்கட்டம் குறிப்பிடப்படுவதுண்டு. இவ்வாறு சிறப்பாகக் குறிப்பிடப்படுமளவிற்குத் தமிழ்ப் பத்திரிகை உலகிற்கும், இலக்கிய உலகிற்கும், தளராது அரும்பணியாற்றியவர் கல்கி. நாவல், சிறுகதை, கட்டுரை, பயண இலக்கியம் முதலிய பல துறைகளிலும் அவர் தம்கைவண்ணத்தைக் காட்டியுள்ளார். இதற்கும் மேலாகத் தம் காலத்து அரசியல் போராட்டங்களிலும், சமூகப் போராட்டங்களிலும் முதன்மையாகப் பங்கேற்றவர் அவர். அவருடைய வாழ்க்கையுடன் ஏதாவதொரு வகையில் தொடர்பில்லாத அரசியல்வாதிகளோ, சமூகத் தொண்டர்களோ அன்று யாரும் இருக்கவில்லை என்று துணிந்து கூறலாம். இதனால்தான் எழுத்தாளர்களில் கல்கியை ஒரு நட்சத்திரமாகவே ஒருவர் வருணித்தார். இப்படி வருணிப்பதைவிடக் கல்கியை ஓர் இயக்கம் என்றே சுருக்கமாகக் குறிப்பிட்டுவிடலாம். இவ்வாறு குறிப்பிடுவது எந்த வகையிலும் மிகையானதல்ல என்பதைக் கல்கியின் வாழ்க்கை வரலாறான "பொன்னியின் புதல்வர்" சிறப்பாக உணர்த்துகிறது.

வாழ்க்கையிலிருந்து எப்படி இலக்கியம் பிரிக்கப்பட முடியாததோ, அவ்வாறே படைத்தவனிடமிருந்தும் இலக்கியத்தைப் பிரித்துவிட முடியாது. அவனுடைய சிந்தனைகள், அனுபவங்கள், சூழல்கள், வாழ்க்கை முறை முதலியவையே உண்மையான இலக்கியம் அவனுள் கருக்கொள்ள உதவுகின்றன. ஆனால் நம் தமிழிலக்கிய வரலாற்றை ஆராய்ந்துபார்க்கும்போது, படைத்தவனைவிடப் படைப்புக்கே முதன்மை வழங்கப்படுவதைக்காணலாம். அதனால்தான் திருக்குறள் படைத்த திருவள்ளுவர் வாழ்க்கையைக்கூட நாம் அறிய முடியவில்லை. அன்றிருந்த நிலை இன்றும் மாறிவிட்டதாகக் கூறமுடியாது. ஆனால் மேலைநாடுகளில் படைத்தவனுடைய வாழ்க்கையுடன் சேர்த்துப் படைப்பையும் ஆராயும் முறை வளர்ந்து வருகிறது. இதனால் படைக்கப்பட்ட இலக்கியத்தின் பல்வேறு நிகழ்ச்சிகளுக்கான காரணங்களையும் அனுபவங்களையும் அறிந்து சுவைக்க முடியும். அம்முறையில் தற்காலத் தமிழிலக்கிய முன்னோடிகளில் ஒருவரான கல்கியைப்பற்றி எழுதப்பட்டுள்ள இந்த வரலாற்று நூல், அவருடைய படைப்புக்களின் பின்னணியைச் சுவையாகச் சொல்வதுடன், அவருடைய வாழ்க்கை வரலாற்றையும் ஒரு கதைபோலச் சொல்லிச் செல்கிறது. கல்கியுடன் தொடர்புகொண்டிருந்த பலதுறை அறிஞர்கள், இயக்கங்கள், உறவினர்கள் ஆகியவர்களை அணுகி, அவர்களிடம் தகவல்கள் கேட்டு, அவருடைய படைப்புக்களையும் உடன் ஆராய்ந்து, அவர் காலத்தில் பிறர் எழுத்துக்களையும் ஒப்பு நோக்கிச் சுந்தா இவ்வரிய நூலை எழுதியுள்ளார். ஒரு சில இடங்களில் வரலாற்று நாயகரைவிட நூலாசிரியர் தம்மை முதன்மையாக்கிக்கொள்ள முனைந்தாலும், கல்கியின் பல்வேறு சிறப்புக்களையும் இயல்புகளையும் பணிகளையும் அறிய இந்நூல் மிகவும் துணை செய்கிறது. பெரும்பாலான வாழ்க்கை வரலாறுகளைப் போல் காலப் பிணைப்பைக் குறியாகக் கொள்ளாமல் கருத்துப் பிணைப்பையே குறியாகக்கொண்டு எழுதப்பட்டுள்ளது இந்நூல், எனவே வாழ்க்கை வரலாறுகளில் பொதுவாகக் காணப்படும் வரட்சி இதில் இல்லை.

தமிழ்ப் பத்திரிகை உலகில் முன்னணியில் நிற்கும் இரு பத்திரிகைகளுடன் நெருங்கிய தொடர்பு கொண்டிருந்தவர் கல்கி. "ஆனந்த விகடனி"ல் அவர் ஆசிரியராக இருந்தார். "கல்கி"யை அவரே தோற்றுவித்தார். இவ்விரண்டு பத்திரிகைகளையும் களங்களாகக்கொண்டு அவர் நடத்திய பேனாப் போராட்டங்கள் பலப்பல. வ. ரா. வுடன் நடத்திய போராட்டம், "தியாக பூமி" திரைப்படத்தையொட்டி எழுந்த சர்ச்சைகள் முதலிய பலப்பல நிகழ்ச்சிகள் இந்த நூலில் சுவையுடன் விவரிக்கப்பட்டுள்ளன. போராடினாலும், பெரியவர்கள் பெரியவர்கள் தாம் என்பதை நன்கு தெளிவுபடுத்தியுள்ளார் நூலாசிரியர்.

கல்கி எழுதிய நாவல்களையும் சிறுகதைகளையும் பயணக் கட்டுரைகளையும் அனைவரும் அறிவர். ஆனால் அவர் ஒரு சிறந்த கவிஞரும்கூட என்பது பலருக்குத் தெரியாது. "மாலைப் பொழுதினிலே", "காற்றினிலே வரும் கீதம்", "கண்டதுண்டோ கண்ணன் போல்" முதலிய பல பாடல்கள் கல்கி இயற்றியவை. இவற்றுள், "மாலைப் பொழுதினிலே" என்ற பாட்டையும், தம் பெயர் குறிப்பிடாமல் அதனை வெளியிட்டுப் பெற்ற பாராட்டையும் படிக்கும்போது, ஒரு நாவலைப் படிக்கும் விறுவிறுப்பு ஏற்படுகிறது. இவ்வாறே பல சம்பவங்கள்.

கல்கியின் நாவல்கள்தாம் விறுவிறுப்பும் சுவையும் நிறைந்தவை என்று இதுவரை நினைத்திருந்தோம். அவருடைய வாழ்க்கையும் அப்படிப்பட்டதே என்பதைப் "பொன்னியின் புதல்வர்" அழகாகக் காட்டுகிறது. ●

அத்தியாயம் 3.

'மாலைப் பொழுதின் மயக்கத்திலே'

தியேட்டர் வாசலில் பரவலாக நின்ற கூட்டத்தில் அவர்களும் சுற்றித் திரிந்தனர்.

பட்டுப் பூச்சிகளைப் போல பல வண்ண ஆடைகளோடு பவனிவரும்

கனவுகள் பலகோடி

பருவச் சிட்டுகளைப் பார்த்தவர்கள் மீண்டும் மீண்டும் திரும்பிப் பார்த்தனர். பார்வையைத் திருப்பவே முடியாதவர்கள் அப்படியே நின்றனர்.

டிக்கட் வாங்க லல்லியை விரட்டிவிட்டுக் கொறிப்பதற்கு வாங்கிச் சேர்ப்பதில் முனைந்தனர் சுஜாவும் சரினுவும்.

கழுத்தில் தொங்கிய நீண்ட மணிச்சரத்தை விரல்களால் முறுக்கிக் கொண்டே தன் பெரிய வண்டு விழிகளை அங்குமிங்கும் சுழற்றிக் கொண்டு நின்றிருந்தாள் வனிதா.

தோழியரோடு சினிமா பார்க்கத் தனியாக வந்திருப்பது அவளுக்குப் புதிய அனுபவமாகும்.

வீட்டுக்கு ஒரே செல்லப் பெண்ணான அவளுக்கு அம்மா அப்பாவோடு காரில் போய் ஜம்மென்று தியேட்டர் வாசலில் இறங்கி விர்ரென்று மேல் மாடிக்குப் போய் "ரிசர்வ்" செய்யப்பட்ட இடத்தில் வசதியாக உட்கார்ந்து படம் பார்த்துப் பழக்கமாயிருந்தது.

தாய் தந்தையரைப்பிரிந்து நூற்றைம்பது மைலுக்கப்பால் உள்ள கோலாலம்பூருக்குப் படிக்கவந்ததும் நவநாகரிகமான பெட்டாலிங் ஜெயாவில் அறை எடுத்துக்கொண்டு தங்கி இருப்பதும் அவள் வாழ்க்கையில் ஏற்பட்ட புதிய மாற்றமாகும்.

தங்கள் செல்லப்பெண் படிப்பில் காட்டிய ஆர்வமும் அவள் அடைந்திருந்த சிறப்பான தேர்ச்சியுங்கண்டு பெருமிதமடைந்த பெற்றோர் அவள் பல்கலைக் கழகத்தில் நுழையுமுன் ஆறும் படிவப்படிப்பை சிறப்பாக வசதியாகக் கற்கவேண்டுமென்ற ஆவலில் பிரபலமான "அகாடமி"யொன்றில் சேர்த்துவிட்டிருந்தனர்.

ஓர் எஸ்டேட் மானேஜரான அவள் தந்தை, தன் மகளின் எதிர் காலத்தை அந்தச் சின்னஞ்சிறிய இடத்துக்குள்ளேயே முடக்கி வைத்துவிட விரும்பாமல் அவ்வித ஏற்பாட்டைச் செய்து வைத்திருந்தார்.

அம்மாவுக்குத்தன்செல்லப்பெண்ணைப் பிரிந்திருக்க மனமில்லைதான்! என்றாலும் மகளின் முன்னேற்றத்திற்குத் தடையாக இருக்க விரும்பாமல் அவளும் அதை ஏற்றுக்கொண்டாள்.

வனிதாவுக்குப் புதிய இடத்தில் எல்லாம் புதுமையாக இருந்தது! ஆரம்பத்தில் அவளுக்கு என்ன செய்வதென்றே தெரியாமல் தவித்துக் கொண்டு நின்ற போது லல்லிதான் பெரிதும் உதவியாக இருந்தாள்.

லல்லி சுபாவத்திலேயே மிகவும் துணிச்சலானவள் என்பதோடு அவளுக்கு இது இரண்டாம் ஆண்டு என்பதால் எல்லாமே அத்துப்படியாகியிருந்தன.

அவளது துணையால்தான் இவ்வளவு தூரம் தனியாக தங்கியிருக்கவும் படிக்கவும் வனிதாவால் முடிந்தது என்றுகூடச் சொல்லலாம்.

"இவள்தான் என் பிரண்ட் வனிதா!"

லல்லி தன்னைப் பற்றி யாரிடமோ கூறுவதைக் கேட்டுச் சடாரெனத் திரும்பிய வனிதா ஒரு கணம் "ஷாக்" அடித்தாற்போலத் திகைத்து நின்றாள்.

பார்வையைத் திருப்ப முயன்றவள் தனது விழிகள் தரையிலும் பாவாமல் நிமிர்ந்து நோக்கவும் முடியாமல் திண்டாடித் துடிக்க லல்லியை ஏறிட்டுப் பார்த்தாள்.

"இவர் மிஸ்டர் கோபிநாத்?"

அந்த இளைஞனை அவளுக்கு அறிமுகப்படுத்தி விட்டு மற்றவர்களையும் பார்க்கத் திரும்பினாள்.

"கிளாட் டு மீட் யூ மிஸ் வனிதா...!"

அவன்சர்வசாதாரணமாகச்சிரித்துக்கொண்டு அவளையே இமைக்காமல் ஆர்வத்தோடு நோக்கினான்.

"ஹலோ...!"

மெல்ல இதழ்களைப் பிரித்தவள் முத்துப் போல் ஒரே ஒரு வார்த்தையை மட்டும் உதிர்த்தாள். அதற்கு மேல் என்ன சொல்வது என்று அவளுக்கும் தோன்றவில்லை! அவனும் அதைப்பற்றிக் கவலைப்படவில்லை.

பார்வையைத் திருப்ப முடியாமலோ அல்லது திருப்ப விரும்பாமலோ வைத்த விழி வாங்காமல் குறுகுறுவென அவளையே பார்த்துக் கொண்டிருந்த கோபிநாத்தின் உதட்டில் புன்னகையொன்று அரும்பி நிலைகுலைய வைத்தது.

வனிதாவுக்கு மின்சாரம் பாய்வது போன்ற விசித்திர உணர்வு உடல் முழுதும் பரவியது. அவள் தன்னைக் கட்டுப்படுத்த முடியாமல் மீண்டும் அவனை ஏறிட்டுப் பார்த்தாள்.



கோபிநாத் ஒற்றை விரலால் தனது அரும்பு மீசையை நீவிக் கொண்டு அவளையே இமைக்காமல் பார்த்துக்கொண்டு நின்றான்.

விழிகளின் சங்கமத்தில் கட்டுண்டு மீளமுடியாமல் தவித்தாள் வனிதா! அந்தப் பார்வை அவளது இதயத்தை ஊடுருவிச் சென்றது.

"கோபி! நீங்கள் படம் பார்த்து விட்டீர்களா... இனிமேல்தான் பார்க்கப் போகிறீர்களா...?" லல்லியின் குரல்கேட்டு உணர்வு பெற்றவனாக அவள் பக்கம் திரும்பினான் கோபிநாத்!

"நாங்கள் ஏற்கனவே பார்த்து விட்டோம்! உன் அபிமான ஹீரோ படுபோடு போடுறான்போ...!" என்று கேலியாகக் கூறிச் சிரித்தான் கோபி!

"நாங்கள் என்றால்...? இன்னும் யார்...உங்கள்...?"

"ஏய் லல்லி நிறுத்து! நீ புதிதாக ஏதும் கற்பனை செய்யாதே! அதோ பார்! ஸ்கூட்டரை ஸ்டார்ட் பண்ணி விட்டான்... நான் வருகிறேன். குட்பை மிஸ் வனிதா!"

அவன் பேசிக்கொண்டே விரைந்து சென்று ஸ்கூட்டரில் ஏறிக் கொண்டான். "பார்த்தாயா லல்லி! நாங்கள் மலைபோல் நிற்கிறோம்! வனிதாவுக்கு மட்டும் "பை பை" சொல்லிவிட்டுப் போவதை..."

சுஜாதா பெரிதாகக் குறைபட்டுக்கொண்டாள்! லல்லி குபுக்கென்று சிரித்தாள்!

மலைக்கு யாராவது குட்பை சொல்வார்களா...? அவள் மங்கையாக நிற்கிறாள்! அதனால்தான் அவளுக்குச் சொல்லிவிட்டுப் போகிறான்...வாங்கடி போகலாம்!"

உள்ளே விளக்குகள் அணைக்கப் பட்டுவிட்டதால் தட்டுத் தடுமாறிய படி. உள்ளே நுழைந்தனர்.

திரையில் ஓடிக்கொண்டிருந்த படத்தில் வனிதாவின் கவனம் செல்லவில்லை!

தன் அபிமானத்திற்குரிய கதாநாயகனின் கண்ணைசவிலிருந்து "ஹேர்"ஸ்டையில் வரையில் ஒன்றையும் விடாமல் சளசளவென விமர்சனம் செய்துகொண்டு அட்டகாசமாகப் படம் பார்த்துக் கொண்டிருந்த லல்லியோ, மற்றவர்களோ வனிதாவைக் கவனிக்கவில்லை.

காஷ்மீரின் எழில் மிகும் இயற்கைக் காட்சியில் இதயத்தைச் சுண்டி இழுக்கும் இனிய இசையோடு கண்ணைக்கவரும் வண்ண வண்ண மலர்களிடையே தோன்றித் தோன்றி மறைந்த கதாநாயகியின் பூங்கொடி உடலோ, பூவிதழ் முகமோ அவளைக் கவர்ந்திருக்கவில்லை!

கதாநாயகியை விரட்டிச்சென்று கொண்டிருந்த கதாநாயகனின் கட்டான உடலோ களையான முகமோ, காதலின் கனிவோ வனிதாவைத் துளிகூட ஈர்ககவில்லை!

கோபிநாத்தின் குறுகுறு பார்வையும், குறும்புப் புன்னகையுமே அவள் இதயம் முழுதும் ஆக்கிரமித்துக் கொண்டிருந்தன.

வெள்ளித்திரையில் தோன்றிய அந்தக் கதாநாயகனின் முகம் கோபிநாத்தின் முகமாக மாறிக் கொண்டிருந்த வினோதத்தில் தன்னை மறந்திருந்த வனிதாவின் கையை வெடுக்கென யாரோ பற்றி இழுக்கவே திடுக்கிட்டு உணர்வு பெற்றாள்!

தியேட்டரில் விளக்கு எரிந்து கொண்டிருந்தது!

அத்தியாயம் 4.

'உன்னிடம் மயங்குகிறேன்'

"ஏய் வனிதா! உனக்கு என்னடி வந்தது...?" லல்லியின் குரல் வனிதாவை உலுக்கியது.

சுஜாதாவும் சரீனாவும் கண்களைப் பெரிதாக்கிக் கொண்டு அவளைப் பார்த்தனர்.



லல்லியின் முகத்தில் கவலையின் சாயல் படிந்திருப்பதைக் கண்ட வனிதாவுக்கு என்ன பதில் சொல்வது என்றே தெரியவில்லை.

அவளுக்கு "விண் விண்" என்று நெற்றிப் பொட்டில் வலிப்பது போல் இருந்தது. மெல்ல நெற்றியை வருடிக்கொண்டாள்.

"ஒரே தலை வலி!"

வனிதா தன்னைச் சுதாரித்துக் கொண்டு இப்படிக் கூறினாள். என்னடி இது? அருமையான படம்! அதைப்போய் தலைவலி என்கிறாயே..." என்றாள் சுஜாதா.

"அவள் படத்தைச் சொல்லவில்லை! அவளுக்குத்தான் தலைவலியாம்" லல்லி இப்படிக்கூறவே வனிதாவும் சிரித்துவிட்டாள்.

"ஓகே! சூடாக ஏதாவது சாப்பிடலாமா...?"

"வேண்டாம் லல்லி எனக்குப் பசிக்கலே..."

"சரி! கூல் டிரிங்...?"

சரீனாவின் பொறுமை எல்லையைக் கடந்துவிட்டது. "அவளை மட்டும் கெஞ்சிக் கெஞ்சிக் கூப்பிடுகிறாளே! நம்மை ஒரு வார்த்தை கேட்கிறாளா பார்...?" என்று செல்லமாகக் கோபித்துக் கொண்டாள்.

"நீங்க ரெண்டு பேரும் எதற்கும் ரெடி என்பதுதான் எனக்குத் தெரியுமே! இந்த வனிதா பேபிதான் பாவம்!"

"சரிதான். உன் பேபிக்குப் பால் வேண்டுமோ என்னவோ?" சுஜாதா கேலியாகக் கூறினாள்.

"நீ சும்மா இருடி...! வனிதா, ஒரு கப் டீ சாப்பிடு! தலைவலி பறந்து போய்விடும்...!"

எதிரே இருந்த ரெஸ்டாரெண்டுக்குள் நுழைகின்றனர்.

"ஹாய்...லல்லீ...!"

அதே குரல்! உற்சாகமும் குறும்புத்தனமும் கொப்பளிக்கும் அதே குரல்! வனிதாவுக்கு உடல் முழுதும் குப்பென்று ஒருவித உணர்ச்சி பரவியது. சற்றும் எதிர்பாராத அந்தச் சந்திப்பு அவளைத் திணறடித்துவிட்டது!

"என்ன கோபி! இன்னும் இங்கேதான் இருக்கிறீர்களா...? அப்போதே பறந்து கொண்டு ஓடினீர்களே..."

லல்லியின் கேலிக்குரல் அவனது பார்வையை மீட்டுக் கொள்ள வைத்தது. "இல்லை, இப்போதுதான் வந்தேன்! ஒரு பிரண்ட் வருகிறேன் என்றான், அவனுக்காகத்தான் காத்திருக்கிறேன்... அது சரி! படம் எப்படி...?

"ஓ...... பிரமாதம்! அருமையான இயற்கைக் காட்சிகள்! அடேயப்பா எத்தனை முறை பார்த்தாலும் சலிக்காது..."

"ஆமாம்! 'பார்த்துக்கொண்டே இருக்கலாம் போலிருக்கிறது! எத்தனை அழகான இனிமையான காட்சி...!" கோபி வனிதாவைக் குறும்புத்தனமாகப் பார்த்துக் கொண்டே கூறினான். அவன் உதட்

டில் விஷமப் புன்னகை நெளிந்தது! வனிதா சட்டென்று பார்வையை வேறுபக்கம் திருப்பிக் கொண்டாள்.

"ஆனால்இந்த வனிதாவுக்குத்தான் தலைவலி வந்துவிட்டது என்கிறாள்"

"பின்னே? உன்கூட உட்கார்ந்து பார்த்தால் நிச்சயம் தலைவலி வரத் தானே செய்யும்...!"

அவன் குரலில் கலந்திருந்த கேலியைப் புரிந்துகொண்டு எல்லாருமே சிரித்துவிட்டார்கள்.

லல்லி பொய்யான கோபத்தோடு முறைத்துப்பார்த்தாள். "சரி சரி! தலைவலிக்குச் சூடாக டீ சாப்பிட்டால் இதமாக இருக்கும்! வலியும் மறைந்துவிடும்!" என்றவன் சுஜாதாவையும் சரோவையும் பார்த்தான்.

"நீங்கள் என்ன விரும்புகிறீர்கள் கூல் டிரிங்கா...? லல்லி உனக்கு ஜில்லென்று ஐஸ்கிரீம்..." என்று அவளை வம்புக்கிழுத்தான். "ஏன், நான் குண்டாக இருக்கிறேன்என்று சொல்லாமல் இப்படிக்கிண்டலா...?"

"சேச்சே! அதற்காக இல்லை! சூடாக இருக்கிறாய் என்று நினைத்தேன்! நீ ஒன்றும் அப்படிக் குண்டாக இல்லையே...? சில பெண்கள் கொழு கொழுவென்று மெழுகு பொம்மை மாதிரி இருப்பதும் ஒரு தனி அழகு தான்...!"

கோபி இப்படிச் சொல்லிக் கொண்டே வனிதாவை ஆர்வத்தோடு நோக்கினான்.

அவள் முகம் சிவந்துவிட்டது! அவனை நேருக்கு நேர் நிமிர்ந்து பார்க்கமுடியாமல் பார்வையை வேறு பக்கம் திருப்பினாள்.

வனிதாவின் செவ்விதழ்கள் மெல்லப் பிரிந்து கோப்பையில் படிவதைக் குறு குறு வெனப் பார்த்துக் கொண்டே தன்னை மறந்த நிலையில் இருந்தான் கோபி.

சரோ மெல்ல சுஜாதாவை இடித்தாள்! அவளும் ஜாடையாகப் பார்த்துக் கொண்டுதான் இருந்திருக்கிறாள்.

ஒருவரையொருவர் அர்த்த புஷ்டியோடு பார்த்துக் கொண்டனர்.

சுஜாதாவும் சரோவும் ஒருவரையொருவர் பார்த்துச் சிரித்துக் கொண்டதை லல்லி தற்செயலாகப் பார்த்தாள்! அது அவளுக்கு என்னவோ போல இருந்தது. மெதுவாக கோபியைப் பார்த்தாள்!

அவன்! வனிதாவையே பார்த்துக் கொண்டிருந்தான்! அதனால் தான் இந்தக் குறும்புக்காரிகள் சிரிக்கிறார்களோ...?

லல்லி சடாரென்று வனிதாவைப் பார்த்தாள்!

பாவம்! வனிதா இதையெல்லாம் அறியாமல் தலையைக் கவிழ்த்துக் கொண்டு தேநீரை உறிஞ்சிக் கொண்டிருந்தாள்.

லல்லிக்கு வனிதாவின் மீது பரிவு அதிகமாயிற்று!

"தலைவலி இப்போ எப்படி இருக்கிறது வனிதா...?"

அந்தக் குரலின் கனிவு தந்த இதம் வனிதாவின் இதயத்தை வருடியது.

மெதுவாகத் தலையை நிமிர்த்தி லல்லியைப் பார்த்தாள்!

அவள் முகம் மலர்ந்ததைக் கண்டதும் லல்லிக்கு நிம்மதி ஏற்பட்டது! உற்சாகமாகக் கலகலப்பாகப் பேசிக்கொண்டே எழுந்தாள்.

மற்றவர்களும் அவளைத் தொடர்ந்து எழுந்தார்கள்.

கோபிநாத் 'பில்' லுக்குரிய பணத்தைக் கொடுத்துவிட்டு வந்தான்.

"என்ன கோபி! உங்கள் நண்பரைக் காணோமே..."

"நேரமாகிவிட்டது! கிளம்ப வேண்டியது தான்...!"

"அவசரப்படாதீர்கள்? இன்னும் சற்று நேரம் நின்று அடுத்த ஷோவுக்கு வரும் அழகிகளையும் கொஞ்சம் ரசித்துவிட்டுப் போகலாமே...!"

"ஏய் லல்லி! என்னை அவ்வளவு மோசமாகவா எடை போட்டுவிட்டாய்" இன்னும் ஏதோ சொல்லவந்தவன் அந்த இளம் பெண்கள் எல்லாரும் 'கலீர்' என்று சிரிக்கவே தலையைத் தடவிக்கொண்டு அவனும் கூச்சத்தோடு சிரித்துக் கொண்டான்.

"ஓகே! நாங்கள் போய்வருகிறோம்! தேங்யூ கோபி...! என்றாள் லல்லி. அவளைத் தொடர்ந்து சுஜாதாவும் சரோவும் ஒரேகுரலில் நன்றி கூறினார்கள்.

வனிதா என்ன சொல்லப்போகிறாள் என்பது போல் ஆவலோடு அவளை நோக்கினான்.

இன்னும் சில வினாடிகளில் பிரிந்துசெல்லப் போகிறோம் என்ற துடிப்பில் நாணத்தையும் மறந்து அவனை ஏறிட்டு நோக்கினாள். ஏதாவது பேசவேண்டும் என்றுதான் நினைத்தாள்! ஆனால் அந்த குறுகுறுக்கும் விழிகளைச் சந்தித்தபின் அவளால் எதுவும் பேசமுடியவில்லை!

தலையை மட்டும் இலேசாக அசைத்துவிட்டுப் புன்னகையொன்றை அவன் மீது படரவிட்டு ஊமையாகி நின்றாள்!

அவனது இதயத்தின் அடித்தளம் வரை ஊடுருவிச்சென்று இன்ப மயக்கத்தில் ஆழ்த்தியது அந்த முத்துப் புன்னகை!

[தொடரும்]

மலரின் ஆவல்

இந்த ஆண்டு (1977)இரண்டாம் படிவத்தில் அடியெடுத்து வைத்திருக்கும் மலர்விழி தன் பெற்றோர்களைப்போல் கலைச்சேவை செய்ய மிகுந்த ஆர்வம் கொண்டவராய் உள்ளார். கடந்த இரண்டாண்டிற்கு மேல் பத்மினி நடனப் பள்ளியில் முறைப்படி நடனம் பயின்று வருவதோடு தொலைக்காட்சியிலும் மேடை நிகழ்ச்சிகளிலும் நடனமாடி ரசிகர்களின் பாராட்டுதலைப் பெற்று வருகிறார்.



கலைஞர் ரெ. சண்முகமும் அவரது துணைவியார் திருமதி சந்திரா சண்முகமும் மேடை, வானொலி, தொலைக்காட்சி கலைத்துறையில் சிறந்த கலைஞர்களாக விளங்கி வருகின்றவர்கள் என்பது ரசிகப் பெருமக்கள் அறியாததல்ல. இந்தக் கலைப் பெற்றோர்களுக்குப் பிறந்த மலர்விழி அவர்களுக்கு ஈடாகவே வளரத் தொடங்கிவிட்டார் என்று சொல்வதில் வியப்பிருக்கமுடியாது. வானொலி நிகழ்ச்சிகளிலும் பள்ளிக்கூட ஒலிபரப்பு நிகழ்ச்சிகளிலும் இப்போது பங்குபெற்று நடித்தும் பாடியும் வருகிறார். இன்னும் குறிப்பாகச் சொல்லப்போனால் வானொலியில் மலாய் நிகழ்ச்சிகளில் அதிகமாக நடித்து வருவதோடு மலாய் ரசிகர்களின் பாராட்டுதலையும் பெற்றுவருகிறார் என்பது பெருமைக்குரியதாகும்.

தனக்கு ஏற்பட்ட கலையுணர்வு தனது பெற்றோர்வழி வந்தது என நினைக்கும் மலர், பாட்டுப் பயிற்சிக்குத் தன் தந்தையே ஆசானாக இருந்து போதிப்பதாகவும், நடிப்பைப் பொறுத்தவரையில் தனது தாயே துணைநிற்பதாகவும் பெருமையோடு சொல்கிறார்.

தனது மேல்படிப்பைத் தமிழ் நாட்டில் தொடரவேண்டும், தான் ஒரு சிறந்த டாக்டராக வேண்டும். அதே சமயம் கலையோங்கும் தமிழ்நாட்டில் தன்னுடைய கலைத்திறனுக்கு மேலும் மெருகேற்ற வேண்டும் என்பதுதான் மலர்விழியின் பேராவல்.

—சோ.பரஞ்சோதி

மோதலுக்குப் பின்

இன்று திரையுலகில் புகழுடன் மின்னிக்கொண்டிருக்கும் நட்சத்திரங்களை, உங்களுக்கு சினிமாவில் நடிக்கும் வாய்ப்பு எப்படிக் கிடைத்தது என்று கேட்டால் அவர்கள் சொல்லும் அனுபவங்கள் மிகவும் சுவையாக இருக்கும். முன்னணி நட்சத்திரங்களில் ஒருவராக இருக்கும் லட்சுமிஸ்ரீக்குத் திரைப் படங்களில் நடிக்கும் வாய்ப்பு எப்படிக் கிடைத்தது என்று கேட்டபோது அவர் கூறிய அனுபவம் மிகவும் சுவையாக இருந்தது!

ஒருநாள் மாலை சுமார் 5 மணி இருக்கும். 9 வயது லட்சுமிஸ்ரீ அவரது வீட்டின் எதிரே ஸ்கிப்பிங் ஆடிக்கொண்டிருந்தார். தன்னை மறந்து ஆடிக்கொண்டிருந்த அவர் ஆடிக்கொண்டே பின்னுக்குச் சென்று அந்த வழியாக வந்து கொண்டிருந்த ஒரு காரின் மீது "டமார்" என்று மோதிக்கொண்டார். அந்தப் பகுதி மிகவும் கூட்டம் நிறைந்ததாகையால் காரின் டிரைவர் மிகவும் முன்னெச்சரிக்கையாகக் காரை ஓட்டிக்கொண்டுவந்து கொண்டிருந்தார்.

ஒரு சிறுமி கார் மீது மோதிக் கொண்டதைக் கண்ட டிரைவர் திடீர் பிரேக் போடவும் "கிரீச்" என்ற சத்தத்துடன் கார் நின்றது!

அந்தச் சிறுமி வெலவெலத்து நடுநடுங்கிப் போய்விட்டார். காரின் டிரைவருக்கோ கோபம் கோபமாக வந்தது! அந்தச் சிறுமியைக் கடுமையாகக் கடிந்துகொண்டார்!

காரின் பின்சீட்டில் உட்கார்ந்து கொண்டிருந்தவர் கீழே இறங்கினார். கண்கொட்டாமல் அந்தச் சிறுமியை உற்றுநோக்கினார். அவர் அப்படிப் பார்த்ததைக்கண்டு அந்தச் சிறுமி நடுநடுங்கிப்போய்விட்டாள். தமக்குச் சாதகமாக அவரும் அந்தச் சிறுமியைக் கடிந்துகொள்ளப்போகிறார் என்று டிரைவர் நினைத்தார்.

ஆனால் அங்கு நடந்ததே வேறு! காரிலிருந்து இறங்கியவர் சிறுமியைத் தட்டிக்கொடுத்து, "உன் பேர் என்னம்மா? உன் வயது என்ன? உன் பெற்றோர்கள் யார்? உன் வீடு எங்கே இருக்கிறது? உனக்குச் சினிமாவில் நடிக்கச் சம்மதமா?" என்று கேள்விகளை அடுக்கிக் கொண்டே போனார்!

அவர் கேட்ட அந்தக் கேள்விகள் டிரைவரையும் அந்தச் சிறுமியையும் ஒரே சமயத்தில் வியப்பில் ஆழ்த்தின!

உண்மையில் நடந்தது இது தான்!

அந்தச் சிறுமி விளையாடிக் கொண்டிருந்த தெருவுக்கு அடுத்த தெருவில் டைரக்டர் பி. மாதவனின் அருண் பிரசாத் மூவிஸ் அலுவலகம் இருக்கிறது.

அப்போது பி. மாதவன், நடிகர் திலகம் சிவாஜி கணேசன் நடித்துள்ள வெற்றிவேல் பிலிம்சாரின் "மனிதனும் தெய்வமாகலாம்" என்ற படத்தை டைரக்ட் செய்துகொண்டிருந்தார்.



படத்தில் முருகன் வேடத்தில் நடிக்க அழகான சிறுமி தேவையாய் இருந்தது! அதற்காக பி. மாதவனின் தயாரிப்பு நிர்வாகி தங்கமுத்து ஒரு சிறுமியைக் காண்பதற்காகக் காரில் சென்றுகொண்டிருந்தார்.

காரின் மீது தடுக்கி விழுந்த சிறுமியைக் கண்டவுடன் அவரது எண்ணம் வேறு திசையில் திரும்பியது! அந்தச் சிறுமியையே அழைத்துக்கொண்டு திரும்பினார்!

அந்தச் சிறுமிதான் — அதே லட்சுமிஸ்ரீதான் "மனிதனும் தெய்வமாகலாம்" படத்திலே முருகனை நடித்து நடிகர் திலகம் சிவாஜி கணேசனின் பூரண ஆசியையும் வாழ்த்துக்களையும் பெற்றவர்.

"நீ வருங்காலத்தில் பெரிய நடிகையாக வரப்போகிறாய். என்னோடு கூட நீ கதாநாயகியாக நடிக்கப்போகிறாய் பார்! ஜெயலலிதா சிறு குழந்தையாக நாட்டிய அரங்கேற்றம் செய்தபோது நான் வாழ்த்தினேன். நான் வாழ்த்தியது போலவே ஜெயலலிதா பெரிய நடிகையாகி என்னோடு பல படங்களில் கதாநாயகியாக நடித்தார்! அதேபோன்று நீயும் பெரிய நடிகையாகி என்னோடு கதாநாயகியாக நடிக்கப்போகிறாய் பார்!" என்றார் நடிகர் திலகம்!

நடிகர் திலகத்தின் பொன்னான வாக்குகள் என்றுமே பொய்த்ததில்லை. இன்று ஏழு தமிழ்ப்படங்களிலும், இரண்டு மலையாளப் படங்களிலும், மூன்று தெலுங்குப் படங்களிலும் நடித்துக்கொண்டு பிஸி நடிகையாகத் திகழும் லட்சுமிஸ்ரீ நடிகர் திலகம் சிவாஜி கணேசனுடன் ஜோடி சேர்ந்து நடிக்கும் நாள் வெகுதூரத்தில் இல்லை.

— 'செல்வம்'



பதினாறு வயதினிலே" படத்தில் ஸ்ரீதேவி

முருகவைக் கேளுங்கள்

அம்பிகா, சுங்கை பிரு தோட்டம், சிம்மோர்

கே: "புதிய சமுதாயம்" பகுதிக்குப் பழமொழிகள், துணுக்குகளை எழுதினால் வெளியிடுவீர்களா?
ப: பல்வேறு பகுதிகளைச் சேர்ந்த வாசகர்களிடமிருந்தும் சுவையான துணுக்குகளைப் "புதிய சமுதாயம்" அதிகம் எதிர்பார்க்கிறது.

கி. மதுராராமன், சுங்கை பாக்காப்
கே: இரக்கம் இல்லாதவனிடம் பணம் போய்ச் சேருகிறது. பணம் இல்லாதவனை இரக்கம் பிடித்து ஆட்டுகிறது. இதைப் பார்க்கும்போது பகவானின் இயக்கம்?
ப: புரிந்துகொள்ள முடியாத புதிராக இருக்கிறது.

கே: உங்களுடைய வேதனைக் கதையைப் படித்து முடித்தவுடன் கையும் ஓடவில்லை காலும் ஓடவில்லை, இனம் தெரிந்து மனம் தெரிந்து, குணம் தெரிந்து இணைந்து வாழவிடாமல் கறைபூசி அகற்றி அப்புறப்படுத்திவிட்டார்கள், இது தர்மம் ஆகுமா?
ப: "சிறியார் உணர்ச்சியுள் இல்லை பெரியாரைப் பேணிக் கொள்வோம் என்னும் நோக்கு" மேற்கண்ட குறளைப் படித்ததும் என் மனம் அமைதி அடைந்தது. சிறியவர்களிடம் தருமம், நியாயம் இவற்றை எதிர்பார்த்தது என் தவறு.

ஐயாசாமி ஐமுனு, சுங்கை, பேரா

கே: அண்ணா, இந்த உலகில் மிகமிக மலிவாகக் கிடைப்பது எது?
ப: தலைவர்களின் உபதேசம்.

கே: தாயினும் சிறந்தவர் யார்?
ப: தாயினும் சிறந்த தயாபரனாக இறைவனை நாம் ஏற்றிப் போற்றுகிறோம்.

எம். குணசேகரன், பாரிட்புந்தார்

கே: "புதிய சமுதாய"த்தில் போட்டியை வெளியிட்டால் என்ன?
ப: தமிழறிவுப் போட்டி இந்த இதழில் ஆரம்பமாகிறது!

எம். எஸ். மணியம், கம்போங் லெம்பாவ், கோலாலம்பூர்

கே: நம் நாட்டில் தமிழ்க்கல்வி நிதிக்குத் திரட்டும் பணத்தில் எத்தனை இந்திய மாணவர்கள் அயல் நாட்டில் படிக்கிறார்கள்?
ப: தமிழ்ப்பள்ளி மாணவர் உதவி நிதி, ஆரம்பத் தமிழ்ப் பள்ளிகளில் பயிலுகிற மாணவர்களின் நலனை முக்கிய குறிக்கோளாகக் கொண்டது. ஆகவே அந்த நிதியிலிருந்து வெளிநாடுகளில் பயிலுகின்ற மாணவர்களுக்கு உதவி ஏதும் இதுவரை வழங்கப்படவில்லை.

இரா. இராமாராவ், தலைநகர்

கே: தமிழ் நாட்டிலிருந்து, நடிகர் நடிகைகளும், பாடகர் பாடகிகளும் மலேசியா மீது படையெடுத்து ஒருவர் பின் ஒருவராக தொடர்ந்து வந்து நிகழ்ச்சிகளை நடத்தி வருவது பற்றி என்ன நினைக்கிறீர்கள்?
ப: இத்தகைய கலைப்படையெடுப்புக்கள் மலேசியாவின் ஆரோக்கியமான கலைவளர்ச்சிக்கு துணைபுரியும் என்பதில் ஐயமில்லை. ஆனால் இப்பொழுது வந்து மொய்ப்பதுபோலத்தமிழகக்கலைஞர்கள் ஒரேசமயத்தில் இங்கு முகாம் போடுவது வர்த்தக ரீதியில் பார்த்தால்கூட அத்தனை லாபகரமாக அமையாது. ரசிகர்களுக்கும் எதைப்பார்ப்பது எதை விடுவது என்பது பிரச்சினையாக இருக்கும். ஆகவே போதிய இடைவெளியோடு கலைஞர்களை இங்கு வரவமைத்தால் பயன் உண்டு.

ராஜா, கோலாலம்பூர்

கே: சொந்தக் குடும்பத்தைக் கவனிக்காமல் சமுதாய உயர்வைப் பற்றிக் கவலைப்படும் ஒருவனைப் பற்றி என்ன நினைக்கிறீர்கள்!
ப: இத்தகைய பைத்தியங்கள் பலர் இருக்கத்தான் செய்கிறார்கள். தனக்கு மிஞ்சியே தான தருமம் என்னும் பழமொழிப்படி முதலில் தன்னையும் தன் சொந்தக்குடும்பத்தையும் நன்கு கவனித்துக்கொண்டு அதன்பின்னர் பொது நன்மைக்குப் பாடுபடுவதே முறையாகும்.

கிருஷ்ணராவ், சுங்கை செனுநட் பத்து அன்னம்

கே: புதிய சமுதாயத்தின் நோக்கமென்ன? அதைப் படிப்பதால் பயன் என்ன?
ப: புதிய சமுதாயத்தைத் தொடர்ந்து படிக்கும் வாசகர்கள், புதிய மலேசிய சமுதாயத்தின் சீரான அங்கமாக-முழுப் பங்காளியாக இயல்பாகவே மாறிவிடுவர். இது பெரிய பயன் அல்லவா?

கே: போன ஜென்மத்தில் செய்த பாவத்திற்காகத்தான் மனிதர்கள் இந்த ஜென்மத்தில் குருடனாகவும், முடவனாகவும், நொண்டியாகவும், ஊமையாகவும் பிறப்பதாகக் கேள்விப்பட்டேன். இது உண்மையா?
ப: முந்திய பிறப்புக்களில் செய்த வினைகளின் பயனை இந்தப் பிறப்பில், மனிதன் அனுபவிப்பான் என்னும் கருத்து சைவ சமயக் கோட்பாடாகும்.

எஸ். பன்னீர், பத்தாங் பெர்ஜுந்தை

கே: நல்ல கருத்துக்களையும் கதையம்சங்களையும் கொண்டு வெளிவரும் "புதிய சமுதாயத்தை" வாரத்திற்கொருமுறை வெளியிட்டால் என்ன?
ப: வார இதழாக மாற்றுவதற்கு வேண்டிய விரிவான வசதிகளை எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறோம். உங்கள் எண்ணம் நிச்சயம் நிறைவேறும்.

ச. அன்புமணி, பட்டர்வொர்த்

கே: நான் "ருக்குன் தெத்தாங்கா" பாதுகாப்புக் குழு அமைப்பில் சேர விரும்புகிறேன். யாருடன் எங்கு தொடர்புகொள்ளவேண்டும்?
ப: உங்கள் பகுதியில் அமைந்திருக்கும் அல்லது அமையவிருக்கும் "ருக்குன் தெத்தாங்கா" குழுவுடன் தொடர்பு கொள்ளுங்கள்.

குமாரி அலி மஜீட் லதாவாணி, சுங்கை, பேரா

கே: ஊமை மாதிரி உள்ளவர்களை நம்பக்கூடாது என்கிறார்கள். ஆனால் பேசிப்பேசி ஊரை நம்ப வைப்பவர்களை மட்டும் நம்பலாமா?
ப: ஊமையையும் நம்பக்கூடாது; பெரும் பேச்சுக்காரர்களையும் நம்பக்கூடாது, பின்பு யாரை நம்புவது?

கே: நான் எவ்வளவு நல்லதைச் செய்தாலும் சிலர் என்னைக் கெட்டவன் என்றே சொல்கிறார்கள். நல்லவன் என்று பெயரெடுக்க என்ன செய்யவேண்டும்?
ப: பெயரெடுப்பதை மறந்துவிட்டு உங்களால் முடிந்த உதவிகளை மற்றவர்களுக்குச் செய்யுங்கள்.

தி. செ. சுந்தரம், ரெங்கம் தோட்டம்

கே: மங்கையொருத்தி தரும் சுகமும் எங்கள் மாத்தமிழுக்கு ஈடில்லை என்று கூறிய பாரதிதாசனைப் பற்றித் தங்கள் அபிப்பிராயம் என்ன?
ப: தமிழ்வானத்தில் ஒளிவீசும் குளிர்நிலா பாரதிதாசன். "தமிழ் எங்கள் உயிர்" என்பது பாரதிதாசனைப் பொறுத்தவரை நூற்றுக்கு நூற்றிப்பத்துப் பங்கு உண்மை.

ஆர். பாலசுப்ரமணியம், லாபுவான் பாடாங் தோட்டம்

கே: சூழ்நிலைக்கேற்ப மனதை மாற்றிக் கொள்ளலாமா?

ப: மனத்தை மாற்றிக் கொள்ளலாம்; மானம் மரியாதையைத்தான் விலை பேசிவிடக்கூடாது.

கே: வாழ்க்கையிலும் மேடு-பள்ளம் இருக்கிறதே?

ப: பூமண்டலம், சந்திரமண்டலம் போல மனித வாழ்க்கையும் மேடு பள்ளம் நிறைந்ததாக இருப்பது இயல்பே.

கே. அசோதா, டப்ளின் தோட்டம்

கே: பெண்ணாசை, மண்ணாசை, பொன்னாசை உள்ள ஒருவன் எப்படி இருப்பான்?

ப: பஞ்சமாபாதகங்களைக் கட்டவிழ்த்து விடும் பேயாக உலவுவான்!

எம். ராஜ்குமார், சிம்பாங் பெக்கோ, மலாக்கா

கே: "புதிய சமுதாயம்" எங்கு நல்ல வரவேற்பு பெறுகிறது?

ப: சிலாங்கூர், ஜோகூர், கெடா மாநிலங்களில்.

கே: "புதிய சமுதாயம்" என்று எப்படி இப்பெயரை வைத்தீர்கள்?

ப: எத்தனையோ பெயர்களை யோசித்து யோசித்துக் கடைசியில் இப்பெயரைத் தேர்ந்தெடுத்தோம். நம் அரசாங்கத்தின் "சமுதாயச் சீரமைப்பு" நோக்கம் நிறைவேறுவதற்கு மக்களிடையே எண்ண மாற்றத்தைத் தோற்றுவிப்பது மிக மிக அவசியம். அதற்கு இப்பெயர் மிகப் பொருத்தமாகும்.

அ. முனுசாமி, போண்டோக் தஞ்சோங், தைப்பிங்

கே: நானும் என் நண்பனும் ஒரு வீட்டிற்கு விருந்தினர்களாகச் சென்றோம். அந்த வீட்டாரும் எங்கள் இருவருக்கும் பீங்கான் தட்டில் சாதம் வைத்தனர். நாங்களும் சாப்பிட்டு முடித்தோம். என் நண்பன் சாப்பிட்டதும் தட்டை அப்படியே வைத்துவிட்டுக் கைகழுவினான். அவன் சாப்பிட்ட தட்டு காய்ந்துகொண்டிருந்தது. நானோ, தட்டில் நீர் ஊற்றி வீட்டார் தட்டைப் பிடித்து எடுத்துச் செல்லும் வகையில் தட்டின் ஓரங்களைக் கழுவி விட்டேன். நாங்கள் இருவரும் செய்ததில் எது சரியான முறை?

ப: நீங்கள் அனுபவசாலி. குறிப்பறிந்து நடந்துகொண்டிருக்கிறீர்கள்!

சி. சோ. சாமி, சிம்பாங் அம்பாட், பி. வெ.

கே: இலங்கையில் இருக்கும் என் நண்பருக்கு "புதிய சமுதாயம்" அனுப்பிவைக்கும்படி எழுதிய கடிதமும், பணமும் கிடைத்ததா?

ப: கிடைத்தது நன்றி. உங்கள் இலங்கை நண்பருக்குப் "புதிய சமுதாயம்" உறவுப் பாலமாக மாதம் இருமுறை சென்றடையும்.

கே: நேசன் கல்வி நிதியைப் "புதிய சமுதாயத்திற்கு" அனுப்பி வைத்தால் ஏற்றுக்கொள்வீர்களா?

ப: தாராளமாக. ஏற்றுக்கொண்டு நன்கொடையின் விவரத்தைப் புதிய சமுதாயத்தில் வெளியிட்டு விட்டு நேசனுக்கு அனுப்பிவைப்போம்.

அசசம்மா சூரியநாராயணன், பத்தாங் காலி தோட்டம்

கே: யார் இந்த உலகத்தில் துன்பம் என்ற சொல்லுக்கு இடமே இல்லாமல் வாழ்கிறார்கள்?

ப: எவருமே இல்லை.

எஸ். ஏ. நாராயணன், தெமர்லோ

கே: கடவுளை எவ்வாறு வழிபட்டால் அவன் அருள் கிடைக்கும்?

ப: கசிந்து கண்ணீர்மல்கி, அவன் கருணையை நாட வேண்டும்.

எஸ். எஸ். வேலன் கோபால், கம்போங் ரம்புத்தான், கிள்ளான்

கே: நான் ஜனவரி 16-ஆம் தேதி பிறந்தேன். 15நாள் ராசி பலனில் நான் எந்த ராசியைப் பார்க்கவேண்டும்?

ப: புதிய சமுதாயத்தில் வெளியிடுகிற 15 நாள் பலன் பிறந்த தேதி அடிப்படையில் இடம்பெறுகிறது. இதன்படி ஜனவரி 16ந்தேதி உங்கள் பிறந்த தேதி என்றால், நீங்கள் பார்க்கவேண்டிய ராசி மகரம் ஆகும்.

ஏ. முத்து, பெர்ணம் தோட்டம், ஊத்தான் மெலிந்தாங்

கே: சினிமா ரசிகர்களுக்கும், சினிமாப் பித்தர்களுக்கும் தாங்கள் என்ன கூற நினைக்கிறீர்கள்?

ப. சினிமா ரசிகர்கள் சமுதாயத்தின் பிரிக்க முடியாத ஓர் அங்கமாக அமைந்து விட்டவர்கள். ஆனால் சினிமா ரசனையை அளவோடு வைத்துக் கொள்வது அவர்களுக்கும் நன்மை சமுதாயத்திற்கும் நன்மை. சினிமாப் பித்தர்களுக்கும் சினிமாப் பைத்தியங்களுக்கும் சமுதாயத்தில் இடமில்லை. அவர்களைப் போதை வெறியிலிருந்து மீட்பதுபோல சினிமா வெறியிலிருந்து மீட்கவேண்டும்.

க. நளினி, கம்போங் சாலாக் திங்கி, சிப்பாங

கே: எப்படியும் வாழலாம், இப்படித்தான் வாழவேண்டும், விதிவிட்ட வழிப்படிதான் வாழமுடியும். இம்மூன்றில் யாருடைய எதிர்காலம் சிறப்புற அமையும்?

ப: ஒரு குறிக்கோளோடு இப்படித்தான் வாழ வேண்டும் என்னும் உறுதியான அடிப்படையில் வாழ்க்கையை நடத்துகிறவர்களின் எதிர்காலமே சிறப்பாக அமையும்.

திருமதி க. சரஸ்வதி செல்வராசு, சுங்கை பேராக்

கே: தங்களின் மனக் குமுறலை எழுத்து வடிவாகக் காண நேர்ந்தது. இதில் அரசியல் கலவையும் நினைத்துப் பார்க்கக் கூடியதாக இருப்பதாக எனக்குத் தோன்றுகிறது. தங்களின் கருத்து?

ப: தங்களைப்போல் பலர் இவ்வாறு சந்தேகப் படுகிறார்கள். எனக்கும் அந்த ஐயப்பாடு இருக்கத்தான் செய்தது. ஆனால் இந்த மர்மம் என்றாவது ஒரு நாள் விடுபட்டே தீரும். அதுவரையில் யார் மீதும் வீணைகப் பழி போடுவது முறையன்று.

வேலு இராமரெட்டி, சபாவ் தோட்டம்

கே: புதிய சமுதாயத்தில் வளரும் எழுத்தாளருக்குத் தனியொரு அங்கம் ஏதும் ஒதுக்கப்படுமா?

ப: எப்படி இதனைச் செய்யலாமென்று யோசித்துக் கொண்டிருக்கிறோம்.

கே: நம் சமுதாயத்தின் பலவீனம் எது?

ப: பிளவும் உட்பூசலும்.

பூவை ஏ. லட்சுமணன், வெசிங்டன் தோட்டம், ரெங்கம்

கே: "புதிய சமுதாயத்திற்கு" கதை, கட்டுரை அனுப்பி பிரசுரிக்க இயலாவிட்டால் அனுப்பிய சம்பந்தப்பட்டவர்களுக்கே அவை திருப்பி அனுப்பி வைக்கப்படுமா? நகைச்சுவைத் துணுக்குகள், ஓவியங்கள் ஏற்றுக்கொள்ளப்படுமா?

ப: அஞ்சல் தலையுடன் அனுப்பப்படும் கதை, கட்டுரைகள் திருப்பி அனுப்பப்படும். நகைச்சுவைத் துணுக்குகள், ஓவியங்கள் ஆகியவற்றை நிறைய எதிர்பார்க்கிறோம்.

பெ. வேலாயுதம், ரெங்கம் தோட்டம்

கே: நான் பயிர் செய்ய விரும்புகிறேன். ஆனால் எந்த எந்த மாதத்தில் பயிர் செய்யலாம் என்று தெரியவில்லை. எந்தெந்த மாதத்தில் பயிர் செய்யலாம் என்று விளக்கம் கொடுக்கவும்?

ப: பக்கத்திலுள்ள அரசாங்க விவசாய இலாக்காவுடன் தொடர்புகொண்டால் வேண்டிய ஆலோசனைகளைச் சொல்வார்கள்.


கற்பின் செல்வி
கண்ணகி
கதை: சரோ
படம்: பாலு
5
தேவேந்தியிடம் கண்ணகி
தேவேந்தி, என் கணவருக்கு ஏதோ தீங்கு வந்தது போல் நேற்று கனவு....
நான் அரசனிடம் நீதி கேட்டு வாதிடுவது போல் கனவு... பயமாக இருக்கிறது தேவேந்தி!
கவலைப்படாதே, போன பிறவியில் உன் கணவருக்குச் செய்ய வேண்டிய விரதத்தில் ஏதோ குறை.. அதைத் தீர்க்க இப்போது நீ சோம குண்டம் சூரிய குண்டம் என்ற குளங்களில் குளித்து வா. பிறகு காமவேள் கோயிலில் கும்பிட்டு வா. இப்படிச் செய்யும் பெண்கள் எப்போதும் கணவன்மார்களைப் பிரியாது இருப்பார்கள்.
அப்படிச் செய்வது எனக்குப் பெருமை தராது.
கண்ணகியின் வேலைக்காரி.
அம்மா, ஐயா திரும்பி வந்துவிட்டார். இதோ பாருங்கள்!
கண்ணகி, என்னை மன்னித்துவிடு; மாதவி-யோடு நான் வாழ்ந்ததால் நமது சொத்து எல்லாம் அழிந்தது. நாம் ஏழை-களாகி விட்டோம் என்பதைக் கூறவே வெட்கமாக இருக்கிறது.
கவலைப்படாதீர்கள், என்னிடம் கால் சிலம்புகள் உள்ளன. எடுத்துச் சென்று விற்று வாருங்கள்.
இந்தச் சிலம்பையே மூலதனமாக்கி வியாபாரத்தில் ஈடுபடப் போகிறேன். கண்ணகி வா! நாம் மதுரைக்குச் செல்லலாம்!
தொடரும்...

மலேசியமொழித் தேர்வில் வெற்றி பெற (3)

பழையதும் புதியதும்

வெ. ஆறுமுகம்

புதிய எழுத்துக்கூட்டல் முறையைப் பயன்படுத்துவதில் உங்களுக்கு எவ்விதக் குழப்பமும் இருக்கக்கூடாது. நீங்களும் குழம்பி, விடைத்தாளைத் திருத்துபவரையும் குழப்புவீர்களாயின் தேர்வு முடிவும் குழப்பமாக முடிந்து பெருங்குழப்பத்துக்கு நீங்கள் ஆளாக நேரிடலாம். ஏன் இந்த வேண்டாத குழப்பம்? சில விதிகளை நன்கு புரிந்து கொண்டால் எவ்விதக் குழப்பமும் இராது.

Di என்பது மலேசியமொழியில் வெவ்வேறு இயல்புகளுடன் வழங்கப்படுகிறது. வினைச்சொற்களின் (katakerja) முன்னால் பயன்படுத்தப்படும் di வேறு; இடத்தைக் குறிக்கப் பயன்படுத்தப்படும் di வேறு. முதலாவது awalan, இரண்டாவது katadepan. Awalan என்பதும் Katadepan என்பதும் எவ்விதத் தொடர்பும் இல்லாதவை; வெவ்வேறு இயல்புடையவை. எனவே, நன்கு புரிந்துகொள்ளுங்கள்; di என்பது ஒன்றன்று; இரண்டு. இரண்டையும் வெவ்வேறு முறையில்தான் பயன்படுத்த வேண்டும்.

Di-makan, di-potong, di-uruskan, di-jalankan என்னும் சொற்களைக் கவனியுங்கள்; இந்நான்கும் வினைச்சொற்கள். எனவே இவற்றுக்கு முன்னுள்ள di நிச்சயம் awalan ஆகும். இரண்டுக்கும் இடையில் (-)என்று வந்திருப்பது இணைகுறி (sempang). இப்படி Awalan + Sempang + Katakerja என்று எழுதுவது பழைய எழுத்துக்கூட்டல் முறை. புதிய முறையின்படி, இடையில் இருக்கும் இணைகுறியை எடுத்து விடுவதோடு இரண்டையும் சேர்த்து எழுதிவிடவேண்டும். இம்முறையின்படி எழுதினால் dimakan, dipotong, uiuruskan, dijalankan என்று ஆகும். Di எனபதோடு கூடிய எல்லா வினைச் சொற்களுக்கும் இதுவே சரியான முறை.

Di-atas, di-Melaka, di-rumah, di-kanan எனும் சொற்கள் "மேலே, மலாக்காவில், வீட்டில், வலப்புறத்தில்" என பொருள்படும் இவையனைத்துமே இடத்தைக் குறிக்கின்றன. இன்னும் தெளிவாகச் சொல்லவேண்டுமானால் "எங்கே" என்னும் கேள்விக்கு விடையாக இவ்வை அமைகின்றன. எனவே இவற்றிலுள்ள di என்பதை katadepan எனக் கொள்ளவேண்டும். இடையில் இணைகுறி இருக்கிறது. இது பழைய முறை. புதிய முறைப்படி எழுதவேண்டுமானால், இணைகுறியை எடுத்துவிட்டு, சற்று இடைவெளி விட்டு di atas, di Melaka, di ruman, di kanan என்று எழுதவேண்டும்.

Awaian, katadepan என வழங்கும் di இரண்டுக்கும் மேலும் சில எடுத்துக்காட்டுகளைப் பார்ப்போம்.

	பழைய முறை	புதிய முறை
'di' sebagai awalan:	di-beli	dibeli
	di-tulis	ditulis
	di-kerjakan	dikerjakan
	di-nyanyikan	dinyanyikan
'di' sebagai katadepan:	di-hati	di hati
	di-bandar	di bandar
	di-sini	di sini
	di-sekolah	di sekolah

மலேசியமொழியில் sa என்பது இன்னோர் awalan ஆகும். Sa-malam, sa-belas, sa-orang, sa-siapa, sa-sudah என்று எழுதுவது பழைய முறை. இணைகுறியை நீக்கிவிட்டு sa என்பதை se என்று மாற்றி semalam, sebelas, seorang, sesiapa, sesudah என்று எழுதுவது புதிய முறை.

Ka-atas, ka-kiri, ka-rumah, ka-Johor, ka-bawah என்னும் சொற்களில் காணப்படும் ka என்பது katadepan ஆகும். இது இடத்தைக் குறிக்கிறது. புதிய முறைப்படி ka என்பது ke என்றாகும்.

இணைகுறியை எடுத்துவிட்டு இடைவெளி விட்டு ke atas, ke kiri, ke rumah, ke johor, ke bawah என்று எழுதவேண்டும். இதுபோன்றே kapada என்பது kepada என்று மாறும்.

இதுவரை தரப்பட்டுள்ள விளக்கங்களைப் பின்வருமாறு சுருக்கி நினைவில் வைத்துக்கொள்ளுங்கள்.

அ) Di, sa என்பனவற்றை (awalan) அடிச்சொல்லோடு (katadasar) சேர்த்து எழுதிவிட வேண்டும்.

ஆ) Di, ka என்பனவற்றை (katadepan) அவற்றை அடுத்துவரும் சொல்லிலிருந்து பிரித்து எழுத வேண்டும்

இ) Awalan, katadepan இரண்டுக்கும் இணைகுறி (sempang) தேவையில்லை.

ஈ) Sa என்பது se என்றும் ka என்பது ke என்றும் kapada என்பது kepada என்றும் மாறும்.

இணைகுறி தேவையில்லை என்று சொல்வதனால் புதிய எழுத்துக்கூட்டல் முறையில் அதற்கு வேலையே இல்லைஎன்று எண்ணிவிடாதீர்கள். இணைகுறி வரவேண்டிய இடங்களும் உண்டு.

பன்மையை முன்னிட்டோ, பொருளின் அழுத்தத்தை முன்னிட்டோ ஒரு சொல்லை இரண்டுமுறை சொல்வதற்கு 2 என்னும் எண்ணைப் பயன்படுத்தி tiap2, meja2, rumah2, lampu2 என்று முன்பு எழுதினோம். புதிய முறையில் இந்த 2 என்னும் எண் நீக்கப்பட்டு விட்டது. அதற்குப் பதில் ஒரு சொல்லை இரண்டு முறை எழுதி இடையில் இணைகுறி இடவேண்டும். இம்முறைப்படி tiap-tiap, meja-meja, rumah-rumah, lampu-lampu என்று எழுதவேண்டும். இணைகுறி இல்லாமல் இடைவெளி விட்டு tiap tiap, rumah rumah என்று எழுதுவது பிழையாகும்.

Bersiar2, tanam2an, buah2an, mudah2an, dibuat2 போன்ற சொற்களில் சொல்லின் ஒரு பகுதியை மட்டுமே இரட்டிக்கவேண்டும். Bersiar-siar, tanam-tanaman, buah-buahan, mudah-mudahan, dibuat-buat என்று இணைகுறியிட்டு எழுதவேண்டும். Bersiar-bersiar, mudahan-mudahan, dibuat-dibuat என்று அப்படியே இரட்டித்து எழுதாதீர்கள். இது பெரும் பிழையாகும்.

சில சொற்கள் ஒலி மாற்றத்தோடு இரட்டிக்கும். அவற்றுக்கு இடையிலும் இணைகுறி இடவேண்டும். Gunung-ganang, sayur-mayur, bukit-bukau போன்றவை இந்த விதியுள் அடங்கும்.

புதிய எழுத்துக்கூட்டல் முறையில் சற்றுக் குழப்பமான ஒருசில விதிகளை மட்டும் தேர்ந்தெடுத்து விளக்கியுள்ளேன். குழப்பத்தைப் போக்கவேண்டும் என்னும் நோக்கத்தில் தரப்பட்டுள்ள இவ்விளக்கம் உங்களை மேலும் குழப்பாது என்று நம்புகிறேன். ஆனால் மேலோட்டமாகப் படித்துவிட்டு உங்களை நீங்களே குழப்பிக்கொள்ளாதீர்கள்.

எதைப்படித்தாலும் ஆழ்ந்து, கவனமாகப் படியுங்கள்; படித்தபின் சிந்தியுங்கள். 'ஆக்கம் அதர்வினாய்ச் செல்லும்" என்று உங்களுக்கும் சேர்த்துத்தான் திருவள்ளுவர் சொல்லிவைத்தார். ■

தங்கத்திற்காக ஓடைபோடும் நங்கையர்

அட்டைப்படப் பேட்டி

"ஓடி விளையாடு பாப்பா, நீ ஓய்ந்திருக்கலாகாது பாப்பா" என்று பாரதியார் பாடினார். அவ்வாறு ஓடியாடி, நடந்து நம் நாட்டிற்கும் சமுதாயத்திற்கும் பெருமை சேர்த்துவரும் நங்கையர் இருவரை அண்மையில் சந்தித்தோம். அவர்கள் தான் இந்த இதழின் அட்டையை அலங்கரிக்கும் விளையாட்டு வீராங்கனைகள் குமாரி கலைமணியும், குமாரி அருள்மேரியும். இவர்கள் இருவரும் எதிர்வரும் நவம்பர் திங்களில் தலைநகர் மெர்டேக்கா அரங்கத்தில் நடைபெறவிருக்கும் "சியாப்" விளையாட்டுப் போட்டியில் பெருநடைப்பிரிவில் மலேசியாவைப் பிரதிநிதிக்க இருக்கிறார்கள்!

சந்தனம்-சின்னம்மாள் தம்பதிகளுக்கு நான்காவது மகளாகப் பிறந்த அருள்மேரி தமது ஆரம்பக் கல்வியைக் காஜாங் தமிழ்ப்பள்ளியில் தொடங்கி, எல். சி. இ. வரை பயின்றார். செங்கனி - வள்ளியம்மாள் தம்பதிகளின் செல்ல மகளான குமாரி கலைமணியும் தம் சிநேகிதியைப் போலவே பெட்டாலிங் சரஸ்வதி தமிழ்ப்பள்ளியில் தமது ஆரம்பக்கல்வியைத் தொடங்கி எல். சி. இ. வரையிலும் படித்தார்.

பள்ளி விளையாட்டு

ஆங்கில இடைநிலைப் பள்ளியில் படிக்கும்போதே இவர்கள் இருவரும் பள்ளி விளையாட்டுப் போட்டிகளில் ஆர்வம் காட்டிப் பல வெற்றிகளைக்கண்டுள்ளார்கள். 1968ஆம் ஆண்டில் காஜாங் ஆங்கில இடைநிலைப்பள்ளியில் நடைபெற்ற ஆறுமைல் பெருநடைப் போட்டியில் முதலாவதாக வந்து வெற்றிவாகை சூடினார் மேரி. அதற்கு அடுத்த ஆண்டு (1969) நடைபெற்ற சிலாங்கூர் சுல்தான் பிறந்தநாள் பெருநடைப் போட்டியிலும் முதலிடம் பெற்றார்.

1973ஆம் ஆண்டில் குவாந்தானில் நடந்த தேசிய அமெச்சூர் ஓட்டப்பந்தயப் போட்டியில் பெருநடைப் பிரிவில் இரண்டாவதாக வந்த கலைமணி 1974-ஆம் ஆண்டில் ஈப்போவில் நடந்த பெருநடைப் போட்டியில் முதலாவதாக வந்து வாகை சூடினார். 1975-இல் பினாங்கில் "மலாய் மெயில்" நாளிதழ நடத்திய பெருநடைப்போட்டியில் முதலாவதாக வந்து அவ்வாண்டுக்கான மலாய் மெயிலின் சிறந்த வீராங்கனையாக சிறப்பு விருதும் பெற்றார்.

"நம் பெண்களுள் பெரும்பாலோர் விளையாட்டுத் துறையில் பங்குகொள்ள முன்வருவதில்லையே. என்ன காரணம்?"- இருவரிடமும் நான் தொடுத்த கேள்வி இது:

"அச்சமும் கூச்சமும்தான் காரணமாக இருக்க வேண்டும். மற்றவர்கள் பார்த்தால் அதைச் சொல்லுவார்கள்! இதைச் சொல்லுவார்கள் என்று வீட்டுக்குள்ளேயே முடங்கிக் கிடப்பதனால் என்ன லாபம்? நம்முடைய பண்பு, கட்டுப்பாடுகளை மறவாமல், மற்ற சமூகத்திலுள்ள பெண்களைப்போல நம் பெண்களும் விளையாட்டில் ஆர்வம் காட்டிச் சாதனைகள் புரிய வேண்டும்" என்று புன்முறுவலுடன் கூறினார் அருள் மேரி.

கிண்டலும் கேலியும்

"ஆண்கள் மாதிரி காற்சட்டையை மாட்டிக்கொண்டு திரியும் இவர்களுக்கு அடக்கம், வெட்கம் ஒன்றும் இல்லையா என்று சிலர் கிண்டலும் கேலியும் செய்கிறார்கள். என்னைப் பார்த்துக்கூட சிலர் அப்படிச் சொல்லி என் மனதைப் புண்படுத்தியிருக்கிறார்கள். அதைக் கேட்டதும் எனக்குக் கோபம் வரும். வீண் வம்பு எதற்கு என்று ஒதுங்கிவிடுவேன். இப்படியெல்லாம் சங்கடங்களை எதிர்நோக்குவதால் தான் நம் பெண்கள் விளையாட்டுத் துறையில் பங்கேற்க முன்வரத் தயங்குகிறார்கள்" என்று வெளிப்படையாகவே கூறினார் கலைமணி.

இன்னும் ஓரிரண்டு ஆண்டுகளுக்குள் திருமணமேடை ஏறவிருக்கும் அருள்மேரி, கல்யாணத்திற்குப் பிறகு இத்துறையிலிருந்து முழுமையாகத் தாம் விலகிக் கொள்ள இருப்பதை எண்ணிப் பார்க்கும்போது என்னவோபோல இருப்பதாக வருத்தத்துடன் குறிப்பிட்டார்.

"மலேசியாவைப் பிரதிநிதித்து வெளிநாடுகளுக்குப் போய்ப் புதிய சாதனைகளைப் புரிந்து, தங்கப் பதக்கங்களைப் பெற்றுத் திரும்ப வேண்டும் என்னும் எண்ணமே உறுதியாக என் உள்ளத்தில் இடம் பிடித்திருப்பதால் கல்யாணத்தைப் பற்றிய சிந்தனையே எனக்கில்லை" என்று அழுத்தமாகக் கூறினார் கலைமணி.

கலைமணி தற்சமயம் சுங்கைவே மோட்டோரோலா தொழிற்சாலையில் வேலை பார்க்கிறார் அருள்மேரி காஜாங் பிரேமார் தோட்டத்தில் பால்மரம் வெட்டும் வேலை பார்த்து வருகிறார்.


ஒரே ஆசை

இந்த இரண்டு விளையாட்டு வீராங்கனைகளுக்கும் உள்ளத்தில் ஒரேயொரு ஆசை தீவிரமாகக் குடிகொண்டுள்ளது. அது என்ன?


"எதிர்வரும் நவம்பர் திங்களில் மெர்டேக்கா அரங்கத்தில் நடைபெறவிருக்கும் சியாப் விளையாட்டுப் போட்டியில் எப்படியாகிலும் மலேசியாவிற்குத் தங்கப் பதக்கத்தைப் பெற்றுவிட வேண்டும்" என்பதுதான் அந்தத்தீராத ஆசை. அதற்காகப் பெருநடை வீரர் திருமாலின் துணையோடு தினமும் கடும்பயிற்சியில் ஈடுபட்டுள்ளனர்.

வீராங்கனைகளின் ஆசை நிறைவேறட்டும், அது கண்டு நம் நாடு பெருமை கொள்ளட்டும் என நாமும் வாழ்த்துகிறோம்.

—ராமதாஸ் மனோகரன்



திருமால்



வயலின் மேல்நாட்டினரால் 300 ஆண்டுகளுக்கு முன் உருவாக்கப்பட்ட போதிலும், இது இந்தியாவில்தான் தோன்றியது. அந்தக் காலத்தில் இதற்கு "ராவண ஹஸ்தம்" என்று பெயர். மைசூரிலுள்ள திருமகூடலு என்னும் ஊரில் அகத்தீசுவரர் ஆலயத்தில் கருங்கல் தூணில் ஒரு பெண் வில் போட்டு வாசிக்கும் இம்மாதிரியான ஒரு வாத்தியம் செதுக்கப்பட்டிருக்கிறது. இது ஆயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்டதென்று ஆராய்ச்சியாளர்கள் ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். இப்போதுள்ள வயலினை முதன் முதலில் செய்தவர் ஸ்ட்ராடிவேரியஸ் என்னும் இத்தாலியர் ஆவார். வயலினில் கர்நாடக இசையும் வாசிக்க முடியும் என்று முதன் முதலில் செய்து காட்டியவர் திரு. பாலுசுவாமி திட்சிதராவார்.

ஆதாரம்: கலைக்களஞ்சியம்

—செல்வராஜு குமரன், கிள்ளான்

முன்னோட்டம்

தொலைக்காட்சி

2-6-77 வியாழன் மாலை 5.30க்குத் தமிழ்ப்படம்: ஜெய் சங்கர், லெட்சுமி, ஸ்ரீகாந்த், வி. கே. ராமசாமி ஆகியோர் நடித்த "பொன்மகள் வந்தாள்". இனிய பாடல்கள் நிறைந்த இப்படத்தின் இசையமைப்பாளர் சங்கர்-கணேஷ்.

5-6-77 ஞாயிறு மாலை 4.00க்கு இந்திப்படம்: "பாரிஷ்"

9-6-77 வியாழன் மாலை 5.30க்கு இந்திப்படம்: "நட்ஸ்ராணு"

12-6-77 ஞாயிறு மாலை 4க்கு தமிழ்ப்படம்: "பெண்ணை நம்புங்கள்"

வானொலி

நாடகம்

[சனிக்கிழமைதோறும் பிற்பகல் மணி 2க்கு ஒலிபரப்பாகிறது]

4-6-77 இப்படியும் ஒரு தந்தை - தன் தந்தையைக் கொன்று தாயை வைப்பாட்டியாக வைத்துக் கொண்டவரைப் பழி வாங்கத் துடிக்கும் ஒருவனின் கதை. ஈப்போ எம். விஜயாள் எழுதிய இதனை எல். ராமன் தயாரிக்கிருர்.

11-6-77 குற்றமுள்ள நெஞ்சு- கோலாலம்பூர் நிர்மலா ராகவன் எழுதிய இதனைப் பினங்கு நிலையப் படைப்பாகத் தயாரிப்பவர் எஸ். ஈஸ்வரன்.

தொடர்நாடகம்

[திங்கட்கிழமை தோறும் இரவு மணி 7.15க்கு ஒலிபரப்பாகிறது]

'அலைகள் ஓய்ந்தபோது...' புதிய தொடர் நாடகம்: பத்தாங் பெர்ஜுந்தை சுப்பிரமணியம் சக்ரவர்த்தி எழுதிய இதில் பி. தியாகராஜன், பாஸ்கரன், சந்திரா சண்முகம், பிலோமினு ஆகியோர் நடிக்கின்றனர்.

30-5-77 நிலவைப் பார்த்து அல்லி சொன்னது (முதல் பகுதி)

6-5-77 சிவானந்தத்தின் வைராக்கியம் (இரண்டாம் பகுதி)

மனச்சுழல்

[ஞாயிறு தோறும் காலை மணி 10.30க்கு ஒலிபரப்பாகிறது]

29-5-77 மெ. அறிவானந்தன் எழுதிய நெருப்பு வலை - பணக்காரர் ஒருவர் திடீரென்று மர்மமாகக் கொலைசெய்யப்படுகிருர். யார், எதற்காகக் கொலைசெய்தார்கள் என்பதைக் கண்டுபிடிக்க முயலும் ஒரு இன்ஸ்பெக்டர் ..இது தான் கதை.

5-6-77 உன் சித்திரத்தை நான் அழிப்பேன்! என் சித்தத்தை யார் அழிப்பார்-கோர உருவங் கொண்ட ஓர் ஓவியன், அவனின் ஓவியங்களில் மனதைப் பறிகொடுக்கும் ஓர் அழகி. ஓவியன்மீது அழகிக்குக் காதல் பிறக்கிறது, அவன் ஏற்க மறுக்கிறன். தீ விபத்தில் அழகி அழகை இழக்கிருள். இப்போதாவது ஏற்றுக்கொள்வாரா என அவனிடம் ஓடுகிருள். அவனே...? இதனை எழுதியவர் ஜி.கண்மணி கிருஷ்ணன்

12-6-77 செந்தாமரை - இரவு விடுதியில் ஆடிப் பிழைக்கும் அழகி அனிதாவை அடைய விரும்புகிருன் விமல். அதற்குக் குறுக்கே நிற்கும் தன் மனைவி செந்தாமரையைக் கொலைசெய்துதோட்டத்தில் புதைக்கிருன். அந்தத் தோட்டத்தில் வளர்ந்த சில பூச்செடிகள் விமலைச் சுலபமாக நீதியின் முன் நிறுத்தி விடுகின்றன! எப்படி....? எஸ். வைரக் கண்ணு எழுதிய இதில் விமலாக வி. ஐ. ஜோசப், செந்தாமரையாக சிவகாமி மாதவன் ஆகியோர் நடிக்கின்றனர். தயாரிப்பு ஏ. பீட்டர்.

இஸ்லாமிய நாடகம்

26-5-77 வியாழன் இரவு 8-30க்கு தலைநகர் எம். பி. நூர் முகமது எழுதிய என் மருமகள் எனும் 25 நிமிட நாடகம் ஒலியேறும்.

சிரிப்புச் சித்திரம்

[சனிக்கிழமை தோறும் இரவு மணி 7.15க்கு ஒலிபரப்பாகிறது]

4-6-77 கமான் கல்யாணி எஸ். வைரக்கண்ணு எழுதிய இதில் செந்திலாதிபன், புஷ்பாதேவி, ரவி, சுசிலா ஆகியோர் நடிக்கின்றனர். தயாரிப்பு ஜே. கே. ராஜம்மா.

11-6-77 எமன் தர்பார் எழுதியவர் எஸ். கிருஷ்ணம்மா.

சிறுகதை

(ஞாயிறுதோறும் இரவுமணி 8-45க்கு ஒலிபரப்பாகிறது)

5-6-77 பெட்டாலிங் ஜெயா மகுடபதி எழுதிய பயணம் முடிந்தது- பார்வை வந்தது.

12-6-77 தலைநகர் தோ. மாணிக்கம் எழுதிய அன்னக்கிளி.

ஒலிச்சித்திரம்

(சனிக்கிழமை தோறும் மாலை மணி 6-31க்கு ஒலிபரப்பாகிறது.


28-5-77, 4-6-77 ஆகிய நாட்களில் ஜெய்சங்கர், கே.ஆர். விஜயா நடித்த மேயர் மீனுட்சி இரு பகுதிகளாக ஒலியேறும்.

11-6-77, 18-6-77 ஆகிய நாட்களில் முத்துராமன், ஜெய்கணேஷ், சுஜாதா நடித்த முத்தான முத்தல்லவோ இரு பகுதிகளாக ஒலியேறும்.

கண்ணோட்டம்

கடந்த 8-5-77 காலை 10 30க்கு மலேசிய வானொலியில் ஒலியேறிய "ஓநாய்" என்ற மனச்சுழல் நாடகத்தைக் கேட்டவர்களில் நானும் ஒருவன். மர்ம நாடகமான இதனைத் தயாரிப்பாளர் சற்றுக் கவனமெடுத்து நல்ல முறையில் தயாரித்திருக்கலாம். நாடகத்திற்கு உயிரோட்டமான இசையும் ஒலியும் ஓரிடத்தில்கூட பொருத்தமாக அமையவில்லை. தயாரிப்பாளர் இன்னும் சற்றுக்கவனம் செலுத்தக்கூடாதா?

—இரா. மாணிக்கம், கோலாலம்பூர்



தேவையான பொருட்கள்

கோழி - 3 கட்டி
பூண்டு – 10
சிறிய வெங்காயம் - 6
பழமிளகாய் - 4
இஞ்சி - 2 அங்குலம்
கறிவேப்பிலை-தேவையான அளவு
சமையலெண்ணெய் - 3 மேசைக்கரண்டி.
உப்பு - தேவையான அளவு

செய்யும்முறை:

1. கோழியைச் சுத்தப்படுத்தி நடுத்தரமான துண்டுகளாக வெட்டிக் கொள்ளவும்.

2. பூண்டு, சிறிய வெங்காயம், மிளகாய், கறிவேப்பிலை, இஞ்சி ஆகியவற்றைத் தனித்தனியாக அரைத்து அல்லது இடித்துக்கொள்ளவும்.

3. வாணலியில் எண்ணெய் சுடேறியவுடன் வெட்டப்பட்ட கோழித் துண்டுகளைக் கொட்டி உப்பைச் சேர்த்துக் கிண்டிக் கொண்டே இருக்கவும். நன்கு வெந்து, நீர் சுண்டி, எண்ணெய் மட்டும் தனியே பிரிந்தவுடன் வெந்ததை எடுத்துப் பாத்திரத்தில் வைத்துக் கொள்ளவும்.

4. வாணலியில் எஞ்சியுள்ள எண்ணெய்யில் அரைத்த பூண்டு, வெங்காயம், மிளகாய், கறிவேப்பிலை, இஞ்சி ஆகியவற்றைத் தனித் தனியே இதே வரிசைக்கிரமத்தில் போட்டுக் கிளறவும். நல்ல மணம் வந்தவுடன் வேகவைத்த கோழித் துண்டுகளை இந்தக் கலவையில் கொட்டி இரண்டறக் கலக்கும்படி ஏழெட்டு நிமிடங்கள் கிண்டி இறக்கி விடவும்.

குறிப்பு: பெரிய வெங்காயம், பழமிளகாய், தக்காளிப்பழம், வெள்ளரிக்காய், வெங்காயத்தாள், சாலட் கீரை என்று விருப்பமான வற்றை மெல்லியதாக அரிந்து வறுவலின் மேலே தூவி அழகு படுத்தலாம்.

–மு. நிர்மலா, தலைநகர்

மடிப்பு

ஊ.ஆ.அன்பானந்தன்

காட்சி: 1

(வீட்டினுள் நுழைந்த சீராளனுக்கு ஒன்றையும் புரிந்துகொள்ள முடியவில்லை ஒரே குழப்பம். சிரித்தபடி வரவேற்கும் சிந்தாமணியின் முகம் சிவந்திருந்தது. கண்கள் நீர், கக்கிக் களைத்து வீங்கி இருந்தது.)

சீராளன்: சிந்தாமணி, என்ன நடந்தது? ஏன் உன் முகம் இப்படி அலங்கோலமாக இருக்கு?

சிந்தாமணி: (நிமிர்ந்து பார்க்கிருள்; கண்களிலிருந்து நீர்த்துளிகள் பொலபொலவென உதிர்கின்றன)

சீரா: (அன்புடன் அணைத்துக் கொண்டு) இந்தா பாரு, காரணத்தைச் சொல்லாம கண்கலங்கின எனக்கெப்படித் தெரியும், அழாதே! நடந்ததைச் சொல்லு.

சிந்தா: அத்தான்! உங்கம்மா என்னெ மலடி மலடின்னு சொல்ருங்க... (நிறைவு பெறவில்லை. அழுகை வீறிட்டது.)

சீரா: என்ன! அம்மாவா அப்படிச் சொன்னுங்க? ஏன் எதற்காக?

சிந்தா: கல்யாணமாகி அஞ்சு வருஷமாகியும் ஒருகுழந்தைஇல்லே. குலம் விளங்க ஒரு வாரிசு இல்லேன்னு...

சீரா: (இடையில், பாய்ந்து எரிச்சல் மீறிவர) போதும்! குலம்; வாரிசு! சீ! சீ! வயதுதான் கூடிக்கிட்டே இருக்கே தவிர மனம் என்னவோ மரத்துப் போய்தான் கிடக்குது. ஆமா, அதுவும் உண்மை தானே! மரம் வளர வளர முரடு தட்டித்தானே போகும். சரி, கவலைப்படாதே! என்ன செய்யிறது... உன் தலையெழுத்தும் என் தலை எழுத்தும் ஒன்னே மாதிரி ஆகிப் போச்சு. அதுக்கு யாரக் குறை சொல்றது... கும்புடுறியே உஞ்சாமி அவன் கிட்ட போய்ச்சொல்லு... ஏண்டா இப்படி எழுதுனே, மகா சாமின்னு...

(சட்டையைக் கழற்றி விட்டெறிந்துவிட்டு குளிக்கப் போய் விட்டான். விளக்கம் புரியாத சிறு பிள்ளையைப் போல சிந்தாமணி ஓடிப்போய்ப் படுக்கையில் விழுந்தாள். சற்றைக்கெல்லாம் குளித்து விட்டு வந்தான் சீராளன். அவன் வந்ததை அறிந்ததும் சிந்தாமணி முகத்தைத் துடைத்துக்கொண்டு அடுக்களை புகுந்தாள்)

[தனிமையில் சலிப்போடு] சே! சே! இந்த ஒன்னரை நாளும் உயிரும் போய்டும். எல்லாரும் சனிக்கிழமை, ஞாயிற்றுக்கிழமைன்னு மகிழ்ச்சியா இருப்பாங்க. இந்த விடா; போர்க்களம் தான். கல்யாணம் முடிஞ்ச ரெண்டு வருசத்துல இருந்து இன்னே வரைக்கும் ஒரே போராட்டம். மகா குடும்பம், கல்யாணம், பொஞ்சாதி, தாய், விடு, மண்ணுக்கட்டி! [என்று எரிச்சலோடு சட்டையைபோட்டுக்கொண்டிருந்தான்]

[சிந்தாமணி அருகில் வந்து]

சிந்தா: வாங்க, சாப்பாடு தயாரா இருக்கு! வந்து சாப்பிடுங்க!

சீராள: சாப்பாடா? மகா சாப்பாடு; எதுக்கு? சண்டைக் களத்துல சோறுதிங்கிற மாதிரி! வேணும் கொண்டுபோய் நாய்க்காவது கொட்டு! அந்த நாயாவது இந்த மாதிரி சின்னத்தனமான பிரச்னைங்க இல்லாம நல்லா வாழுது.

(வெளியே போயிருந்த சீராளனின் தாய் மங்களம் வந்து கொண்டே]

மங்களம்: என்னடா! எத நாய்க்குக் கொட்டச் சொல்றே! ஓகோ! அவ்வளவு தூரத்துக்கு வந்துட்டியா? டேய் சீராளா! சப்பாங்காரங்க காலத்துல பிடி அரிசிகூட இல்லாம கிழங்கச் சீவி சோருக்கித் தின்னமே, மறந்துட்டியா?

[தாய் மங்களத்தோடு வந்த சங்கரி தொடர்ந்து குரல் கொடுத்தாள்]

சங்கரி: அத எங்கே தம்பி நினைக்கிறன். அவன் தான் மனைவி மயக்கத்தில இருக்கிறனே! பழயத கொஞ்சம் நினைச்சுப் பார்டா தம்பி!

சீராளன்: சரி... சரி போதும்! வரும்போதே வம்பு பண்ணிக்கிட்டே வாங்க! நானும் உங்க வயித்துல வந்து பொறந்தேனே!

சங்கரி: கேட்டியாம்மா, தம்பி என்ன பேசுறுன்னு!

மங்கள: அவனுடி பேசுறுன், அவனுக்கு என்னுடி தெரியும் சின்னப்புள்ள! புள்ளையப் பத்தி தாய் எனக்குத்தான் தெரியும்! எல்லாம் அவ பண்ற வேலை.

சங்கரி: ஆமா! ஆமா! தம்பி எதுத்துப் பேசுறவனு? பார்க்கிறதுக்குத்தான் உன் மருமவ பூனை... பண்றதோ அப்பப்பா...!

சீராள: அக்கா! நீங்களும் பெண்கள்தானே! உங்களைப் போல ஒரு பெண்ணை இப்படிக் கொடுமைப்படுத்த உங்களுக்கு எப்படி மனம் துணியுது!

மங்கள: டேய்! உன்னத் தாண்டா கேட்கிறேன்! நான் சொல்றதைக் கொஞ்சமாவது அவ மதிச்சிருந்தாள்னு அவ உன் ரெண்டாவது கலியாணத்துக்கு ஒத்துக்கிட்டிருப்பாள்ல!

சங்கரி: கல்யாணம் பண்ணி அஞ்சு வருசமாச்சு! இன்னும் ஒரு புழுபூச்சி கூட இல்லைன்னு வாரிசில்லாத இந்த குடும்பம் என்னுகிறது?

சீராள: ஏங்கா; நான்தான் கேட்கிறேன், கோவிச்சுக்காதிங்க! அம்மா பெரியவங்க! நீங்களும் படிச்சவங்க! விவரம் தெரிஞ்சவங்க! வாரிசு...வாரிசுங்கிறீங்களே! வாரிசுகளின் குடும்பங்க மட்டும் உருப்பட்டுட்டுதா? நல்லா யோசிச்சுப் பேசுங்க!

மங்கள: டேய்! நல்லா இருக்கோ இல்லையோங்கிற கேள்வி இல்லடா! அடையாளத்துக்கு ஒரு மரக்கட்டையாவது இருக்கணும்டா, அதைத்தான் சொல்றேன்.

சீராள: மரக்கட்ட பரவாயில்லைதான், அடுப்புக்காவது உதவும்! எதுக்கும் உதவாம கஞ்சா, சண்டை, வம்பு, ஜெயிலு, குடி, அது இதுன்னு சுத்தி மானத்தை வாங்கிச் செலவுகளையும் வைக்கிருனே, அப்படி வாரிசும் வாரிசு தானு? தங்கச்சி புள்ள தம் புள்ளையா இருந்தா தவத்துக்கு ஏன் போகணும்பீங்களே, அப்படி ஒரு புள்ளைய எடுத்துக்கவேண்டியதுதானே!

சங்க: டேய்! அது கிடக்கட்டும்டா, என் வீட்டு விசயம் வேறடா! அவன் அப்பன் வழி அப்படி இருக்கான். உன் வழியில நல்ல வாரிசு வரலாமில்லியா?

சீராள: சரி! குழந்தை இல்லாததுக்கு எது காரணம் அதத்தான் சொல்லுங்களேன்!

மங்கள: அதுக்கு உன் பத்தினி...

சீராள: போதும்...ஏன்! குறை எங்கிட்டேயே இருந்தா...

சங்: டேய்! என்னடா சின்னப்புள்ளை மாதிரி பேசுறே! நம்ம குடும்பத்துல அப்படி இருக்க வழியில்லேடா! எல்லாருமே குடும்பம் நிறைய குழந்தை குட்டிகளோடத்தாண்டா இருக்கிருங்க!

சீரா: அவங்க விட்டிலயும் அப்படித்தானே இருக்கிருங்க...

மங்கள: டேய்! உனக்குப் பொஞ்சாதி மயக்கம் வந்திருக்கு! ஒழுங்கா சொல்றதைக் கேளு...

சீராள: ஏம்மா! அப்புறம் ஏன் ஒரு குழந்தை தர முடியாதவளா பார்த்து எனக்குக் கட்டிவச்சிங்க?

மங்கள: அப்பத் தெரியாம கட்டி வச்ச நாங்கதாண்டா இதையும் சொல்றோம், கேளு!

சீராள: அப்படின்னு சரிம்மா,

இப்பவே நான் கட்டின தாலிய அறுத்து வெளியே விரட்டிடுறேன்! ஏய்... சிந்தாமணி, வா இங்கே! தாலிய கொண்டா!

(ஆத்திரத்தோடு அவளை இழுத்து தாலிக்கயிற்றில் கைவைக்கிறான்)

மங்களம்: [பதறிப்போய்] டேய் மடையா! என்னடா காரியம் செய்யப்போறே! அது தாலிடா! கண்ண மூடி அறுத்தெறிய அது என்ன சாதாரணக் கயிறு?

(பக்கத்து விட்டுப் பெரியவர் சாமிநாதன் நிலைமை முற்றிப் போனதை அறிந்து ஓடிவருகிறார்]

சாமி: தம்பி... தம்பி! என்ன காரியம்பா செய்யப்போறே!

சிரா: ஏய்யா! நீங்க சொல்லுங்க! இவங்க கட்டி வச்ச பொண்ணு என்பதனுல, இன்னொரு மாற்றம் சொல்றாங்க! நான் கட்டின தாலிங்கிறதுனுல நான் அறுக்கப் போறேன்.

சாமி: சிவசிவா! என்னப்பா பேச்சு பேசுறீங்க! [மங்களத்தைப் பார்த்து] ஏம்மா; நீங்க பெரியவங்கதானே; ஒரு தாயில்லாப் பொண்ண ஏன் இப்படி படாதபாடு படுத்துறீங்க? குழந்தை வர்றது யார் கையில இருக்கு? இதுவும் அவன் திருவிளையாடல்தானேம்மா! தம்பி, சிந்தாமணிய விடப்பா! அம்மா நீ போம்மா!

[நீரில் விழ்ந்த துணிபோல நனைந்துபோயிருந்த சிந்தாமணி மூலையில் போய் ஒடுங்கினுள்]

சரி; தம்பி! நான் சொல்றேன் கேளுங்க! உங்கம்மாவுக்கு நிம்மதி ஏற்படணும்னு ரெண்டு பேரும் போய் டாக்டரப் பாருங்க! யாரு கிட்ட குறை இருக்குதுன்னு தெரிஞ்சபிறகு மத்ததப் பேசிக்கலாம், சரிதானேம்மா!

மங்கள: இம்... [பெருமூச்சு விட்டபடி] எனக்கென்னமோ இதெல்லாம் சரியாப் படலே! சரி... சரி... அதயும் பார்ப்போம்!

சங்கரி: ஆமாம்மா! அப்ப தெரியும் உண்மை! போற அன்னிக்கு நானும் வருவேன்!

சிரா: சரி, நாளைக்கே போவோம்!

சங்கரி: அப்படி குறை உங்கிட்டே இல்லேன்னு தெரிஞ்சதோ அப்புறம் எங்க பேச்சத்தான் கேக்கணும்!

சிரா: சரி! அப்படியே செய்யிறேன்! [என்று சொல்லியவன் வெளியே கிளம்பினுன்]

மங்கள: எங்கேடா போற; போ! சோறு காத்துக் கிடக்குதல்ல, சாப்பிடு! சோத்துக்கு நாமதாண்டா காத்துக் கிடக்கணும். சோறு நமக்காகக் காத்துக் கிடக்காது, போடா!

[முகத்தில் கோடுகள் படைஎடுக்க மருமகளை நோக்கி] இந்தாம்மா சிந்தாமணி, போ... புருசனுக்கு சோத்தக் கொடு. போம்மா அதோட என் மவளுக்கும் சோறு போட்டு வை.

சங்கரி: இல்லேம்மா! நானே போட்டுக்கிறேன்.

[கைவிசிக்கொண்டு முன்னே நடக்கிறள். சிந்தாமணி முறித்துப் போட்ட செடிபோல துவண்டு சென்றுள். சிராளன் ஒரு பெருமூச்சைவிட்டு சாப்பிடச் சென்றான்]

[திரை விழுகிறது]

காட்சி 2.

[மங்களம் வெற்றிலை இடித்துக் கொண்டிருக்கிறள். சிராளன், சிந்தாமணி, சங்கரி மூவரும் களைப்போடு வருகின்றனர். சிராளன் முகத்தில் மகிழ்ச்சிக்கோடுகள் மாலை தொடுத்திருந்தன. சங்கரியின் முகத்தில் சோகத்தின் வடுக்கள் தோட்டம் போட்டிருந்தன. *சிந்தாமணி முற்றுந்துறந்த துறவியைப்போல அவர்கள் பின்னே தரையையே பார்த்துக்கொண்டு வந்தாள்]

[வாயில் வைத்துத் திணித்திருந்த வெற்றிலைகவை புறத்தில் ஒதுக்கிக்கொண்டுபார்த்து] என்னடி சங்கரி! ஏண்டி எழவு விழுந்த விட்டுக்காரி மாதிரி வர்றே! டாக்டரு என்ன சொன்னுன்?


சங்கரி: [சலிப்புஇழைந்தோட] ஆங்... சொன்னுன்...

மங்கள: ஏண்டி டாக்டரு இல்லையா!

சங்கரி: இருந்தாரு! அவரும் சோதிச்சுட்டு சொன்னுரு...

மங்கள: அதான்......என்னுடி சொன்னுரு... அதத்தான் சொல்லேன்.

சங்கரி: கொற உன் புள்ள கிட்டதாணும்...



மங்களா: என்னது... எவண்டி சொன்னுன்... அவன் என்ன டாக்டருதானுடி! என் புள்ளேயப்பத்தி எனக்குத் தெரியாம அவனுக்கென்னடி தெரியும்? ஏய், இங்க பாரு, உன் தம்பி இருக்கானே, டாக்டருகிட்ட சொல்லி அப்படிச் சொல்லச் சொல்லியிருப்பாண்டி அப்படிப்பட்டவன்தான் இவன்.

சங்கரி: இல்லேம்மா! நானே டாக்டர கேட்டேனே... சின்னப் புள்ளேயில தாளம்மா வாச்சதனுல பாதிச்சுப் போச்சாம்மா...

மங்களா: என்னுடி, குழந்தைங்க கிட்ட அம்மா வந்து விளேயாடிட்டுப் போனுஎப்படிஇப்படிஆகும், கேவுர்ல நெய் வடியுதுன்னு கேப்பாருக்கு மதி எங்க போச்சு? ஏண்டி இத நீ நம்புறியா? அந்த டாக்டரு ஒன்னும் தெரியாதப் பய போல இருக்கு இந்த காலத்து டாக்டருங்கதான் என்ன விசாதின்னு நம்பள கேட்டு எழுதுருனேடி!

சீராளா: அம்மா ஏம்மா இப்படி ஒரே அடியா எல்லாரையும் புறக்கணிக்கிறீங்க! டாக்டர் இந்தத் துறையில ஸ்பெஷலிஸ்டும்மா! அவரே சோதிச்சுச் சொன்ன பிறகு!

மங்களா: அதெல்லாம் கிடையாதுடா! நீ உம் பொஞ்சாதிக்காக இப்படி எல்லாம் கத கட்டுரே!

(பெரியவர் வருகிருர்)

சாமி: என்ன தம்பி! என்னுச்சு...

மங்களா: டாக்டரு சொல்விட்டாராம்... ... தாளம்மா வந்துச்சாம், அதுனுல இவனுக்கு இல்லாமப் போச்சாம்... என்னய்யா கதையா இருக்கு?

சாமி: (வியப்புமேலிட) அப்படியா...? ஏம்மா, அம்மை வந்துச்சா!

மங்களா: ரெண்டு தடவை வந்திருக்குதான்! ஆனு...

சாமி: அதானே எனக்கும் சந்தேகமா இருக்கு...... அம்மை வந்தான்னு அதனுல பாதிப்பா! ஆயிரம் கண்ணுடைய மாரியம்மாளா இப்படி ஒரு தீமையை கொழந்தைக்கு ஏற்படுத்துவா. இருக்காது இத நானும் நம்பலம்மா! ஆனுலும்...

மங்களா: ஆனுலும் என்னய்யா அதான் போய்டுச்சே! இப்ப என்ன சொல்றீங்க...

சாமி: என்ன சொல்லச் சொல்றீங்க... எனக்குத் தெரிஞ்சவரைக்கும் தம்பியும் கெட்டுப்போன பிள்ளே இல்ல!

மங்களா: இம்... என்னுடா சொல்றே!

சீராளா: அம்மா! என்னம்மா இது, இனி நான் எப்படித்தான் உங்களே எல்லாம் நம்ப வைக்கிறது. ஏங்க பெரியவரே, நீங்களும் அவங்களோட சேர்ந்துட்டீங்க!

சாமி: இல்ல தம்பி! தாளம்மை யாலத்தான் குழந்தைபலன் இல்லாமப் போச்சுங்கிறத நம்ப முடியலேப்பா! மத்தபடி ரெண்டாவது கலியாணத்தை நான் வரவேற்கல...

ஆடை

அண்ணல் நபி [ஸல்] அவர்கள் ஒரு போர்வையைப் போர்த்திக் கொண்டு தொழுதனர். அதில் (செடி) கொடி, இலே, பூ ஆகியவற்றின் கோலங்கள் இடப்பட்டிருந்தன. அப்பொழுது அக்கோலங்களின் மீது அவர்களின் பார்வை சென்றுவிட்டது. எனவே அவர்கள், "இந்தப் போர்வையை எடுத்துச் சென்று அபூஜஹீம் என்பாரிடம் கொடுத்துவிட்டுக் கம்பளி ஒன்றை அவரிடமிருந்து எனக்கு வாங்கி வாருங்கள். [ஏனெனில் அவர் இதனே எனக்கு அன்பளிப்பாகத் தந்திருப்பதால் அதனே நான் திருப்பிக் கொடுப்பதன் காரணமாக அவருடைய மனம் நோவக்கூடும். எனவே அவரிடமிருந்து அதற்குப் பதிலாக ஒரு கம்பளியை வாங்கி வாருங்கள்]. சற்றுமுன் இது என் கவனத்தைத் தொழுகையைவிட்டும் தன்பால் ஈர்த்துவிட்டது" என்று கூறினர்.

—அல்ஹதீஸ்

சங்கரி: நீங்க என்னய்யா யாவர வேற்கிறது, வேணுங்கிறது! இது எங்க வீட்டு விசயம்... நீங்க தலையிட வேணும், போயிட்டு வாங்க!

[முகம் சுருங்கிப்போன பெரியவர்]

சாமி: சரிதாம்மா! எனக்கென்ன வந்தது? எந்தக்காலத்துலயும் நல்லத யாருதான் கேப்பா! நான் வர்ரேன்.

சீராளா: அய்யா கொஞ்சம் நில்லுங்க! இதயும் கேட்டுட்டுப் போங்க! அம்மா! நான் இரண்டாவது கல்யாணம் பண்ணியும் பிள்ளே இல்லேன்னு...!

மங்களா: அதெப்படிடா இல்லாமப் போகும்?

சீராளா: அப்படி இல்லாமப் போனு?

[இடையில் ஆவேசமாகப் புகுந்தாள் சிந்தாமணி]

சிந்தா: அத்தான்! ஏன் தகராறு? நான் பொறந்ததே பாவம்! இதுல எனக்குன்னு என்ன இருக்கு? அத்த விருப்பப்படியே நீங்க ரெண்டாவது கல்யாணம் பண்ணிக்கிங்க! நான் சம்மதிக்கிறேன். அதுக்குப் பிறகாவது என்னே நிம்மதியா விட்டா போதும். ஏன் என்னுல வீண் சண்டை, வம்பு!

[வேதனேகளேக் கொட்டிவிட்டு பின்வாங்கி ஓடிவிட்டாள் சிந்தாமணி. சற்று நேரம் அதிர்ச்சி கலந்த அமைதிக்குப் பிறகு]

மங்களா: அப்புறம் என்னுடா! அவளே ஒப்புக் கொண்டுட்டாளே!

சீராளா: அம்மா! அவ ஒப்புக் கொள்றது இருக்கட்டும், அப்படி குழந்தை இல்லாட்டி...

சங்கரி: உன் விருப்பம் போல செஞ்சுக்க!

மங்களா: ஆமாடா! அப்படியே செஞ்சுக்க!

சீராளா: சரிதானே! சத்தியமா ரெண்டு வருஷத்துக்குப் பிறகு என் விருப்பப்படியே செஞ்சுக்குவேன்! சரிதானே!

மங்களா: சரி;

சீராளா: பெரியவரே!

மங்களா: சரின்னே சொல்லுங்களேன்!

சாமி: சரிப்பா...

சீராளா: சரி... கல்யாணத்துக்கு நான் சம்மதிக்கிறேன்.

(உள்ளே நுழைகிருன்)

(திரை விழுகிறது)

காட்சி 3

[திருமணம் முடிந்து ஆண்டுகள் இரண்டாகிவிட்டன. குழந்தை இல்லே. மங்களத்தம்மாள் தனது இரண்டாவது மருமகள் விமலாவை அழைத்து]

மங்களா: விமலா! என்னம்மா கல்யாணமாகி வருசம் ரெண்டாச்சு. சும்மாவே இருக்கியே!

விமலா: என்ன மாமி செய்யச் சொல்றீங்க! காரணம் என்னன்னு எனக்கென்ன தெரியும்?

மங்களா: என்னுடி இது கூத்தா கிடக்குது! அவதான் கொடி வேறன்னு நினேச்சு, ஒரே கொடியில வந்தவ நீயின்னு உன்னேக்கட்டி வச்சேன்! ஒன்னும் காணலேயே!

விமலா: அம்மாவும், அப்பாவுங்கூட ரொம்ப வருத்தமாத்தான் இருக்காங்க! உங்க பேச்ச கேட்டு பொண்ணு வாழ்க்கை கெட்டுப் போச்சேன்னு வருத்தப் படறுங்க.

மங்களா: நான் என்னுடி பண்ணட்டும்! மந்திரம் மாயம் சாமி அது இதுன்னு கூடப் பார்த்தாச்சு! அந்த பத்துமலேயான்கூட கண்ணு திறக்கமாட்டேங்குறனே!

[எதிர்பாராது வந்துவிட்ட சீராளன் இதைக் கேட்டு விட்டான்]

சீராளா: அம்மா! நான் நினேக்கிறேன்; இவளுக்கும் குழந்தை இல்லாததுனுல, மூன்றுந்தாரமாஒருத்திய கட்டி வைக்க வேண்டியதுதானே!

மங்களா: என்னடா இது கூத்து? ரெண்டு கல்யாணமே இப்படி இருக்கு, மூணாவதுன்னு வேறயா! உனக்கென்னடா பயித்தியமா?

விமலா: அதெல்லாமில்ல மாமி! அந்த அக்கா சொல்லிக் கொடுத்துத்தான் அவரு இப்படிப் பேசுருரு!

சீராளா: விமலா நீ பேசாதே! அவங்களோட சேர்ந்துக்கிட்டு நீயும் அவளக் கொடுமை பண்ணத்

தொடங்கிட்டே, எனக்குத்தெரியும். இந்தா பாரு. வீணு உன் வாழ்க்கையை வீணுக்கிக்காதே!

விமலா: கேட்டீங்களா மாமி! அதெல்லாம் அந்த அக்கா பாடம் தான்.

மங்களா: ஆமா! ஆமா! அவ ஏதோ மந்திரம் பண்ணித்தான் இப்படி ஆகிப்போச்சு! இல்லாட்டி எப்படி குழந்தை இல்லாமப் போகும்? எதுக்கும் அவ சிண்ட புடிச்சி அறுத்தா எல்லாம் சரியாப் போயிடும். உனக்கும் நல்லது வந்துசேரும்.

சீராளா: அம்மா! போதும்! அவள பாத்திங்களா? எப்படியிருந்தவ! உங்க கொடுமையால துரும்பாப் போய்ட்டா! இன்னுமா அவளக் கொல்லப் போறீங்க!

மங்களா: ஏண்டா, திங்க வேணும்னு சொன்னேனு!

சீராளா: அதான் ரெண்டாவது கல்யாணம் பண்ணிப் பாதி கொன்னுப்புட்டீங்களே அவள! இன்னும் என்ன இருக்கு?

மங்களா: அவ இந்த விட்டுல இல்லாமப் போனுத்கான், இந்த விட்டுல ஒரு புத்ரபாக்கியம் கிடைக்கும். அவ ஒரு தரித்திரியண்டா! தரித்திரியம்.

சீராளா: ஓ, அவ்வளவுக்கு வந்துடுச்சா!

சங்கரி: [வந்து கொண்டே] சண்டையா! நான் போனுலும் சண்டை குறையிறது இல்லே!

சீராளா: சே! சே! [உரத்து] பெரியவரே, கொஞ்சம் வாங்க!

சாமி: [வந்து கொண்டே] என்ன தம்பி!

சீராளா: அய்யா, நினைவிருக்கா, ரெண்டு வருசத்துக்கு முந்தி நான் என்னு சொன்னேன்னு?

சாமி: என்னு தம்பி?

சீராளா: மறந்துட்டீங்களா! ஆனு நான் மறக்கலே! இந்த வெந்து போன நெஞ்சுலே ஆணி அடிச்ச மாதிரி இருக்கு. அதான்யா ரெண்டாவது கல்யாணம் பண்ணியும் பிள்ளை இல்லேன்னு ரெண்டு வருசத்துக்குப் பிறகு நான் எதையும் செஞ்சுக்கு வேன்னு சொன்னேனே!

சாமி: ஆமா! அதுக்கு என்ன...

மங்களா: ஆமா! அதுக்கு என்னடா பண்ணப் போறே...!

சீராளா: சொல்றேம்மா! நான் உங்க பிள்ளைதான். உங்களுக்கு நான் கட்டுப்படத்தான் வேணும். ஆனு காலாகாலமும் இப்படியே எத்தனை பொண்ணுங்க வேதனை படறது? எத்தனை அநியாயங்களைத் தொடர விடறது?

சங்கரி: என்னடா சொல்றே? விளக்கமா சொல்லாம நீ பாட்டுக்குப் பேசுற?

சீராளா: பிள்ளை தர முடியாத இந்த ரெண்டாவது மனைவி விமலாவை நான் விவாகரத்து செய்யப் போறேன்.

விமலா: அத்தான்!

சங்கரி: என்னடா சொல்றே!

மங்களா: அடப்பாவிப் பிள்ளையே! பாத்திங்களாய்யா என்னு சொல்றுன்னு! அவ அப்பன்காரன் சும்மா விட்டுடுவானு!

சீராளா: பரிசத்தன்னைக்கே பேசிப்புட்டேனே! அப்படியே மீறி எது வந்தாலும் எனக்குக் கவலையில்லே!

சங்கரி: தம்பி! விவாகரத்து சும்மாவா, ஜீவனும்சம் தரணும்!

சீராளா: என்னப்பெத்த அம்மா செஞ்ச தப்புக்கு தண்டனை கட்டிட்டுப் போறேன்.

மங்களா: டேய்; தாலி கட்டுன பொஞ்சாதிடா!

சீராளா: தாலி தானே! அதுக்கென்னம்மா மதிப்புஇருக்கு? மொத மனைவி கழுத்துல கட்டின தாலிக்கே நீங்க மதிப்பளிக்கலயே? இதுக்கு என்ன மதிப்புக் கொடுக்கவேண்டிக் கிடக்கு?

சாமி: தம்பி, சமூகம் உன்னை எப்படி மதிக்கும்?

சீராளா: இம்! இந்த ஏழு வருசமா நானும் சிந்தாமணியும் பட்டுவர்ரப் பாட்டப்பத்தி சமூகத்தால என்ன செய்ய முடிஞ்சது? ரெண்டாவது கல்யாணத்த வந்து தடுத்துச்சா?

மங்களா: டேய்! இது பாவம்டா

சீராளா: நான்அந்தப்பாவத்தைத் துணிந்து செய்யப்போறேன். சிந்தாமணி, வா... நாம தனியா போய் வாழலாம்!

சிந்தா: அத்தான்! இது சரியில்லே! விமலாவும் என்னைப்போல ஒரு பொண்ணு! அவ கண் கலங்கினு நல்லா இருக்காது!

சீராளா: இப்பவும் நாம நல்லா இருந்துடல! நான் எதப் பத்தியும் கவலப்படல! எனக்கு ஒரே மனைவி தான் வேணும். வாரிசு தருவாள்னு கட்டி வச்சாங்களே, இப்ப அவளே அவங்களுக்கு வாரிசு! நமக்கு வாரிசு உலகத்துல எத்தனையோ இருக்கு! அதுல ஒன்னு நமக்கும் கடைசித் தண்ணி ஊத்தும். வா! நம்ம சொன்னத மதிக்காதவங்கள, ஒரு பெண்ணின் வேதனையை மதிக்காதவங்கள, ஒரு உண்மையை மதிக்காதவங்கள நாமும் மதிக்கத் தேவை இல்லே! வா, போகலாம்!

[சிந்தாமணியை இழுத்துக் கொண்டு வெளியேறுகிறுன் சீராளன். மற்றவர்கள் திகைத்து நிற்கின்றனர்.]

(திரை விழுகிறது)

எங்கள் திருமணம்

புது மணமக்களே, உங்களைக் கண்ணுரக் கண்டு களிக்கவும், மானசிகமாக வாழ்த்துக் கூறவும், புதிய சமுதாயத்தின் பல்லாயிரக்கணக்கான வாசகர்கள் ஆவலாக உள்ளனர்.

அவர்களின் ஆவலை நிறைவேற்றுவது எங்கள் பொறுப்பு. உங்களுக்கு இது நிச்சயம் விருப்பமாகவும் இருக்கும்.

"போஸ்ட் கார்டு" அளவில் உங்களின் புகைப்படத்தை எங்களுக்கு அனுப்புங்கள். படத்துடன் பிரசுரக் கட்டணமாக வெ. 25யும், திருமண அழைப்பையும் அனுப்பி வைக்க மறந்து விட மாட்டீர்கள் என நம்புகிறேம்.

படங்கள், வண்ணப் படங்களாக இல்லாமல் கறுப்பு வெள்ளையாய் இருப்பது அவசியம்.


உங்களின் திருமணப் படங்கள் எப்படி வெளியிடப்படும் என்பதற்கு எடுத்துக் காட்டாக இதே பக்கத்தில் வெளியிடப்பட்டுள்ள தம்பதிகளின் புகைப் படத்தைக் கவனியுங்கள்.

பிரசுரக் கட்டணம் $25ஐ மணியார்டர்—போஸ்டல் ஆர்டர்—காசோலை—இவை மூன்றில் ஏதாவது ஒன்றை "புதிய சமுதாயம்" எனக் குறிப்பிட்டு அனுப்புங்கள்.

உறையின் இடப்பக்கத்தில் "எங்கள் திருமணம்" என்று குறிப்பிடுங்கள்.

புகைப்படத்தையும் கட்டணத்தையும் அனுப்ப வேண்டிய முகவரி:—

புதிய சமுதாயம்
131, Jalan Tuanku Abdul Rahman, 2nd Floor, Kuala Lumpur.



அண்மையில் கோலாலம்பூரில் மணம் செய்துகொண்ட புதுமண மக்கள் ஜான் பீட்டர்-மார்கரெட் மேரி.